REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஏப்ரல் 6 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN
வரு. 91 இல. 82 | Thursday 06, April, 2023 | 16 பக்கங்கள் | 50/-




உணர்வுகளை தூண்டும் வகையில் சில தரப்பு

## வெடுக்குநாறிமலை விவகாரம் குறித்து அடுத்தவாரம் விரிவான பேச்சு

### அமைச்சர் டக்ளஸிடம் ஜனாதிபதி உறுதியளிப்பு

வவுனியா, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் சிலைகள் உடைக்கப்பட்ட போது ஏற்பட்ட உணர்வுகளை விட, கடந்த சில தினங்களில் வெளிப்படுத்தப்பட்ட சில தரப்புகளின் வியாக்கியானங்



கள் எமக்கு ஏற்படுத்திய உணர்வுகள் ஆழமானவையென, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட ஜனாதிபதி 06

## கலால் தொழிற்சங்கம் இன்று வேலைநிறுத்தத்தில் ஈடுபடாது

### அரசுக்கு கிடைக்கும் சுமார் 100 கோடியை இழக்க தயாரில்லை

இலங்கை கலால் திணைக்கள தொழிற்சங்க ஒன்றியம் இன்று (06) நடத்தவிருந்த ஒரு நாள் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளாதென, கலால் திணைக்கள தொழிற்சங்க ஒன்றியத்தின் செயலாளர் நிரோஷ் ஜயக்கொடி தெரிவித்தார்.



அநுராதபுரத்தில் நேற்று (05) கலால் திணைக்கள 06

நட்டமீட்டும் அரச நிறுவனங்களை

## திறைசேரியூடாக தொடர்ந்தும் பாதுகாக்க முடியாது

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நட்டமீட்டும் அரச நிறுவனங்கள் மற்றும் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாத அரச நிறுவனங்களையும் திறைசேரியால் இனியும் பாதுகாக்க



முடியாதென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நிதியமைச்சில் இடம்பெற்றுள்ள நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் 06

# இலங்கையின் பொருளாதாரம் மிகச் சிறந்த திருப்புமுனையில்

## 2024 இல் மேலும் சிறப்பான முன்னேற்றத்தைக் காணும் என ADB நம்பிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையின் பொருளாதாரம் சிறந்த திருப்புமுனையை நோக்கிய திசையில் நகர்வதாக, ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, அடுத்த வருடத்தில் இலங்கையினுடைய பொருளாதாரத்தின் திருப்புமுனை படிப்படியாக முன்நோக்கிச் செல்லும் என்றும், அந்த வங்கி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு முன்பதாக, இந்த வருடத்தில் பொருளாதார



மந்த நிலை காணப்படுவதாகவும் அதனை நிவர்த்திக்க வேண்டியது அவசியம் என்றும், ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் 7.8 வீதமாகக் காணப்பட்டுள்ள நிலையில்,

**தற்போது காணப்படும் பொருளாதார மந்தநிலையை 2024 க்கு முன்னர் இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும் எனவும் அதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது**

கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டமை மற்றும் வளங்கள் மூலமான பின்னடைவு காரணமாக 2023ஆம் ஆண்டு அது நூற்றுக்கு 3 வீதமாக அமைந்ததாகவும், அந்த வங்கி தெரிவித்துள்ளது.

அந்த வகையில், அடுத்த வருடம் நாட்டின் 06

## கடற்றொழிலாளர் பிரச்சினைகளுக்கு நியாயமாக தீர்வுகள் வழங்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி



புத்தளம், கற்பிட்டி, சிலாபம், நீர்கொழும்பு ஆகிய இடங்களுக்கான விஜயத்தை நேற்று (05) மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிலைமைகளை நேரில் ஆராய்ந்ததுடன், மீனவர்களின் பிரச்சிகைளுக்கு நியாயமான தீர்வை பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்தார். கற்பிட்டி, கண்டக்குளி சென். அந்தனிஸ் கடற்றொழிலாளர் சங்க 06



## வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதில் சில தடங்கல்கள்

### உலக வங்கியின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது

03

## விவசாயிகளுக்கு உரத்துக்கு பதிலாக பணம் வழங்க ஏற்பாடு

### அரசு ரூ. 8.5 பில். நிதி ஒதுக்கீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெரும்போகத்துக்காக அரசாங்கம் உரத்தை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக்காமல், அதற்கு பதிலாக நிவாரணத்திட்டத்தின் கீழ் நிதி உதவியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கமானது உரம் பகிர்ந்தளிப்பு 06

## ஏப்ரல் 15 வரை சூரியன் இலங்கையின் நேர் உச்சியில்

### அதிக வெப்பநிலை நிலவும் என அறிவிப்பு



வளிமண்டலவியல் திணைக்களத்தின் தகவலின் படி, நேற்று முதல் ஏப்ரல் 15ஆம் திகதி வரை சூரியன் இலங்கையின் அட்சரேகைகளுக்கு மேல் நேரடியாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று (05) தல்பே, வலிப்பிட்டிய மற்றும் திஹகொட ஆகிய பிரதேசங்களுக்கு 06

எரிபொருள் விநியோகம், இறக்குமதி, களஞ்சியப்படுத்தல்

## அமெரிக்க, சீன, அவுஸ்திரேலிய நிறுவனங்களுடன் விரைவில் ஒப்பந்தம்

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

நாட்டில் பெற்றோலிய இறக்குமதி, விநியோகம் மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளை சீன, அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்க நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் கையெழுத்திடப்படவுள்



ளதாக, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

சீனாவின் சினொபெக், அவுஸ்திரேலியாவின் யுனைடட் பெற்றோலியம், அமெரிக்காவின் ஆர்.எம்.பார்க்ஸ் ஆகிய 06

## திரிபோஷா போதியளவு கையிருப்பில் உள்ளது

### நிறுவனத் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவிப்பு



பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தேவையான 19 06




வடக்கில் நெடுந்தீவு கடலில்

## 283 கிலோ கஞ்சாவுடன் 3 சந்தேகநபர்கள் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது, 9 கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் மூன்று சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாக, கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். நெடுந்தீவுக் கடற்கரையில் 06

Gas விலைக்குறைப்பையடுத்து

## கொத்து, உணவுப்பொதி விலைகளும் குறைந்தன

### நேற்று நள்ளிரவு முதல் 20 வீதம் குறைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில் சோற்றுப் பார்சல், கொத்துரொட்டி மற்றும் பிறைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக, அகில இலங்கை உணவக உரிமையாளர்களின் 06

ஆலய தீர்த்தோற்சவத்தில் சோகம்

## திருக்குளத்தில் மூழ்கி 5 அர்ச்சகர்கள் பலி

### சென்னை, நங்க நல்லூரில் சம்பவம்

இந்தியாவின் சென்னைக்கு அருகே நங்க நல்லூரிலுள்ள கோவில் திருவிழாவில் 5 அர்ச்சகர்கள் நீரில் மூழ்கி 06



வெல்லவாய தனமல்வில வீதியில்

## 'கெப் ரக' வண்டியுடன் ஆட்டோ நேருக்குநேர் மோதி கோர விபத்து

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ஸ்தலத்திலேயே பலி, 12 வயது சிறுவன் படுகாயம்



வெல்லவாய, நுகாய பிரதேசத்தில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதுடன், 12 வயது சிறுவன் படுகாயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லவாய – தனமல்வில வீதியில் 06



# லேக்ஹவுஸ் நிறுவனத்தை மேம்படுத்துவதில் ஊழியர்களின் பங்களிப்புக்கு மதிப்பளிக்கின்றேன்

## நிறுவனத் தலைவர் அனுஷ பெல்பிட்ட










கொவிட் காலத்தில் போன்று கடந்த காலங்களிலும் நிறுவனத்தை பாதுகாப்பதற்காக ஊழியர்கள் பல விதங்களிலும் அர்ப்பணிப்புகளை செய்துள்ளார்கள். அவர்களின் அர்ப்பணிப்புக்கு தான் மதிப்பளிப்பதாக ஊடக அமைச்சின் செயலாளர் லேக்ஹவுஸ் நிறுவன தலைவருமான அனுஷபெல்பிட்ட நேற்று முன்தினம்(04 ) தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்காக பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டுரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,..

லேக்ஹவுஸ் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள், சீருடை மற்றும் காலணிகளை வழங்குவதற்காக முன்னாள் லேக்ஹவுஸ் தலைவர் சட்டத்தரணி லத்துவஹெட்டி 2002 ஆம் ஆண்டு ஆரம்பித்த சலுகையை சம்பிரதாயபூர்வமாக இவ்வருடமும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



2022 ஆகஸ்ட் மாதம் அளவில் 7 மாதத்திற்கு 292 மில்லியன் ரூபாய் நிறுவனம் நட்டமடைந்திருந்தது. லேக்ஹவுஸ் ஊழியர்கள், விசேடமாக விளம்பர முகாமைத்துவ பிரிவின் ஒத்துழைப்புடன் ஒரு குழுவாக நாம் செப்டம்பர் மாதத்திலிருந்து இலாபம் பெரும் நிலைமைக்கு அதனைக் கொண்டு வந்துள்ளோம். ஆனால் முன்னர் போன்று விற்பனை விளம்பரங்கள் கிடைப்பதில்லை. நாம் கடந்த மாதம் ஓரளவு இலாபம் பெற்றுள்ளோம். இம்மாதம் 15 நாட்களே பணிபுரிய வேண்டியுள்ளது.

ஏனென்றால் விடுமுறை நாட்கள் அதிகமாக உள்ளன. அதனால் குறிப்பிட்ட வருமானத்தை நாம் எவ்வாறாவது பெற்றுக் கொள்ள வேண்டும். உண்மையில் நான் நிர்வாகியாக இம்மாதம் எனது ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளத்தை மாத்திரம் வழங்குவதற்கு எனது மனது இடம் கொடுக்கவில்லை.இம்முறை இந்த புத்தகங்களை வழங்குவதற்கான நிதியையும் சம்பளத்தோடு சேர்த்துக் கொள்வோம் என்ற அடிப்படையிலேயே இருந்தேன்.

ஆனால் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கு அமைய பிள்ளைகளுக்கே புத்தகங்களை பெற்றுக் கொடுக்க முடிவு செய்தேன்.

உங்களின் பெற்றோர் மிகவும் சிரமப்பட்டு சம்பாதித்த பணத்திலேயே இந்த புத்தகங்களை வழங்குகின்றோம். நன்றாக படித்து பெற்றோருக்கு கீழ்ப்படிவுள்ள நாட்டிற்கு நல்ல பிரஜைகளாகுங்கள்.1800 மாணவர்களுக்கு புத்தகப் பொதிகளை வழங்கியுள்ளோம்.

எதிர்காலத்தில் நாடு வழமைக்கு திரும்பவில்லை என்றால் எம்மால் சம்பளத்தை கொடுப்பது கூட சிரமமாகும். கடந்த காலங்களில் வங்கி மிகைப் பற்று மூலமாகவே நிறுவனத்தை நடத்தி வந்தோம். கடந்த எட்டு மாதங்களாக வேறெந்த பத்திரிகைக் காரியாலயங்களும் இலாபம் அடையவில்லை. நாம் ஒரு அணியாக செயல்பட்டதால் இவ்வாறாவது தப்பித்தோம்.

நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களும் ஒரே அணியில் இணைந்து பயணித்தால் நிறுவனத்தை பாதுகாக்க முடியும். ஒரு மாதம், இரண்டு மாதம் மீட்பது அல்ல தொடர்ந்தும் நிறுவனத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

**உந்துலா பீரிஸ்**
**தமிழில் வீ. ஆர். வயலட்**




### மலையக மக்களுக்கும் நிவாரணங்கள்,

# சிறந்த திட்டங்கள் முன்வைக்கப்பட்டால் அரசுக்கு பூரண ஆதரவு வழங்கத் தயார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையக பெருந்தோட்ட மக்களுக்கும் நிவாரணங்கள் வழங்கப்பட்டு அப்பிரதேசங்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் சிறந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துமானால் அரசாங்கத்துக்கு தமது முழுமையான ஆதரவை வழங்க முடியுமென வடிவேல் சுரேஷ் எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பண்டாரவளை பூனாகலை கபரகல பகுதியில் மண்சரிவு இடம்பெற்று ஒரு மாத காலம் கடந்து விட்டது. 142 குடும்பங்கள் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 70 குடும்பங்கள் மாகந்தர தொழிற்சாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



எவ்வித வசதிகளும் இல்லாத அந்த தொழிற்சாலை உடைந்து விழும் நிலையில் மிக மோசமாக காணப்படுகின்றது.

வயோதிபர்களும் சிறிய குழந்தைகளும் கூட இந்த இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மக்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு முன்னெடுத்துள்ள நடவடிக்கை என்ன? எப்போது அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படப்போகின்றது என நான் கேட்க விரும்புகின்றேன்.

அதேவேளை, சூறாவளியினால் பசறை, மடுல்சீமை பகுதியில் பலர் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அரிசி நிவாரணம் வழங்கப்படுகின்றது. அதனை பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று கடந்த தினங்களில் எட்டியாந்தோட்டை நாகசேனை தோட்டத்தில் சுதந்திரமாக வாழவிடுமாறு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

அவர்களின் சமூக பாதுகாப்பையே அவர்கள் கோருகின்றனர். அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். வெளியார் வந்து அங்கு காணிகளை அபகரிக்க முயற்சித்து வருகின்றனர்.

அதேவேளை மலையக மக்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் தொடர்ச்சியாக நான் கோரிக்கை விடுத்து வந்துள்ளேன். கூட்டு ஒப்பந்தம் ஊடாகவோ, சம்பள நிர்ணய சபையின் ஊடாகவோ சம்பளத்தை அதிகரிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு 3250 ரூபா சம்பளத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியையும் வலியுறுத்தியுள்ளேன்.

மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்போம் என்று கூறினால் மட்டும் போதாது. அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.



தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்துக்கமைய மத்திய மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. உனைஸின் டோலவத்தையிலுள்ள வீட்டின் மேல்மாடியில் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ள பழப்பயிர்ச்செய்கை தோட்டத்தை மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே பார்வையிடுவதை படத்தில் காணலாம்

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)



டெவோன் நீர்வீழ்ச்சியின் தொடக்கத்தில் எழில் கொஞ்சும் மலைப்பகுதியில் எழுந்தருளியுள்ள பத்தனை மாநகர் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக பெருவிழா நேற்று (05) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

(படம்: ஹட்டன் விசேட நிருபர்)

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு புதிய வேலைத்திட்டங்கள்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தின் தலைவராக பாரத் அருள்சாமி கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் இதற்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக இரண்டாவது முறையாக பாரத் அருள்சாமி நேற்று முன்தினம் (4) பொறுப்பேற்றுக்



கொண்டார். இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழ்நிலையிலிருந்து மீண்டெழ வேண்டும். பெருந்தோட்ட தொழில்துறையின் வளர்ச்சிக்கும் மலையக மக்களின் எழுச்சிக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலுக்கமைவாக பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளேன். பெருந்தோட்ட தொழிற்துறையை அபிவிருத்தி செய்யவும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் அவர்களின் நலன் சார்ந்த புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தவும் திட்டமிட்டுள்ளேன். இந்த வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்த அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கூறினார்.

# சிறுவர் பூங்காவில் குளவிக்கூடுகள்; சிறுவர்கள் அச்சம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பிரதேசசபைக்கு சொந்தமான சிறுவர் பூங்காவிலுள்ள மூன்று மரங்களில் குளவிக் கூடுகள் உள்ளன.

இதனால் சிறுவர்கள் அப்பகுதிக்கு வருவதில் அச்சம் தெரிவிக்கின்றனர்.

குளவியினால் அங்கு விளையாடும் சிறார்களுக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு உள்ளது.



இதுகுறித்து சம்பந்தப்பட்ட மஸ்கெலியா பிரதேசசபை முன்வந்து குளவிக்கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர். மூன்று மரங்களிலுள்ள குளவிக் கூடுகள் மிகவும் விஷத்தன்மை வாய்ந்ததாகவிருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மூன்று குளவிக் கூடுகள் உள்ளன.இதில் வாழும் குளவிகள் மரக்கிளைகள் முறிந்து விழும் பட்சத்தில் அங்குள்ள சிறார்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். ஆகையால் சம்பந்தப்பட்ட பிரதேச சபை உடன் கவனம் செலுத்தி அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

## தவக்கால சிந்தனை



## இயேசுவின் எல்லையற்ற அன்பு

(புனிதவாரம் – பெரியவியாழன்)

இன்று புனித வாரத்தின் அதி உன்னத நாளாகிய பெரிய வியாழன் ஆகும். இன்றுடன் அகிலமெங்கும் பரந்து வாழ்கின்ற கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள் பாஸ்கா மறை பொருளாகிய இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை ஒன்றிணைந்து தியானிக்கின்ற பாஸ்கா திரி தின வழிபாட்டின் தொடக்க நாளுக்குள் நுழைகிறார்கள்.

பெரிய வியாழனாகிய இன்றைய நாளின் சிறப்பு யாதெனில், இந்நாளில் இயேசுவின் அளவிட முடியாத, ஆழமான அன்பினைக் கொண்டாடுகிறோம். இந்நாளை ஆங்கிலத்தில் 'Maundy Thursday' என்று அழைப்பார்கள். 'Maundy' என்கிற சொல் 'Maundatum' என்கிற இலத்தீன் சொல்லிருந்து வருவதாகும்.

அதன் பொருள் யாதெனில், கட்டளை என்பதாகும். இன்றைய நாளின் திருவழிபாட்டினூடாக இயேசு ஆண்டவர் மூன்று கட்டளைகளைத் தன் திருத்தூதர்களுக்கும் அவரில் நம்பிக்கை கொண்ட அனைத்து நம்பிக்கையாளர்களுக்கும் வழங்குகின்றார்.

அதிலே முதலாவதாக அன்பின் கட்டளை, இரண்டாவதாக திருப்பலியில் கடவுளின் அன்பினைக் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்ற கட்டளை, மூன்றாவதாக குருவும் பலியுமாகிய இயேசுவின் குருத்துவத்தில் பங்கெடுக்க அழைக்கப்படுகின்ற கட்டளை. கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களாக இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு வாழ அழைக்கப்படுகிற அனைவருக்கும் இக்கட்டளைகள் பொருத்தமாகும். அன்புக்கு அடையாளமாக அன்று அவர், திருத்தூதர்களின் பாதங்களைக் கழுவியது போன்று அவரைப் பின்பற்றுவோரும் தமது நிலை துறந்து பிறரன்புப் பணிக்கு வாழ்வில் முதலிடம் கொடுக்க வேண்டும். அடுத்தவர் வாழ்வில் அல்லல்கள் களைவதே இயேசுவின் மீது அன்பு கொண்டவர்களின் பணியாகும். இத்தகைய பணிக்கு நம்பிக்கையாளர்கள் தம்மை வழங்கிட உறுதி தருவதே நற்கருணையாகும். நற்கருணையில் ஊன்றப் பெற்ற திரு அவைச் சமூகம் என்றுமே அன்பு பணிக்கு தன்னையே வாரி வழங்கும். அத்தகைய பணிக்கு ஆதாரமாவதே குருத்துவம்.

குருத்துவ வாழ்வு சிறக்க வேண்டுமாயின், அது பொருள் கொள்ள வேண்டிய இடம் தன்னலமற்ற, சுயநலம் நாடாத அன்பு பணியே. அதனையே இயேசுவும் இந்நாளில் திருத்தூதர்களின் பாதங்களைக் கழுவி அனைத்து நம்பிக்கையாளர்களுக்கும் முன்னுதாரணம் காட்டியுள்ளார். அவர் வழியில் நம்பிக்கையாளர்களும் அடுத்தவர் பாதங்களைக் கழுவி அன்புப் பணிக்கென புறப்படுவோம். இத்தகைய உணர்வுடனும் உறுதியுடனும் இயேசுவின் அன்புக் கட்டளையை பின்பற்றி வாழ முனைவோமா?

அருட்தந்தை நவாஜி...

பதுளை–அநுராதபுரம் – மாத்தறைக்கு

## புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்



தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விசேட ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளதாக, ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்கும், பதுளையிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் 4 விசேட ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளன. கொழும்பிலிருந்து காலிக்கும், மருதானையிலிருந்து பெலியத்தைக்கும், அநுராதபுரத்திலிருந்து பெலியத்தைக்கும் 3 விசேட ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளன. காலியிலிருந்து கொழும்புக்கும், பெலியத்தையிலிருந்து மருதானைக்கும், பெலியத்தையிலிருந்து அநுராதபுரத்துக்கும் 3 விசேட ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளதாகவும், அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பங்கு பரிவர்த்தனையின் வர்த்தக நேரம் நீடிப்பு

கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் வர்த்தக நேரம் நீடிக்கப்பட்டுள்ளது. காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென கொழும்பு பங்கு பரிவர்த்தனை அறிவித்துள்ளது. இந்த நடைமுறை எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் அமுலாகவுள்ளது. முன்னதாக, காலை 10.00 மணி முதல் மதியம் ஒரு மணிவரை இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## ரமழான் சிந்தனை

## பாவங்களை நினைத்து வருந்துவோம்

மனிதன் பலவீனனாகப் படைக்கப்பட்டுள்ளான். அவன் தவறுக்கும் மறதிக்கும் இடைப்பட்டவனாவான். அதனால் தவறுகள் நிகழும்போது அதனை நினைத்து வருந்துவதும் கவலைப்படுவதும் மிகவும் அவசியமானது. மாற்றமாக தவறுகளை செய்துவிட்டு அதனை வைத்து பெருமையடிப்பது பிழையானது.

'கைசேதப்படுவதுதான் (தவ்பா) பாவ மன்னிப்பாகும்' (ஆதாரம் ஸஹீஹ் இப்னு மாஜா, அஹ்மத்) என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். 'ஒருவன் ஒரு பாவத்தை செய்துவிட்டு கைசேதப்படுகின்றபோது பெரிய பாவம்கூட சிறிய பாவமாக மாறி விடுகிறது. இன்னொருவன் சிறியதொரு பாவத்தை செய்துவிட்டு பெருமையடித்து அந்த பாவத்தில் பிடிவாதமாக தொடர்ந்து ஈடுபடுகின்ற போது அதுவே பெரிய பாவமாக மாறிவிடுகிறது' என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கருதுகிறார்கள்.

ஒருவன் பாவத்தை நினைத்து வருந்தாமல் பெருமையடிப்பதற்கான பிரதான காரணம் அறிவீனம்தான் என்று இஸ்லாமிய அறிஞர்கள் கருதுகிறார்கள்.

'அல்லாஹ் பற்றிய குறை அறிவின் காரணமாகவே ஒருவன் பாவங்களில் அலட்சியமாக இருப்பான்' என்று இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி (ரஹ்) அவர்களும் 'மடையன் அல்லாஹ்வுக்கு மாறு செய்வான். புத்திசாலி அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவான்' என்று இமாம் இப்னு ரஜப் அல் ஹன்பலி (ரஹ்) அவர்களும் 'சிறிய பாவங்கள் குறித்து கவனயீனமாக இருக்க வேண்டாம். யாருக்கு நீங்கள் மாறு செய்தீர் என்பதை பாருங்கள். மகத்தான இறைவனுக்கல்லவா மாறு செய்தீர்கள்' என்று இமாம் ஸுப்யானுஸ் ஸவ்ரி (ரஹ்) அவர்களும் 'அல்லாஹ்வின் மகத்துவத்தை சிந்திக்கின்ற ஒருவன் அவனுக்கு மாறு செய்ய மாட்டான்' என்று இமாம் பிஷ்ருல் ஹாபி (ரஹ்) அவர்களும் கருதுகிறார்கள்.

எனவே பாவச்செயல்கள் குறித்து வருந்துவோம். அவற்றை தவிர்ந்து நடப்போம். அவற்றில் இனி ஈடுபட மாட்டேன் என்று உறுதிகொள்வோம். அதற்காக இந்த ரமழானில் திடசங்கற்பம் பூணுவோம்.

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# தொழில் சட்டம் விரைவில் மாற்றம் முதலாவது சட்டமூலம் தயாரிப்பு



### மே மாதம் நிறைவு செய்யவும் எதிர்பார்ப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சிக்கல் நிறைந்த தொழில் சட்டத்துக்கு பதிலாக சிறந்த தொழில் சட்டத்தை தயாரிக்கவுள்ளதாகவும் அதற்கான கட்டமைப்பின் முதலாவது சட்டமூலம் தயாரிக்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் மே மாதத்தில் நிறைவு செய்யவுள்ளதாகவும், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதற்காக தமது கருத்துகளை முன்வைப்பதற்கான வாய்ப்பை தொழிற்சங்கங்கள், சுயாதீன கருத்துகளை கொண்ட நபர்கள் மற்றும் தொழிற்துறையினருக்கு வழங்கவுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்துள்ளார். புதிய தொழில் சட்டத் தொகுதியை தயாரிப்பதற்காக தமது கருத்துகளை தாம் தொழில் அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், அது தொடர்பில் அமைச்சர் மற்றும் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்து தமது கருத்துகளை முன்வைப்பதற்கு வாய்ப்புகளை வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

06



நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளராக (ஒம்புட்ஸ்மன்) நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.கே.ஹிரிம்புரேகம (04) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட போது, நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்து கொண்டார்.

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி.யின் தாய் மாமனார் காலமானார்

முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் தாய் மாமனாரான பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த பிரபல இரத்தினக்கல் வர்த்தகர் அல் ஹாஜ் எம்.ஆர்.எம்.அமீன் நேற்று முன்தினம் 4 ஆம் திகதி மாலை காலமானார். மர்ஹூம்களான ஓ.எல்.எம். ரபாய் மரிக்கார் ஜெஸீமா உம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரான இவர், நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாவார். மரணிக்கும் போது இவருக்கு வயது 68 ஆகும். அன்னாரின் ஜனாஸா 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பேராசிரியர் சந்திரசேகரத்தின் நினைவுப் பேருரை



பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் நினைவுப் பேருரை எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றத்தின் தலைவர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேற்படி மன்றத்தின் காப்பாளர் பேராசிரியர் மா.கருணாநிதி பேருரையாளர் அறிமுகத்தை வழங்குவார்.

தாருஸ்ஸலாமிலுள்ள புரூணைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் பி.ஏ.ஹுசைன்மியா, 'இலங்கையில் உயர்கல்வி ஒரு வரலாற்று நோக்கு' என்ற தலைப்பின் கீழ் நினைவுப் பேருரையை வழங்கவுள்ளார்.

மேற்படி மன்றத்தின் செயலாளர் ச.இந்திரகுமார் நன்றியுரை வழங்கவுள்ளார். மேற்படி நிகழ்வு தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள 0779825028, 0772113326 ஆகிய கையடக்கத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதித்துறையில் ஏற்றத்தாழ்வு, நிலையற்ற அரசியல் நிலைமை

## வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதில் சில தடங்கல்கள்

### உலக வங்கியின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது




இலங்கையில் உயர்ந்துள்ள நிதித்துறையின் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிலையற்ற அரசியல் நிலைமை என்பன நாட்டின் பொருளாதாரக் கண்ணோட்டத்துக்கு குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துவதாக, உலக வங்கி தெரிவித்துள்ளது. இலங்கை தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே, உலக வங்கி இதனைத் தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்துக்கான மூல காரணங்களைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ள உலக வங்கி, நெருக்கடி மற்றும் எதிர்கால நெருக்கடிகளைத் தடுக்க வலுவான மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தை உருவாக்குதல் அவசியமென்று தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் 2023 இல் 4.3 சதவீதமாக சுருங்குமென கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேவை தொடர்ந்து

06

## கொழும்பில் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமியின் அருளுரை

தமிழ்நாடு திருஞானசம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை, ஸ்ரீகந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம், ஸ்ரீகார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக

சுவாமியின் ஆன்மிக அருளுரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (09) முற்பகல் 10.00 மணிக்கு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய ஆலயத்தில் நடைபெறவுள்ளது. 'நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்' எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரையையும் ஆசியுரையையும் அவர் வழங்கவுள்ளார். இதனை தெட்சணத்தார் மகிமை பரிபாலன சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, அன்றையதினம் மாலை 5.00 மணிக்கு கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதராஜ விநாயகர்

ஆலயத்தில் 'திருமுறைகள் காட்டும் வாழ்வுநெறி' எனும் தலைப்பில் ஆன்மிக

06

மட்டு. போதனா வைத்தியசாலையில்

## சத்திரசிகிச்சையின் பின் உயிரிழந்த சிறுமியின் மரணத்தில் சந்தேகம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டு மரணித்த ஆரையம்பதி, பாலமுனையைச் சேர்ந்த சிறுமியின் மரணம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பாலமுனை வைத்தியசாலை வீதியில் வசித்து வரும் மர்சூக் பாத்திமா மல்சா (16) எனும் இந்தச் சிறுமி, வயிற்று

06

## இந்தியாவிலிருந்து மேலும் ஒருதொகுதி முட்டைகள்

### நேற்று முன்தினம் நாட்டுக்கு வந்தன



இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மற்றுமொரு தொகுதி முட்டைகள் (04) இரவு நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக, அரச வர்த்தக இதர சட்டக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுவரை 4 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக, அதன் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார்.கடந்த 23ஆம் திகதி முதல் தடவையாக 2 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் சுமார்

06

இன்டர்போல் ஒத்துழைப்புடன்

## 'ஹரக் கட்டா' மனைவியை கைதுசெய்ய நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



மடகஸ்காரில் கைதுசெய்யப்பட்ட பாதள கும்பல் மற்றும் போதைப்பொருள் வர்த்தகரான 'ஹரக் கட்டா' வின் மனைவியைக் கைதுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அவரை சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கைதுசெய்து, இலங்கைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மார்ச் 15 ஆம் திகதி மடகஸ்காரிலிருந்து ஹரக் கட்டா மற்றும் போதைப்பொருள்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 211.25 | 225.29 |
| கனடியன் டொலர் | 232.02 | 247.26 |
| யூரோ | 340.65 | 360.74 |
| ஜப்பான் யென் | 2.3550 | 2.4949 |
| சிங்கப்பூர் டொலர் | 235.13 | 249.76 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.11 | 410.28 |
| சுவிஸ் பிராங்க் | 340.65 | 364.37 |
| அமெரிக்க டொலர் | 313.37 | 330.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 858.78 | கட்டார் ரியால் | 88.53 |
| குவைத் டினார் | 1,055.52 | சவூதி ரியால் | 86.32 |
| ஓமான் ரியால் | 840.95 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 88.15 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 23ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரமழான் பிறை 14

### குறள் தரும் சிந்தனை



உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்

உட்பகைக்கு அஞ்சி ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஒரு சோதனையான நேரத்தில் பச்சை பாண்டத்தை அறுக்கும் கருவிபோல அந்த உட்பகை அழிவு செய்துவிடும்.

## விடைத்தாள் திருத்தும் இழுபறிக்கு முடிவு காணும் இணக்கப்பாடு

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்துவதில் சுமார் ஒரு மாத காலத்திற்கும் மேலாக நீடித்து வந்த தாமதம் முடிவுக்கு வரும் கட்டத்தை அடைந்துள்ளது. ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களுடன் நடத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்தும் இருக்கின்றார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பிரேம ஜயந்த இவ்விடயங்களைத் தெரிவித்து இருக்கின்றார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்துவதை ஆரம்பிப்பது குறித்து ஆசிரியர்கள் சங்கமும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கமும் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் இரண்டு சங்கங்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பேச்சுவார்த்தைகளில் 80 வீத இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் விடைத்தாள் திருத்துவதில் நிலவிவந்த தாமதம் விரைவில் முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை பரவலாக ஏற்பட்டுள்ளது. அதேநேரம், 'இப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு இம்முறை அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படும். இதற்கென திறைசேரியிலிருந்து மேலதிகமாக 450 மில்லியன் ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது' என்று கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். மாணவர்களின் உயர்கல்வியும் கல்வியின் தரமும் பாதிக்கப்படவோ, தாமதமடையவோ அனுமதிக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் தொழிற்சங்கங்களின் கோரிக்கைக்கு அமைய அதிகரித்த கொடுப்பனவை வழங்கியாவது விடைத்தாள் திருத்தும் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

நாடு சுதந்திரத்தின் பின்னர் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து மீட்சி பெற்று வந்து கொண்டிருக்கும் சூழலில் இவ்வளவு தொகை நிதியை மேலதிகமாக செலவிடுவது என்பது இலகுவான காரியமல்ல. அப்படியிருந்தும் இந்நாட்டு மாணவர்களின் உயர்கல்வியையும் கல்வியின் தரத்தையும் பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்நடவடிக்கை பெரிதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை நிறைவுற்று கடந்த பெப்ரவரி 23 ஆம் திகதி விடைத்தாள் திருத்தப்பணிகளை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. என்றாலும் அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தவிர்த்துக் கொள்வதாக அறிவித்திருந்தனர். ஆனால் இவ்வரிக்கொள்கை நிதியமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயம். அதற்கும் கல்வி அமைச்சுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அதனால் நிதியமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயத்திற்காக ஆசிரியர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கல்வி அமைச்சின் பணிகளை தவிர்த்துக் கொள்வது நியாயமான விடயமல்ல.

அதேநேரம் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளைத் தாமதப்படுத்துவதால் பரீட்சை எழுதிய மாணவர்கள் உயர்கல்வியை ஆரம்பிப்பதற்கு தாமதமாவதோடு பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்வதற்கான காலமும் தாமதமடையும். இதன் விளைவாக இவர்களுக்குரிய உயர்கல்விக்காக மேலதிக செலவுக்கு முகம் கொடுக்கவும் நேரிடுவதோடு அவர்களது நேரகாலமும் கூட வீணாக முடியும். இவ்வாறு இளம் பராயத்தினரின் எதிர்காலம் வீணடிக்கப்படுவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஆசிரியர் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்கங்களுடன் இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தைகளின் போது இவ்விடயங்கள் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

இவ்விடயங்களின் உண்மைத் தன்மையையும் நியாயபூர்வத்தையும் ஏற்றுக்கொண்டுள்ள ஆசிரியர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் விடைத்தாள் திருத்தும் பணிகளை ஆரம்பிப்பதற்கு பெரும்பாலும் உடன்பட்டிருக்கின்றனர்.

இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். ஆசிரியர்களதும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களதும் இந்த இணக்கப்பாட்டை பெற்றோரும் உயர்தரப் பரீட்சை எழுதி பெறுபேற்றுக்காக எதிர்பார்த்துள்ள மாணவர்களும் பெரிதும் வரவேற்றுள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடும் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்தபடி கல்வி கற்று பரீட்சை எழுதியுள்ள மாணவர்கள், உரிய காலவேளையில் பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வியை நிறைவு செய்வதற்கும் இந்த விடைத்தாள் திருத்தும் பணி பெரிதும் உதவும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதேநேரம் நாட்டின் கல்வியின் தரம் பாதிக்கப்படுவதும் தவிர்க்கப்படும்.

ஆகவே ஆசிரியர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் நாட்டினதும் மாணவர்களதும் எதிர்கால நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவது இன்றியமையாததாகும். அதற்கு விடைத்தாள் திருத்துவதற்கான இணக்கப்பாட்டு நல்ல முன்னுதாரணமாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஆலய தீர்த்தோற்சவ வைபவத்தின் போது அர்ச்சகர்கள் ஐவர் குளத்தில் மூழ்கி மரணம்!

## சென்னை நங்கநல்லூர் தர்மலிங்கேஸ்வரர் கோயிலில் நேற்றுக்காலை பரிதாப சம்பவம்!



சென்னை நங்கநல்லூர் அருகே தர்மலிங்கேஸ்வரர் கோயிலில் நேற்றுக் காலை நடைபெற்ற தீர்த்தவாரி நிகழ்ச்சியில், பெரிய விபரீதம் நடந்துள்ளது. சுவாமியை குளத்தில் இறக்கிய போது 5 அர்ச்சகர்கள் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

தீர்த்தவாரி நிகழ்ச்சியில் உயிரிழந்த ஐந்து அர்ச்சகர்களும் 15 முதல் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் ஆவர். சூர்யா (24), ராகவ் (22), ராகவன் (18), யோகேஸ்வரன் (23), வணேஷ் (20) ஆகிய ஐந்துபேரின் உடல்கள் மீட்கப்பட்டு குரோம்பேட்டையில் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

பொலிஸ் உயரதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். சுமார் 25 அடி ஆழம் கொண்ட இந்தக் குளத்தில் சேறு அதிகமாக இருந்துள்ளது. தீர்த்தவாரி நிகழ்ச்சியில் அர்ச்சர்கள் அனைவரும் சுவாமியை குளத்தில் குளிப்பாட்டினர். பின்னர் குளத்து நீரில் மூழ்கி எழுந்தனர். குளத்தில் மூழ்கி எழுந்திருக்கும் போது, மூன்று முறை எழுந்திருக்க வேண்டும்.

அப்படி எழுந்திருக்கும் போது மூன்றாவது முறை எழ முயன்ற போது ஒருவருக்கு கால் சேற்றில் அகப்பட்டுள்ளது. அந்த அர்ச்சகரை மீட்கச் சென்ற போதுதான், அடுத்தடுத்து 4 பேர் நீரில் மூழ்கி உள்ளனர். ஒட்டுமொத்தமாக நீரில் அடுத்தடுத்து ஐந்து அர்ச்சர்கள் தண்ணீரில் உள்ள சேற்றில் சிக்கி நீந்த முடியாமல் உயிரிழந்தனர்.

கடைசி ஐந்து நிமிடத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக வீடியோவும் வெளியாகி உள்ளது. வீடியோவில் அர்ச்சகர்கள் குளத்தில் ஒருவருக்கு ஒருவர் கையைக் கோர்த்தபடி,தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்கிறார்கள். அப்போது ஒருவர் தண்ணீரில் மூழ்குகிறார். பின்னாலேயே சிலர் அவரை காப்பாற்ற முயலுகிறார்கள். அவர்களும் நீரில் மூழ்குகிறார்கள். சுற்றி இருந்த அர்ச்சகர்கள் என்ன நடக்கிறது என்பதை உணருவதற்கு உள்ளாகவே ஐந்து பேர் மூழ்கி விடுகிறார்கள்.

அதன் பின்னர் உடனடியாக அங்கிருந்தவர்கள் தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்து மீட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தால் பெரும் சோகம் அடைந்த பக்தர்கள் பொலிசாருக்குத் தகவல் தெரிவித்தனர். அவர்களும் நேரில் வந்து முழு விசாரணையும் நடத்தினர். நேற்றுக்காலை 6.30 மணிக்கு இதேபோன்று நீரில் மூழ்கி தீர்த்தவாரி நடந்துள்ளது. அப்போது பிரச்சினை ஏற்படவில்லை. ஆனால் நேற்றுக்காலை 9.30மணிக்கு தான் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இந்த சம்பவம் நங்கநல்லூர் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இறந்த 5 பேருமே இளவயதினர், நன்கு படித்தவர்கள். தீர்த்தவாரி சேவைக்காக அவர்கள் சேவையாற்ற வந்துள்ளனர். இந்த விழாவுக்கு பொலிஸாரிடம் அனுமதி பெறவில்லை என கூறப்படுகிறது. ஆனால் சிலர் அனுமதி பெற்றதாகக் கூறுகிறார்கள். இது குறித்து விசாரணை நடத்தி வருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நடந்தது குறித்த வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

இடுப்பளவு நீரில் எப்படி ஐவரும் மூழ்கினார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த குளம் 20 அடி ஆழத்தைக் கொண்டது. இதில் தண்ணீர் இடுப்பளவு இருந்தாலும் சேறு அதிக ஆழத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது.அந்தச் சேற்றில் கால்கள் சிக்கியதால் மூழ்கிய ஒரு அர்ச்சகரால் எழுந்திருக்க முடியாமல் தத்தளித்த போது மற்ற 4 பேர் அவரை காப்பாற்ற முயன்று அவர்களும் உயிரிழந்தனர்.

# புனித ரமழான் காலத்தில் மாணவர்களை மையப்படுத்தி உளவளத்துணை செயலமர்வு

மாணவர்களின் கற்றல் நடவடிக்கையினை மேம்படுத்தும் பொருட்டு பாடசாலை, மத்ரஸா மாணவர்களை மையப்படுத்திய உளவியல் செயலமர்வு கடந்த அண்மையில் அட்டாளைச்சேனை ஜம்இய்யா வளாகத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை ஜம்இய்யாவின் தலைவர் அஷ்ஷேஹ்எம்.ஏ.முபீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடறிந்த உளவியலாளரும், இஸ்லாமிய ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளருமான ஆதில் ஹசன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியிருந்தார்.

மாணவர்கள் கற்றலில் ஈடுபடுவதன் நோக்கம், விருப்பத்தோடு கற்பதற்கான நுட்பங்கள், எதிர்கால உலகை கற்றலின் ஊடாக வெற்றி கொள்வது போன்ற விடயங்களை மையப்படுத்தி அவர் சிறப்புரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள சூழலில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கை மந்த நிலையிலே காணப்படுகின்றது என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.





அத்துடன், ஆன்மிகத்துறையில் நாட்டமின்மை மாணவர்களை வெகுவாக தொற்றிக் கொள்ளத் தொடங்கியுள்ளது. இதனால் சமூகவலைத்தளங்கள், இணைய விளையாட்டுகளில் அதிகம் ஈடுபாடு செலுத்தி கற்றல் நடவடிக்கையில் பின்தள்ளப்படுகின்ற நிலை மேலோங்கியுள்ளது.

இணைய விளையாட்டுக்கள், சமூக வலைத்தளங்களில் மூழ்குதல் போன்ற செயற்பாடுகளில் இருந்து மாணவர்களை மீட்டெடுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கை பாடசாலை, சமூக ஆர்வலர்கள்மத்தியில் பரவலாக பேசப்பட்டு வந்த நிலையிலே ஜம்இய்யா குறித்த விடயத்தில் கவனம் செலுத்தி இந்தச் செயலமர்வுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த செயலமர்வில் பெருமளவான மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் பெற்றோரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# நேரடி அரசியலில் நான் இறங்கியதனால் என் மீது அபத்தமான குற்றச்சாட்டுகள்!

## முடிந்தால் உண்மையென நிரூபிக்குமாறு சவால் விடுத்து ஊடகவியலாளர் வித்தியாதரன் அறிக்கை



தான் நேரடி அரசியலில் இறங்கியமையால், சில முகம் தெரியாத தரப்பினரும் பிரகிருதிகளும் தங்கள் அடையாளத்தை மறைத்துக் கொண்டு, அபத்தமான குற்றச்சாட்டுகளையும் விஷமத்தனமான கேவலமான புனைகதைப் பிரசாரங்களையும் முன்னெடுத்து வருகின்றனர் என்று மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் விசனம் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், குற்றச்சாட்டுகளை சுமத்துவோர் வெறும் 'அடையாளம் வெளிப்படுத்தாத பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன' என்று கூறாமல், ஆதாரங்களையும் சான்றுகளையும் முன்வைத்துத் தமது குற்றச்சாட்டுகளுக்கான அடிப்படைகளையாவது நிரூபிக்க வேண்டுமென்று அவர் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

குற்றச்சாட்டுகளை சுமத்துவோர் தங்களை பகிரங்கப்படுத்தாமல் ஒளிந்திருந்து செயல்படுவதாகவும் வித்தியாதரன் தெரிவித்துள்ளார்.

"சுமார் 40 ஆண்டுகள் ஊடகப் பட்டறிவு கொண்ட நான் அரசியலில் நேரடியாக இறங்கியமையை அடுத்து என் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் துர்நோக்கில், வெளியில் தம்மை அடையாளப்படுத்தாத சில அநாமதேய சமூக ஊடகத் தரப்புகளும், ஒரு அச்சு ஊடகமும் வேண்டுமென்றே திட்டமிட்டுப் பொய்த் தகவல்களையும், ஆதாரமற்ற புனைகதைகளையும் பரப்பி வருகின்றன. என் பொதுவாழ்வில் இத்தகைய அபத்தக் குற்றச்சாட்டுகள் புதியவை.

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரியொன்றின் மாணவர் ஒருவர் தற்கொலைக்கு முயன்றதாக வெளியான தகவலையொட்டி நடைபெற்ற பொலிஸ் விசாரணையைத் திரிபுபடுத்தி என் மீது அவதூறு பிரசாரம் செய்வதற்கு இந்தத் தரப்புகள் முற்படுகின்றன.

மூன்று வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்த சம்பவத்திற்கும் எனக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன். இவ்விவகாரம் தொடர்பில் யாழ் பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கல்லூரிக்கும் நிர்வாகத்துக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் சதி நடவடிக்கையும் ஊடகத்தின் பெயரால் அரங்கேறுவது துரதிர்ஷ்டமாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை. என்னுடன் முன்னர் ஊடகப் பணியாற்றிய எவரையுமே பொலிஸார் விசாரணைக்கு கூட அழைக்கவில்லை. இந்த விடயம் குறித்து தங்கள் அடையாளத்தையோ பொறுப்புக் கூறலையோ வெளிப்படுத்தாமல் இவ்வாறு ஊடக அதர்மத்தை பிரதிபலிக்கும் இந்தப் பிரகிருதிகள் தங்கள் செய்திக்கான ஆதாரத்தை வெளிப்படுத்தி உண்மைத் தன்மையை நிரூபிக்க வேண்டுமென பகிரங்க சவால் விடுக்கிறேன்.

பெயர் விபரம் குறிப்பிடாத பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி இத்தகைய அவதூறு ஏற்படுத்தும் செய்திக்கு வலுச்சேர்க்கும் பத்திரிகை அதர்மமும் யாழ்ப்பாணத்தில் தொடர்கின்றது. என் பெயரை இந்த விடயத்துடன் தொடர்புபடுத்தி செய்தி வெளியிட்ட சில தரப்புகளை அடையாளம் கண்டுள்ளேன். அவற்றுக்கு எதிராக உள்நாட்டிலும், வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாகவும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவிருக்கிறேன்.

இத்தகைய அத்துமீறலை, அக்கிரமத்தை சுயநல அரசியலுக்காக அனுமதித்து ஊக்குவிப்பது தண்டனைக்குரிய குற்றமுமாகும். சட்டம் தன் பணியைச் செய்யும், தர்மம் நிலை நிறுத்தப்படும், காலம் உண்மைகளை வெளிப்படுத்தும் என்று நம்புகிறேன்".

இவ்வாறு வித்தியாதரன் தெரிவித்துள்ளார்.

# மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி அதிபர் அரசாங்க சேவையில் இருந்து நாளை ஓய்வு

கல்விச் சேவையில் ஆசிரியராக 22 வருடங்களும். அதிபராக 14 வருடங்களும் கடமையாற்றிய அவர் மாணவர்களோடும், ஆசிரியர்களோடும், பெற்றோர்களோடும் நல்லுறவைப் பேணியவர். மாணவர்களை அரவணைத்து,அறிவுரை கூறி அன்புகாட்டிய நல்லாசான்.

கற்பித்தலில் ஆற்றலும்,ஆளுமையும் கொண்டவர். அமைதியானவர். எல்லோரையும் அரவணைத்துச் செல்கின்ற நற்பண்பு கொண்டவர். பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கும் எனைய துறைகளில் மிளிர்வதற்கும் வழிகாட்டியவர். இன்றுவரையும் மாணவர்களுக்கு கல்வி மற்று ஆலோசனைகளை வழங்கி வருகின்ற கல்வி ஆளுமை அவராவார்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த முகம்மது ஜலால்தீன், மீராநாச்சி தம்பதியின் புதல்வராக 1963.04.08 ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை கல்வியை மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர்கல்வியை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையிலும் கற்றவர். இக்கல்லூரியில் முதலாவது க.பொ.த. உயர்தர பிரிவு மாணவர் அணியில் 1980ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பரீட்சையில் தோற்றியவர்.

இப்பரீட்சையில் மருதமுனை அல்மனாரில் இருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற நால்வரில் இவரும் ஒருவர்.அதைத் தொடர்ந்து பல்கலைக் கழகக் கல்வியை கொழும்பு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் கற்றவர். முகாமைத்துவப் பிரிவில் விஞ்ஞானமாணி(வணிக நிருவாகம்) சிறப்புப் பட்டம் பெற்றவர். அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியையும் பூர்த்தி செய்தவர்.





இவர் 1987.12.14ஆம் திகதி வர்த்தகப் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் கடமையைப் பொறுப்பேற்றவர். அங்கு கடமையாற்றிய நிலையில் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று 2009ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவைக்கு நியமனம் பெற்றவர். பின்னர் 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டுவரை அல்மனாரில் பிரதி அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

அதைத் தொடர்ந்து 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரை பாண்டிருப்பு அல்மினன் வித்தியாலயத்தில் பொறுப்பு அதிபராகக் கடமையாற்றினார்.

இந்நிலையில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் 22வது பொறுப்பு அதிபராக 2019.08.01ஆம் திகதி பொறுப்பேற்றார்.இவரது நான்கு வருட சேவைக்காலத்தில் உத்தேச ஆயிரம் தேசிய பாடசாலைத் திட்டத்தினுள் பாடசாலை உள்வாங்கப்பட்டு அதற்கான அங்குரார்ப்பண நிகழ்வையும் தலைமை தாங்கி நடாத்தியுள்ளதுடன் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் முதலாவது அதிபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

இக் கல்லூரியின் கல்விசார் அபிவிருத்தியிலும், பௌதீக வள அபிவிருத்தியிலும் தடம் பதித்துள்ளார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
(மருதமுனை தினகரன் நிருபர்)

# உணவுப் பற்றாக்குறை உருவெடுப்பதை தவிர்க்க பயிர்ச்செய்கையில் முழுமையாக இறங்குவோம்!

உணவுப் பற்றாக்குறையை வெற்றி கொள்ள வேண்டுமானால் இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் தம்மிடம் காணப்படும் ஒவ்வொரு துண்டு வெற்று நிலத்தையும் பயிரிடுவதற்காக முற்றாகப் பயன்படுத்த வேண்டும்.

வீட்டின் முற்றம், வீட்டின் மேல் மொட்டைமாடி, வீட்டின் சுவர்கள், மதில்களின் மேற்பரப்பு, வீதியோரங்கள், தரிசு நிலங்கள் போன்ற இடங்களில் எம்மால் இயன்றவரை பயிர்களை நட்டு குறைந்தது எமக்கு நாளாந்தம் தேவையான காய்கறி, கிழங்கு வகைகள் மற்றும் பழவகை மரங்களை நட்டு எமக்கும் எமது நாட்டிற்கும் ஒரு பாரிய ஒத்துழைப்பை வழங்குவோம்.

இங்கு எமது தேவைக்கு அதிகமானவற்றை பிறருக்கு வழங்கலாம். அல்லது வியாபார நோக்கோடு விற்பனையும் செய்யலாம். இதனால் நாடும் வீடும் மக்களும் வளம் பெற்று தன்னிறைவடையும். எனவே நாம் ஒவ்வொருவரும் இன்றிலிருந்து செயற்படுவோம்.

எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய உணவுத் தட்டுப்பாட்டைஓரளவாவது எதிர்கொண்டு முகங்கொடுப்பதற்காக இலங்கை அரசும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்தும் தனித்தனியாகவும் நாடெங்கும் பரந்தளவில் பயிரிடல் சம்பந்தமான பல செயற்திட்டங்களை ஆரம்பித்துள்ளன. இதன் ஒரு அங்கமாக இலங்கை இராணுவத்தினரின் உதவியுடன் இலங்கையில் பயிரிடப்படாமல் கிடக்கும் தரிசு (வெற்று) நிலங்களில் பயிரிடப் போவதாக இராணுவத் தளபதி லெப்டினென் ஜெனரல் விக்கும் லியனகே தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கை அனைத்தும் விவசாய அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைவாக மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச, தனியார் காணிகளில் பயிர்களை நடுவதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறு திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டை ஊக்குவிக்குமுகமாக அரச ஊழியர்களுக்கு இலவச விதைகள், பயிர்க்கன்றுகள், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை பொதுமக்கள் தத்தமக்குச் சொந்தமான நிலங்களில் தங்களுக்கு விரும்பிய பயிர்களை நடுமாறும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

## சமூக விதை வங்கி:

தற்காலத்தில் பயிர்களின் விதைகள் மிகவும் தட்டுப்பாடாக இருப்பது யாவரும் அறிந்ததே. இதை ஓரளவு முகாமைத்துவம் செய்யுமுகமாக சமூக விதை வங்கி (Community Seeds Bank) எனும் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. ஒருவரிடம் தேவைக்கு அதிகமாக இருக்கும் பயிர்விதைகளை அதே இன விதைகள் இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளித்து தட்டுப்பாட்டை ஓரளவாவது நிவர்த்திசெய்து, எல்லோரும் எல்லாப் பயிர்களையும் ஒரே நேரத்தில் பயிரிட வாய்ப்பளிப்பது மேற்படி முறையாகும்.

எனவே எம்மிடம் மேலதிகமாகவுள்ள பயிர்விதைகளை இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளித்து பயிர் வளர்ப்பை ஊக்கப்படுத்தி எமது நாட்டை வறுமைக் கோட்டுக்கு மேல் கொண்டுவர எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம்.

வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையில் அதிகமாக தக்காளி, பாகற்காய், வெண்டி, அவரை, பயற்றை, பூசணி, கெக்கரி போன்ற காய்கறிகளும், வல்லாரை, பொன்னாங்காணி, பசளி, கொத்தமல்லிக்கீரை, அரைக்கீரை, தூதுவளை, கங்குன், அகத்தி, தும்பை, முருங்கையிலை போன்ற இலைக்கறி வகைகளையும் மரவள்ளி, வற்றாளை, இராசவள்ளி, உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளையும், வாழை, பப்பாளி, றம்புட்டான், யானைக்கொய்யா, மா, பலா போன்ற பழவகைகளையும் பயிரிடலாம்.

உடலுக்குத் தேவையான பிரதான மூலப் பொருட்களான விற்றமின்கள், கனிப்பொருட்கள் மற்றும் நார்ச்சத்தை மரக்கறி, இலைக்கறி மற்றும் பழவகைகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். மனிதனின் நுகர்வுத் தேவைக்காக உணவைத் தயாரிக்கும் போது மாப்பொருள் (சோறு பாண் போன்றன) குறைவாகவும் புரதம், காய்கறி, இலைக்கறி மற்றும் பழவகைகள் போன்றன அதிகமாகவும் உட்கொள்ள வேண்டும். சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளுக்கு தற்போது அதிக கிராக்கி நிலவுகின்றது. இவற்றுக்கு குறைந்த அளவிலேயே நோய் நொடிகளின் தாக்கம் ஏற்படுகின்றது. எனவே இவற்றுக்கு குறைவான இரசாயங்களே விசிறப்படுகின்றன. இவை பாதுகாப்பானவை, இயற்கையானவை, சிறந்த உருசி உள்ளவை. எனவே இதனை நுகர்வோர்களுக்கு நோய் ஏற்படும் என்ற வீண் பயம் இல்லை.

**வெற்றுநிலங்களை உரியபடி பயன்படுத்தி உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்போம்!**

மண் நுண்ணங்கிகள் பெருகி அவற்றின் செயற்பாடு அதிகரிக்கும். இதனால் தாவரங்களுக்கு அதிக போசணை கிடைக்கும். இதன் மூலம் கூடிய போஷணைகளை தாவரம் உறிஞ்சவும் உதவும்.

மண்ணின் காற்றோட்டத்தை அதிகரிக்கும். வேர்களுக்கு கூடிய வளி கிடைக்கும். இதனால் மண் இலகுவாக்கப்படும். மண்ணின் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்தி வேர் வளர்ச்சிக்கு உதவும். வேர் ஆழமாக ஊடுருவி செல்லும். மண்ணின் நீரை பிடித்து வைத்திருக்கும் தன்மை அதிகரிக்கும், இதனால் வரட்சியால் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படும்.

## வீட்டில் சேதனப் பசளை தயாரித்தல்:

வீட்டில் மேலதிகமாக காணப்படும் சமையலறைக் கழிவுகளான வெங்காயத் தோல், பாவிக்கப்பட்ட தேயிலைத் தூள், காய்கறித்தூள், வாழைப் பழத்தோல் (பொட்டாசியம் அதிகம்), காய்ந்த இலைகள், தேவையற்ற கடதாசிகள் (நைதரசன் அதிகம்), மரத்தின் இலை, பூக்கள் மிருகங்களின் மலசலக் கழிவுகள் மற்றும் நகர்ப்புறங்களில் பெறப்படும் கழிவுகள், வீட்டுத் திட்டங்களிலும் பண்ணைகளிலும் சேகரிக்கப்படும் கழிவுகளைச் சேகரித்து அவற்றை முறையாக சிதைவடையச் செய்து இவற்றைச் சேதனப் பசளையாக மாற்ற முடியும். முக்கியமாக இதனுள் மாமிச உணவுக் கழிவுப் பொருட்களை கலக்கக் கூடாது.

வீட்டுத்தோட்டம் ஒன்றில் கூட்டெருவை தயாரிக்க குழி எரு மிகவும் பொருத்தமானதாகும். 0.5 மீற்றர் ஆழம், 1.5 மீற்றர் நீளம், 0.45 மீற்றர் அகலம் கொண்ட குழியை தோண்டவும். இதன் பக்கச் சுவர்கள் சரிவாக இருக்க வேண்டும். எனவே இக்குழியின் மேற்புறம் 2 மீற்றர் நீளமும் ஒரு மீற்றர் அகலமும் இருக்கத்தக்கவாறு குழியை அமைக்க வேண்டும்.

இதனை நிரப்புவதற்கு வீட்டுத் தோட்டத்தின் கழிவுகள், குசினிக் கழிவுகள் என்பவற்றை 15 சதம மீற்றர் தடிப்புடைய படையாக இட்டு, இதன் மேல் இளம் இலைகள், சமையலறைக் கழிவுகள் ஆகியவற்றை படையாக இடுதல் வேண்டும். ஒவ்வொரு படையின் மீதும் நீரை தெளித்தபின் அடுத்த படையை நிரப்பவும். நீரைத் தெளிக்கும் போது இதனைக் கழுவிச் செல்லாதவாறு தெளிக்க வேண்டும். உலர் வலயத்தில் கூட்டெருவைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு படையின் மீதும் சிறிய துண்டுகளாகப்பட்ட வாழை மடல் , வாழைத்தண்டுகளை இடுவதால் அதன் ஈரப்பதனையும் பாதுகாக்க முடியும்.

குழியை நிரப்பிய பின் அதன் மீது களியைப் பூசவும் அல்லது கறுப்பு நிற பொலித்தீனால் மூடிய பின் பாரமொன்றை வைக்கவும். குழியின் உள்ளே நீர் செல்வதை தடுப்பதற்காக குழியின் விளிம்பு நில மட்டத்திலிருந்து 1520 சதம மீற்றர் உயரமானதாய் இருத்தல் வேண்டும். முழு குழியையும் மூடக்கூடியவாறு கூரையை அமைப்பது அவசியமாகும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட குழியை 6 வாரங்களின் பின்னர் நன்கு புரட்டி பின் கலந்து விட வேண்டும். ஈரப்பதன் போதாது எனக் கருதும்போது நீரை இடல் வேண்டும். மாட்டுச் சிறுநீரைச் சேர்த்தால் இவை விரைவில் உக்கும். முதலாவது முறை புரட்டி 6 கிழமைகளுக்கு பின் மீண்டும் இதனை கலந்து விடல் வேண்டும். 15, 16 கிழமைகளுக்கு பின் கூட்டெரு பயன்படுத்தக்கூடிய நிலையை அடையும். இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை குழியைப் புரட்டினால் சீராக உக்கிய கூட்டெரு கிடைக்கும்.

## மீன் அமிலம் தயாரித்தல்:

மீனின் தலை போன்ற கழிவுகள் இரண்டு கிலோகிராமை எடுத்து அதனுடன் இரண்டு கிலோகிராம் சர்க்கரையும் ஒரு பிளாஸ்டிக் வாளியில் எடுத்து மூடி கலக்குதல் வேண்டும். இரண்டு வாரங்களின் பின் ஒவ்வொரு நாளும் இதனை குலுக்கிய பின் கரைசலில் இரண்டு மில்லிலீட்டரை எடுத்து அதனுள் இரண்டு லீட்டர் நீரைக் கலந்து தாவரம், பயிர்களின் இலைகளுக்கு காலையும் மாலையும் விசிறலாம். இதனால் இலைகளில் உள்ள பூச்சித் தாக்கங்கள் பங்கசுக்கள் எல்லாம் முற்றாக கட்டுப்பாட்டுக்குள் வரும். இச்சேர்வையை மீன் அமிலம் என்பர்.









**எஸ்.தஸ்தகீர்...**
(கல்முனை குறூப் நிருபர்)

# லண்டனில் கோலாகலமாக அரங்கேறிய பேராசான் நித்தியானந்தனின் பவளவிழா

பேராசான் மு.நித்தியானந்தனின் பவளவிழா லண்டனில் இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்றது. நான்கு முக்கிய அம்சங்களை இந்த இலக்கியவிழாவிலே காணக்கூடியதாக இருந்தது.

மாதங்கி ஜெகதீசனின் இனிய குரலில் தமிழ்த் தாய் வாழ்த்து ஆரம்பமானது.

முதலில் 'மலையகம் 200' என்ற கருத்தரங்கு பெ.சிவஞானம் தலைமையில் மூன்று மலையகப் புதல்வர்களின் பங்கேற்புடன் நடந்தது. பெ.சிவஞானம் பெருங் கவிஞர் பெரியசாமி அவர்களின் புதல்வன். இன்றும் மலையகக் கல்வி வளர்ச்சியில் அயராது பணிபுரிந்து வருபவர்.

நோர்வேயிலிருந்து ஆய்வறிஞர் ந.சரவணன் 'மலையகத் தேசிய இன அடையாளம்: சில கட்ட விழ்ப்புகள்' என்ற பொருண்மையில் ஆற்றிய உரை புதிய உரையாடலுக்கான ஆரம்பமாக அமைந்தது. மலையகத்திற்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினரை 'மலையகம்'

என்ற பதத்திற்குள் கொண்டுவருவது பற்றிய பிரச்சினையைத் தனது சொந்த அனுபவத்துடன் இணைத்து அவர் இந்த அரங்கில் எழுப்பிய கேள்வி முக்கியமானது.

'கடல் கடந்த நாட்கள்' என்ற தலைப்பில் உரையாற்றிய மு.நித்தியானந்தன் இலங்கைத் தமிழரின் அதிஉயர் அரசியல் குழுமமான சேர்.வைத்திலிங்கம் துரைசாமி, பொன் இராமநாதன், பொன் அருணாசலம் ஆகியோரும் தென்னிந்தியாவிலிருந்து மிக அண்மைக் காலத்தில் இலங்கைக்குக் குடிபெயர்ந்தவர்களே என்றும் மலையகத்தவர்கள் தங்களின் இருநூறாண்டுகால வாழ்வில் தமது அடையாளத்தைப் பேணுவதற்காக மிகப் பெரிய விலை கொடுத்துள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

தமிழறிஞரும் வழக்கறிஞருமான செ.சிறீக்கந்தராசா தலைமையில் நடைபெற்ற மு.நித்தியானந்தனின் நூல் அறிமுக விழாவில் கலா ஸ்ரீரஞ்சன் 'மலையக இலக்கியம்: சிறுமைகண்டு பொங்குதல்' என்ற நூலை அறிமுகம் செய்து பேசுகையில், 'மு.நித்தியானந்தனின் நூலை வாசிக்கும்போது தான் நாம் மலையக இலக்கியங்களை வாசிக்காமல் போய் விட்டோமே என்ற குற்ற உணர்வு என் மனதில் ஏற்பட்டது' என்று தெரிவித்தார்.

நிதிமுகாமைத்துவ விரிவுரையாளர் க.சிவானந்தன் 'ஆடல் எங்கேயோ அங்கே' என்ற நூலை அறிமுகம் செய்கையில், 'நித்தியானந்தன் அவர்களின் பரந்துபட்ட வாசிப்பின் முன்னால் நாங்கள் சிறு குழந்தைகளாக உணர்கிறோம். இலக்கிய தாகம் உள்ளவர்களுக்கு இந்நூலில் விரிந்து விரிந்து செல்லும் வழிகாட்டல்கள் நிறையவே உள்ளன' என்று குறிப்பிட்டார்.



இலக்கிய விமர்சகர் மாதவி சிவலீலன் 'பெருநதியின் பேரோசை' நூல் குறித்துப் பேசுகையில், 'நம்மைச் சுற்றி வாழும் ஆளுமைகள் பற்றிய சித்திரங்களை பேராசான் மு.நித்தியானந்தன் அவர்களின் மொழியில் அறியும்போது அவர்களைப் பற்றிய விரிவான பரிமாணம் நமக்குக் கிடைக்கிறது. பத்திரிகையாளர்கள்மீது எப்போதும் அபிமானம் கொண்டிருக்கும் நித்தியானந்தன் இந்த நூலில் முக்கிய ஈழத்துப் பத்திரிகையாளர்கள் ஊடகதர்மத்தைப் பேணிய சரித்திரத்தை விரிவாகப் பேசுகிறார்' என்று தெரிவித்தார்.

ஜெர்மன் மொழிபெயர்ப்பாளர் ந.சுசீந்திரன் 'மலையகச் சுடர்மணிகள்' என்ற நூலை அறிமுகம் செய்யும்போது, 'மலையக ஆளுமைகளை அறிமுகம் செய்யும்போது அவர் அள்ளித் தெளித்திருக்கும் தகவல்கள், அவரது அழகிய தமிழ்நடையில் அபூர்வமான வாசிப்பு அனுபவமாக அமைந்துள்ளன' என்று குறிப்பிட்டார்.

தனது தலைமையை நிறைவு செய்த செ.சிறீக்கந்தராசாவின் நெறிப்படுத்தல் சிறப்பாய் அமைந்தது.

மு.நித்தியானந்தனின் நான்கு நூல்களையும் வெளியிட்டுவைத்து உரையாற்றிய பதிப்பாளர் எம். பௌசர்,"புத்தக கலாசாரத்தை நாம் உறுதியாகக் கட்டி எழுப்ப வேண்டிய அவசிய நிலைமை நம் முன் உள்ளது' என்று தெரிவித்தார்.

நித்தி அவர்களின் நான்கு நூல்களின் முதற் பிரதிகளை நித்தியானந்தன், அவரின் பாரியார் மீனாள் நித்தியானந்தன் ஆகிய இருவரும் நாடகப் பேராசான் ஏ.சி.தாசீசியஸ் அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தனர்.

ஆவணப்பட இயக்குனர் எஸ்.சிறீதரன் இயக்கத்தில் வெளியான 'நித்தி என்னும் பேராசான்' என்ற ஆவணப்படம் திரையிடப்பட்டது. ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்த ஆவணப்படம் சர்வதேசத்தரத்தில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

'நித்தியம்' என்ற மு.நித்தியானந்தனின் பவள விழா மலரை வி.சிவலிங்கம் வெளியிட்டுவைத்தார். எண்பத்தொரு கட்டுரைகளைத் தாங்கி இம்மலர் அரிய கட்டுரைக் களஞ்சியமாக மலர்ந்திருக்கிறது.

பிரணவி சிறீதரன், ராணி நகுலேந்திரன் மாணவிகள், ஸ்ரீமதி துஷ்யந்தி கதிரவேலு மாணவிகள், றஜித்தா சாம் மாணவிகள் ஆகியோரின் அழகிய நடனங்கள் விழாவிற்கு சிறப்பளித்தன. அருண் சிறீக்கந்தராசா குழுவினரின் மெல்லிசைப் பாடல்களும் செவிக்கு விருந்தளித்தன.

லண்டன் மெய்வெளி தொலைக்காட்சி நித்தியின் நேர்காணல்களை வாரம் முழுவதும் தொகுத்து வழங்கி இருந்தது. ஒளிப்பதிவாளர் எஸ். சாந்தன் முழு நிகழ்ச்சியினையும் படத் தொகுப்பிற்குள் கொணர்ந்துள்ளார்.

முழுநிகழ்ச்சிகளையும் றஜித்தா சாம் சிறப்பாகத் தொகுத்தளித்தார்.

இந்தப் பவள விழாவினை ஒருங்கிணைத்து வழங்கியதில் மீனாள் நித்தியானந்தனின் பேருழைப்பு பாராட்டத்தக்கது.

நித்தியானந்தனின் பவளவிழாவில் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டவீரகேசரிபிரதமஆசிரியர்ஸ்ரீகஜன் உரையாற்றுகையில் நித்தியானந்தனின் கட்டுரைகளை வாசிக்க மிகப்பெரும் வாசகப் பரப்பு காத்திருக்கிறது. அவரது கட்டுரைகளைப் பேணி வைத்திருப்போர்கள், அவரின் பழைய கட்டுரைகளைத் தேடி வருவோர் என்று இன்றுமே அவரின் கட்டுரைகளுக்குத் தனி மதிப்புண்டு.





பேராசான் மு.நித்தியானந்தன் அவர்களின் பவளவிழாவை முன்னிட்டு மலையக இலக்கியத்தின் புதுவரவாக நான்கு நூல்கள் வெளிவந்துள்ளன. அவரது பவளவிழாவில் நான் இலங்கையில் இருந்து வருகைதந்து கலந்துகொள்வதை பெரும்பாக்கியமாக கருதுகிறேன். அவரது எழுத்துப்பணிகளும், கலை இலக்கிய சமூகப் பணிகளும் மேலும் தொடர வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்து, அவர் நூறாண்டு காலம் வாழவேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகின்றேன்" என்றார்.

**துரை சிவபாலன்...**

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்தியம் தேசிய ரீதியில் வெற்றி

ஒரு தேசத்தின் சமூக பொருளாதார ஆரோக்கியம் போன்றவற்றில் ஆழமான தாக்கத்தினை செலுத்த வல்லது சுத்தமான நீரினை தொடர் கண்காணிப்பின் ஊடாக வழங்கி தேசத்துக்கு உயிரூட்டும் பணியினை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மேற்கொண்டு வருகிறது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தனது இலக்கின் அடிப்படையில் பாவனையாளர்களுக்கு உன்னத சேவையினை நாடளாவிய ரீதியில் வழங்கும் வகையில் 04 மேலதிக பொதுமுகாமையாளர் வலயங்களின் கீழ் மாகாண அடிப்படையில் 12 பிராந்திய சேவை நிலையங்களையும் 34 பிராந்திய முகாமையாளர் காரியாலயங்களையும் அவற்றின் நேரடி கண்காணிப்பின் கீழ் அமையும் வகையில் 348 நீர் வழங்கல் திட்டங்களையும் இதுவரை ஸ்தாபித்து சுத்தமான நீரினை சகாய கட்டண அடிப்படையில் தனது 2,905,194 பாவனையாளர்களுக்கு வழங்கி வருகிறது.



தேசிய நீர் வழங்கல் சபை உலக நீர் தினத்தை முன்னிட்டு அதன் உள்ளக பிரிவுகளுக்கிடையே தேசிய ரீதியிலான பல போட்டிகளை வருடாந்தம் நடாத்தி வருகிறது. அந்த வகையில் இவ்வருட உலக நீர் தினம் 2023 ஐ முன்னிட்டு நடாத்தப்பட்ட சிறந்த பிராந்திய அலுவலகம் என்னும் பிரிவில் அலுவலக கட்டமைப்பு இயக்குதல் மற்றும் பராமரிப்பு தொடர்பான நடவடிக்கைகள், புதிய நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை, நீர் பட்டியல் கட்டண அறவீடு வருமானம் மற்றும் செலவீனங்களுக்கு இடையிலான விகிதம் புதிய தொழில்நுட்ப அறிமுகம், குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்கள் மற்றும் அவற்றின் அடைவுகள் 5எஸ் திட்ட நடைமுறை போன்ற 24 விடயங்களை கருத்தில் கொண்டு சபையின் உயர் நிலை முகாமைத்துவ மத்தியஸ்த நிபுணர் குழுவினால் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் அக்கரைப்பற்று முகாமையாளர் அலுவலகம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளது.

இதற்கான விருது அண்மையில் இடம்பெற்ற உலக நீர் தின தேசிய நிகழ்வில் வைத்து அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் யூ.கே.எம். முஸாஜித்துக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சபையின் நாடளவிய ரீதியில் உள்ள 34 பிராந்திய முகாமையாளர் காரியாலயங்களுள் அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களை உள்ளடக்கிய அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயம் 2007ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இது தற்போதைய நிலையில் 13 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 399,789 மக்கள் தொகையினை கொண்டதாகும். அக்கரைப்பற்று பிராந்தியத்தின் கீழ் 12 நீர் வழங்கல் திட்டங்களும் இரு நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் உள்ளன. அவைகளில் சாகாமம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தினுடாக திருக்கோவில் பிரதேசத்திற்கும் பொத்துவில் நீர் சுத்திகரிப்பு நிலையத்தினுடாக பொத்துவில், பாணம போன்ற பிரதேசங்களுக்கும் நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இவை தவிர ஏனைய பிரதேசங்களான கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, கரைதீவு, நிந்தவூர், ஒலுவில் பாலமுனை, அட்டாளைசேனை, அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு, இறக்காமம் தீகவாபி போன்ற பிரதேசங்களுக்கான நீர் விநியோகம் கொண்டுவட்டுவான் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் நிலையில் நாவிதன்வெளி மத்திய முகாம் ஆகிய பிரதேசங்களுக்கான நீர் விநியோகம் ஹிமிதுராவ நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இப்பிராந்தியத்திலுள்ள 274 கிராம சேவகர் பிரிவுகளில் இதுவரை பதிக்கப்பட்டுள்ள 1,447 கிலோமீற்றர் நீர் விநியோக குழாய் வலையமைப்பு ஊடாக 97,328 இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இப்பிராந்தியத்திலுள்ள சில பின்தங்கிய கிராமங்களுக்கான நீர் விநியோகம் கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில் இப்பிராந்தியத்தின் 86 சதவீதமான பிரதேசங்களுக்கு நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய பிரதேசங்களுக்கான நீர் விநியோக விஸ்தரிப்புக்கான திட்டமிடல்களும் செய்யப்பட்டுள்ளன.

இது மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களை விட கூடுதலான நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள ஒரு பிராந்தியமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு நவீன தொழிநுட்ப அம்சங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டலுக்கு அமைவான நீர் பாதுகாப்பு திட்ட அமுலாக்கமும் இங்கு நடைமுறையில் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. மேலும் வாடிக்கையாளர்கள் தமது சேவையினை இலகுவாக பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் தேவையான சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் அக்கரைப்பற்று பிராந்தியத்தின் வணிகப் பிரிவின் பாவனையாளர் சேவை நிலையத்திற்கு முறையே 2015ம் ஆண்டு இரண்டாமிடமும் 2017ம் ஆண்டு மூன்றாமிடமும் 2018ம் ஆண்டு முதலாமிடமும் கிடைக்கப்பெற்றமையும் இங்கு பதிவிடத்தக்கதாகும். மேலும் கொவிட் பரவல் காலத்தில் பாவனையாளர்களால் பல மில்லியன் ரூபாக்கள் செலுத்தப்படாமல் நிலுவையாக காணப்பட்ட நிலையில் அதனை அறவீடு செய்வதற்காக நடமாடும் காசாளர் கருமபீடங்களை உருவாக்கி அதன் மூலம் பெரும் தொகை பணம் பாவனையாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டு தேசிய ரீதியில் அக்கரைப்பற்று பிராந்தியத்திற்கு முதலாம் இடம் கிடைக்கப்பெற்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

தேசிய நீர் வழங்கல் சபையின் மேலதிக பொது முகாமையாளர் (கிழக்கு, ஊவா, தெற்கு), பிரதி பொது முகாமையாளர் (கிழக்கு), உதவி பொது முகாமையாளர் (கிழக்கின் தெற்கு) ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு மத்தியில் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் யூ.கே.எம்.முஸாஜித்தின் சிறந்த முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல், அமுலாக்கம், தொடர் கண்காணிப்பு போன்றவற்றுடன் அங்கு கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் குழுப் பணி ஊடாகவே மேற்படி வெற்றிகிட்டியுள்ளது.



**எம்.எஸ்.எம்.சறூக்...**
சிரேஷ்ட சமூகவியலாளர்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, பிராந்திய காரியாலயம், அக்கரைப்பற்று

## வெடுக்குநாறிமலை விவகாரம் குறித்து...

ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் வாரங்களில் இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடி சரியான தீர்மானம் எடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உறுதியளித்துள்ளார்.

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விவகாரம் தொடர்பாக (03) அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதே, இவ்விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவைக் கூட்டத்தில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"வவுனியா, வெடுக்குநாறிமலையை 2018ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களம் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமாக அடையாளப்படுத்தியிருந்தது. (ஆனாலும், இதுவரை அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை). தொடர்ச்சியாக, 2019ஆம் ஆண்டிலிருந்து வெடுக்குநாறிமலையில் அமைந்திருக்கும் புராதன ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளுக்கு தொல்லியல் திணைக்களத்தினால் இடையூறு ஏற்படுத்தப்பட்டே வருகின்றது.

இந்நிலையிலேயே, 2020ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம், பொதுமக்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான தடை உத்தரவுகளையும் பிறப்பிக்கவில்லை. சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கு அனுப்பி வைத்துள்ளதாக சொல்லப்படுகிறது.

இது தொடர்பாக சட்ட மாஅதிபர் தரப்புகளுடன் கலந்துரையாடிய போது, வழக்குக் கோவை இன்னும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் கிடைத்தவுடன் உரிய ஆலோசனைகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே, வெடுக்குநாறிமலை விவகாரத்தில் நீதிமன்றம் எந்தவிதமான தடை உத்தரவுகளையும் வழங்காத போதிலும், வழக்கு நிலுவையில் இருப்பதை காரணம் காட்டி, உடைக்கப்பட்ட சிலைகளை மீளப் பிரதிஷ்டை செய்வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அதேவேளை, குருந்தூர் மலையில் விகாரை அமைப்பதற்கு இடைக்கால தடையை நீதிமன்றம் விதித்திருக்கின்ற போதும், விகாரை கட்டி முடிக்கப்பட்டிருப்பதை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் தமிழ் மக்களை மாத்திரமல்ல, நியாயமாகவும் நடுநிலையாகவும் சிந்திக்கும் அனைவருக்கும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சரவையில் கூட உண்மை மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விவாதத்துக்கு வந்திருக்கிறது.

இவையெல்லாம் அர்த்தபூர்வமானவையா? என்ற எண்ணத்தை நடக்கின்ற சம்பவங்கள் தோற்றுவிக்கின்றன" என்று தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த விடயம் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற அதிருப்திகளையும் அதில் இருக்கின்ற நியாயத்தையும் புரிந்து கொள்வதாகவும் எதிர்வரும் வாரங்களில் சம்மந்தப்பட்ட அனைவருடனும் கலந்துரையாடி சரியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே தன்னுடைய நிலைப்பாடு எனவும் தெரிவித்தார்.

## கலால் தொழிற்சங்கம் இன்று...

தொழிற்சங்க ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கலால் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த மூன்று வருடங்களாக ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவில்லை. தொடர்ந்தும் நிதி அமைச்சர் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அதனால் நாம் இன்று ஏப்ரல் 06ஆம் திகதி ஒரு நாள் வேலைநிறுத்தத்தை நடத்த முடிவு செய்திருந்தோம்.

அன்றையதினம் அனைத்து கலால் திணைக்கள அலுவலகங்களை மாத்திரம் அல்ல, மதுபான உற்பத்தி தொழிற்சாலைகளையும் மூடுவதற்கு தீர்மானித்திருந்தோம். அவ்வாறு நாங்கள் மூடினால் அன்றையதினம் உற்பத்திகள் நிறுத்தப்பட்டு 100 கோடி ரூபா வரிப்பணம் அரசாங்கத்துக்கு கிடைக்காமல் போகும்.

நாம் இந்த தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்திருந்த வேளை, இது தொடர்பாக பல கட்டங்களாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. கடந்த நான்காம் திகதி கலால் ஆணையாளர் நாயகத்துடனும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடனும் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்ன பிரியவுடனும் கலந்துரையாடல்களை நடத்தினோம்.

அதற்கு எமக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளது. அதனால் நாம் இன்று 06ஆம் திகதி நடத்தவிருந்த வேலைநிறுத்தத்தை இரத்துச் செய்ய தீர்மானித்துள்ளோம்.

நாம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் மதுபான உற்பத்தி செய்யும் அனைத்து தொழிற்சாலைகளும் எமது பொறுப்பிலேயே உள்ளன. அவற்றின் வருமான வரி பிரிவில் பணியாற்றுவதும் எமது அதிகாரிகளே. அவற்றில் பாதுகாப்பு முத்திரை இடல், சட்டவிரோத மதுபான சுற்றிவளைப்பு போன்ற பணியிலும் அவர்களே ஈடுபட்டுள்ளனர்.

நாம் எமது பணியை நிறுத்தினால் அன்றையதினம் மதுபான உற்பத்தி நிறுத்தப்படும். தற்போது பண்டிகைக் காலம் என்பதால் மதுபான உற்பத்தி அதிகமாகும். சில நிறுவனங்கள் 24 மணி நேரமும் சில நிறுவனங்கள் 16 மணி நேரமும் வேலை செய்கின்றன.

நாம் நாளொன்றுக்கு 100 கோடி தொடக்கம் 110 கோடி ரூபா பணம் வரி மூலம் கிடைக்கின்றது எனக் கணக்கிட்டுள்ளோம்.

அதைத் தவிர சுற்றுவளைப்புத் துறை அதிகாரிகள் 700 பேர் வரை பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் நடவடிக்கைகள் மூலம் குறிப்பிட்ட அளவு அபராத பணம் அரசுக்கு கிடைக்கும். நாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் அந்தப் பணமும் கிடைக்காமல் போகும். அதனால் நாம் இன்று வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதில்லையென்று முடிவு செய்துள்ளோம் என, அவர் தெரிவித்தார்.

## கடற்றொழிலாளர் பிரச்சினைகளுக்கு...

மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பில் அவர் கலந்து கொண்டார்.

தொடர்ந்து, நீண்டகாலமாக ஆழப்படுத்தப்படாமல் இருக்கின்ற கற்பிட்டி, கண்டக்குளி முகத்துவார பகுதியை அவர் பார்வையிட்டதுடன், அங்கு கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைக்கு இடையூறாக இருக்கும் முகத்துவாரப் பகுதியை ஆழப்படுத்துவதற்கான மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

கண்டக்குளி முகத்துவாரம் தூர்வாரப்படுவதன் மூலம் அந்தப் பிரதேசத்தில் கடற்றொழிலை ஜீவனோபாயமாகக் கொண்ட சுமார் 200 குடும்பங்கள் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதனையடுத்து, சிலாபம் மீன்பிடித் துறைமுகத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்குள்ள மீன் விற்பனை நிலையத்தை பார்வையிட்டதுடன், வியாபாரிகள் மற்றும் இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

பின்னர், நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த தெப்பத்தின் மூலம் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்ற சிறுதொழிலாளர்களை சந்தித்துக் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

குறிப்பாக, நீர்கொழும்பு பிரதேசத்தில் சுமார் 110 தெப்பம் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். பாரம்பரியமாக தாங்கள் தொழிலில் ஈடுபட்டு வரும் சுமார் 2 கிலோமீற்றர் கடற்பரப்பை தமக்கான மீன்பிடிப் பிரதேசமாக வரையறை செய்து தருமாறு கோரிக்கை விடுத்ததுடன், தமது பாரம்பரிய தொழில் பிரதேசத்தினுள் இயந்திரப் படகுகள் மூலம் தொழில் செய்பவர்கள் உட்பட ஏனையோர் தொழிலை மேற்கொள்வதால் வாழ்வாதாரத்தை இழப்பதாகவும் முறையிட்டனர்.

இவ்விடயம் உட்பட தெப்பம் தொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆராய்ந்து நியாயமான தீர்வு வழங்கப்படுமென, இதன்போது கடற்றொழில் அமைச்சர் உறுதியளித்தார்.

## அமெரிக்க, சீன, அவுஸ்திரேலிய...

நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகச் சந்தையில் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அனுமதி வழங்க மார்ச் 27ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இந்நிலையிலேயே, இந்த நிறுவனங்களுடன் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவுள்ளதாகவும், அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "எரிபொருள் விநியோகத்துக்கு 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கல் தொடர்பாக எதிர்வரும் 3 வாரங்களுக்குள் ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. இந்த 3 நிறுவனங்களுக்கும் தலா 150 வீதம் எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

எமக்கு உரிமம் உள்ள 234 எரிபொருள் நிரப்பும் நிலையங்களைத் தவிர்த்தே மேற்கூறப்பட்ட நிறுவனங்களினால் மேலதிக எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. இவற்றில் எமக்கு உரித்து காணப்படாது. மாறாக, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களால் அவை நிர்வகிக்கப்படும்.

இந்த நிறுவனங்களுக்கும் எரிபொருள் விலை சூத்திரத்துக்கமைய, அரசாங்கத்தினால் எரிபொருள் விலை தீர்மானிக்கப்படும். ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் அவற்றால் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும். பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் அதன் அடிப்படையில் தற்போதும் சுயாதீன நிறுவனமாகவே செயற்பட்டு வருகிறது" என்றார்.

## 283 கிலோ கஞ்சாவுடன்...

மேற்கு திசையில் கடல் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கடற்படையினரும் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கைகளின் போது, டிங்கிப் படகு மூலம் கடத்தி வரப்பட்ட 9 கோடி ரூபா பெறுமதியான 283 கிலோகிராம் கேரள கஞ்சாவைக் கைப்பற்ற முடிந்ததாக, கடற்படையினர் தெரிவித்தனர். கடற்படையினரும் கடல் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகளும் மேற்படி பகுதியில் வந்துகொண்டிருந்த டிங்கிப் படகை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டுள்ளனர். இதன்போது, 6 உரப் பைகளில் 76 பார்சல்களாக கட்டப்பட்டிருந்த 283 கிலோ 700 கிராம் கேரள கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளதாகவும், கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அந்த கேரள கஞ்சாவின் பெறுமதி 93 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதென்றும் கைதுசெய்யப்பட்டுள்ள மூவரும் முறையே 19 51 வயதுக்கிடைப்பட்டவர்களென்றும் அவர்கள் மன்னார், பேசாலை பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்களென்றும் விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகத் தெரிவித்த கடற்படையினர், கேரள கஞ்சாவையும் சந்தேக நபர்களையும் நெடுந்தீவு பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## திரிபோஷா போதியளவு கையிருப்பில் உள்ளது...

இலட்சம் திரிபோஷ பக்கற்றுகள் சுகாதாரத் திணைக்களத்துக்கு வழங்கப்படுவதாக, திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்தார். அதன்படி, ஏப்ரல் மாதம் முழுவதும் தேவையான திரிபோஷா வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

உலக உணவு ஸ்தாபனத்தினால் 11,200 மெற்றிக்தொன் சோளமும் 350 மெற்றிக்தொன் சோயாபீன்களும் திரிபோஷாவுக்காக வழங்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

நாட்டில் திரிபோஷாவின் மாதாந்தத் தேவை 19 இலட்சம் பக்கற்றுகளாகும் என்பதுடன், மேலும் நாடு முழுவதும் வாழும் அனைத்துக் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோஷா சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்களால் வழங்கப்படுகிறது.

தமது நிறுவனம் உரிய நியமங்கள் மற்றும் சிபாரிசுகளுக்கு அமைவாக திரிபோஷாவை உற்பத்தி செய்வதோடு, சுகாதார திணைக்களத்தினால் நடத்தப்படும் கிளினிக்குகளுக்கு தேவையான திரிபோஷா கையிருப்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## ஏப்ரல் 15 வரை சூரியன்...

மேலாக நண்பகல் 12.13 மணியளவில் சூரியன் உச்சம் கொடுத்ததாக, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில், கடும் வெப்பமான காலநிலையைக் கருத்தில் கொண்டு சுகாதாரத் துறையினர் சுகாதார நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருக்குளத்தில் மூழ்கி...

பலியாகியுள்ளனர். நங்க நல்லூரிலுள்ள தர்மலிங்கேஸ்வரர் கோவிலில் தீர்த்தோற்சவம் நடைபெற்றது. இதில் 25க்கும் மேற்பட்ட ஆலய அர்ச்சகர்கள் சுவாமியை திருக்குளத்தில் இறக்கி நீராடிய போது, ஒருவர் குளத்தில் மூழ்கியுள்ளார். அவரைக் காப்பாற்ற சென்றவர்களில் 5 பேர் அடுத்தடுத்து நீரில் மூழ்கினர்.

நங்க நல்லூர் அருகே கோவில் திருவிழாவில் 5 அர்ச்சகர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் பக்தர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 'கெப் ரக' வண்டியுடன் ஆட்டோ...

பயணித்த முச்சக்கரவண்டியொன்று எதிர்த்திசையில் வந்த கெப் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த முச்சக்கரவண்டிச் சாரதியான பொலிஸ் சார்ஜன்ட் (44 வயது), அவரது மனைவி (42 வயது) மற்றும் அவருடைய தந்தை (70 வயது) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். முச்சக்கரவண்டியில் பயணித்த 12 வயதுச் சிறுவன் படுகாயமடைந்து மொணராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பில் கெப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் அப்போது மது போதையில் இருந்ததாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொத்து, உணவுப்பொதி...

சங்கம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் முதல் இந்த விலைக் குறைப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 20 வீதத்தால் அந்த விலைக் குறைப்பை மேற்கொண்டுள்ளதாகவும், அந்தச் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேநீரின் விலையையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், பிளேன் ரீயின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வகையில், பிளேன் ரீ ஒன்றின் புதிய விலை 30 ரூபாவாகவும் பால் தேநீரின் விலை 90 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு உரத்துக்கு...

வேலைத்திட்டத்திலிருந்து விலகியுள்ளதாகவும் அந்த நடவடிக்கைகளை முழுமையாகத் தனியார் துறையினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும், தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இம்முறை சிறுபோகத்தில் யூரிய உரம் மற்றும் ரி.எஸ்.பி. உரம் ஆகியவற்றை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் 6.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரி.எஸ்.பி. உரத்தை பகிர்ந்தளிப்பதற்காக இரண்டு பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியை மக்களுக்கு நிவாரணத் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுப்பதன் மூலம் விவசாயிகள் அவர்களுக்குத் தேவையான வகையில் தேவைப்படும் காலத்தில் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் பொருளாதாரம்...

பொருளாதாரம் படிப்படியாக திருப்புமுனையை அடையும் என்றும், அந்த வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2019ஆம் ஆண்டு விலக்களிக்கப்பட்ட வரியை மீண்டும் நடைமுறைப்படுத்தியமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் வசதியை பெற்றுக் கொண்டுள்ளமை ஆகிய காரணங்கள் நாட்டின் பொருளாதாரத்தை

நிலையானதாக முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்பாக அமைந்துள்ளதாகவும், அந்த வங்கி தெரிவித்துள்ளது.

தவறான பொருளாதாரக் கொள்கையை முன்னெடுத்தமை காரணமாகவே இலங்கை இந்தளவு கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேர்ந்ததாகவும் அந்த வகையில்,

நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் திட்டத்தில் முறையான மறுசீரமைப்பு அவசியம் என்றும், அந்த வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதானது நீண்டகாலத் திட்டமாக அமைவதுடன், அந்தத் திட்டங்களின் போது வறுமை மற்றும் நிவாரணங்கள் தேவையான மக்களை பாதுகாப்பது மிகவும் முக்கியமானது என்றும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் உத்சவ் குமார் தெரிவித்துள்ளார்.

## திறைசேரியூடாக தொடர்ந்தும்...

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், முக்கியமான 52 அரச நிறுவனங்களில் 39 அரச நிறுவனங்கள் இலாபமீட்டும் நிறுவனங்களாகவும் மேலும் 13 நிறுவனங்கள் நட்டமீட்டும் நிறுவனங்களாகவும் காணப்படுவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், நட்டமீட்டும் 13 அரச நிறுவனங்களின் மூலம் 1,029 மில்லியன் ரூபா நட்டமேற்படுவதாகவும் 39 இலாபமீட்டும் நிறுவனங்கள் மூலம் 218 பில்லியன் ரூபா இலாபம் கிடைப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் பொதுவாக அரச நிறுவனங்கள் மூலம் வருடாந்தம் 811 பில்லியன் ரூபா நட்டமேற்படுவதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, இலாபமீட்டும் நிறுவனங்கள் மூலம் 28 மில்லியன் ரூபா மட்டுமே திறைசேரிக்கு வழங்க வேண்டிய வரியாக வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் மக்கள் மீது சுமைகளைக் கூட்டி தொடர்ந்தும் இவ்வாறான நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்லாமல் அதனை முன்னெடுத்துச் செல்லும் அதிகார சபையாக அரசாங்கம் நடவடிகையெடுக்கும் என்றும், இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சத்திரசிகிச்சையின்... (03 ஆம் பக்கத் தொடர்)

வலி காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடந்த 30.03.2023 வியாழக்கிழமையன்று அனுமதிக்கப்பட்டார்.

இவருக்கு பித்தப்பையில் கல் இருப்பதாகத் தெரிவித்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை சத்திர சிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து, சிறுமி சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இதன் பின்னர், முதலாம் திகதி சனிக்கிழமை சிறுமியின் சடலம் அவரது பாலமுனையிலுள்ள வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்வதற்கான நடவடிக்கையை குடும்பத்தினர் மேற்கொண்டிருந்த போது, சிறுமியின் மரணத்தில் சந்தேகம் காணப்படுவதாக காத்தான்குடி பொலிஸாருக்கு தெரிய வந்ததையடுத்து, பொலிஸார் சடலத்தை மீண்டும் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் ஆலோசனையின் பேரில் காத்தான்குடி பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம். ரஹீம் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவானின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

சிறுமியின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதவான் உத்தரவிட்டார்.

இதையடுத்து பிரேத பரிசோதனையின் பின்னர் செவ்வாய்க்கிழமை(04) சிறுமியின் சடலம் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டு, அன்றையதினமே பாலமுனையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ரஹீம் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இந்தச் சிறுமிக்கு சத்திர சிகிச்சை செய்த வைத்தியர்களிடமிருந்து வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சிறுமி இந்தக் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை எனவும் தெரிய வருகின்றது. இந்தச் சம்பவம் அப்பிரதேசத்தை பெரும் சோகத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

## கொழும்பில் தவத்திரு... (03 ஆம் பக்கத் தொடர்)

அருளுரையையும் ஆசியுரையையும் அவர் வழங்கவுள்ளார்.

தமிழகத்திலிருந்து வருகை தரும் சுவாமியின் ஆன்மிக

அருளுரையைக் கேட்டு இறையருள் பெறுவதோடு, சுவாமியின் அருளாசியையும் பெற்றுக்கொள்ளுமாறு, தெட்சணத்தார் ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய அறங்காவலர்கள்

வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## இந்தியாவிலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

4 நாட்களுக்கு முன்னர் மேலும் ஒரு மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்த முட்டை இருப்பு, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் நேற்று (05) ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும், ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை சாதாரண நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும், அவர் தெரிவித்தார்.

## 'ஹரக் கட்டா'... (03 ஆம் பக்கத் தொடர்)

வர்த்தகரான குடு சலிந்து ஆகியோர் குற்றத்தடுப்பு விசாரணை பொலிஸ் அதிகாரிகளினால் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். அந்தக் குற்றவாளிகள் இருவரையும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய, தடுத்துவைத்து குற்றத்தடுப்பு விசாரணை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், அந்த உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளில் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களுக்கிணங்க மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவரது மனைவியை சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கைது செய்து நாட்டுக்கு அழைத்துவருவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## தொழில் சட்டம்... (03 ஆம் பக்கத் தொடர்)

தொழில் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

எதிர்வரும் மே மாதமளவில் சட்டமூலம் தயாரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்தாலும், அதற்கு பின்னரும் தேவையான கருத்துகளை வழங்குவதற்கு வாய்ப்புகள் வழங்கப்படும் என்றார்.

"நாட்டில் நடைமுறையில் உள்ள தொழில் சட்டம் தொடர்பில் தற்போது மாறிய அளவில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஒருபுறம் முதலீட்டாளர்கள் தொழில் சட்டம் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் போது, மறுபுறம் தொழிலாளர்களும் தமது பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

அந்த வகையில், முழு நாடும் மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில் தொழில் சட்டத்தை மாற்றம் செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வலுவான ... (03 ஆம் பக்கத் தொடர்)

குறைந்து வருவதால், வேலை மற்றும் வருமான இழப்புகள் தீவிரமடைவதுடன், விநியோகத் தடைகள் மோசமாகவுள்ளன.

இது உற்பத்தியை பாதிக்குமென்றும், உலக வங்கி தெரிவித்துள்ளது. இது 2023க்கு பிறகும் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க சவால்களை ஏற்படுத்தும்.

இந்நிலையில், தற்போதைய நெருக்கடியை வெளிப்புற நிதி ஆதரவின் மூலம் தீர்க்க முடியும். அத்துடன், இவ்வாறான நெருக்கடியானது சாதாரண சூழ்நிலைகளில் கடினமான, ஆழமான மற்றும் நிரந்தரமான கட்டமைப்புச் சீர்திருத்தங்களை செயல்படுத்த ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தை இலங்கை பயன்படுத்தி கட்டமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும், உலக வங்கி வலியுறுத்துகிறது.

## தினகரன் Business

# பீப்பள்ஸ் லீசிங் நிறுவனத்துக்கு ஐரோப்பிய விருது



பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, தர ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய சங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்ட பெறுமதிமிக்க சிறந்த நடைமுறைகள் ஐரோப்பிய விருதினை பீப்பள்ஸ் லீசிங்கின் தலைவர் பிரதீப் அமிர்தநாயகம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ஷமிந்த்ர மார்செலின் முன்னிலையில் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளித்தார்.

ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், பொது அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கான தர ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய சங்கத்தின் ஐரோப்பிய விருதுகளின் வருடாந்த அங்கீகாரத் திட்டத்தின் கீழ், பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி 2022இல் சிறந்த நடைமுறைகளுக்கான ஐரோப்பிய விருதை பெற்றுக் கொண்டது.

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் தலைவர் பிரதீப் அமிர்தநாயகம் மற்றும் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ஷமிந்த்ர மார்செலின் ஆகியோர் பெல்ஜியத்தின் பிரசல்ஸில் உள்ள, லீ பிளாசா பெல்ரூமில் (*Le Plaza's Ballroom*) 'தியேட்டரில்' விருதைப் பெற 11 டிசம்பர் 2022இல் அழைக்கப்பட்டனர். இது வரலாற்று தருணமாக கருதப்படுகிறது.

# 'The Debater with aat' மீண்டும் சிரச டிவியில்



சம்பிரதாய பாடசாலை விவாத போட்டிகளில் இருந்து விலகி புதிய முறைமையை அறிமுகப்படுத்திய *'The Debater with aat'* நான்காவது தடவையாக 2023 ஏப்ரல் 15 ஆம் திகதியில் இருந்து மாலை 6 மணிக்கு சிரசி டிவியில் ஒளிப்பரப்பாகவுள்ளது.

பிரித்தானிய பாராளுமன்ற விவாதங்களை அடிப்படையாக கொண்டமைக்கப்பட்ட *'The Debater with aat'* பாடசாலை விவாதப்போட்டிகளின் முதல் போட்டி 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.இறுதி வருடமாக 2015 ஆம் ஆண்டு மூன்றாவது போட்டியின் இறுதி போட்டியில் கொழும்பு விசாகா வித்தியாலயம் மற்றும் கண்டி தர்மராஜ வித்தியாலயத்திற்கு இடையில் நடைபெற்ற பலமான போட்டியில் கொழும்பு விசாகா வித்தியாலயம் வெற்றி பெற்றது.

காலத்திற்கு தேவையான தலைப்பில் வாத விவாதங்களுக்கு களம் அமைப்பதோடு எதிர்கால சந்ததியினருக்கு கருத்து தெரிவிப்பதற்கான சந்தர்ப்பமாகவும் *'The Debater with aat'* அமைந்துள்ளது.இம் முறை 64 பாடசாலைகளிலுள்ள விவாத அணிகள் பங்குபற்றுவதோடு, நாட்டிலுள்ள சிங்கள் மொழி மூல எந்த பாடசாலைக்கும் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதோடு முதல் சுற்றில் 64 பாடசாலைகளும் தேர்ந்தெடுக்கப்படும்.

பின்னர் இறுதி போட்டியுடன் 34 நிகழ்ச்சிகள் ஒளிப்ரப்படவுள்ளன.

# SLT–MOBITEL இனால் Future Minds கண்காட்சிக்கு வலுவூட்டல்




இலங்கையின் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், *SLTMOBITEL* இனால் *Future Minds* உயர் கல்வி கண்காட்சிக்கு அனுசரணை வழங்கியிருந்தது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (*BMICH*) மார்ச் 17 முதல் 19 வரை இடம்பெற்ற இந்த கண்காட்சியில், *SLTMOBITEL* இனால் இலவச *SLT WiFi* வசதி வழங்கப்பட்டதுடன், எதிர்வரும் ஜூன் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் கண்டி சிட்டி சென்ரர் மற்றும் காலியில் ஜூலை 1 மற்றும் 2ஆம் திகதிகளில் இடம்பெறும் நிகழ்வுகளிலும் இந்த இலவச *SLT WiFi* வசதியை வழங்க முன்வந்துள்ளது.

நிகழ்வில் *SLTMOBITEL* பிரசன்னத்தைக் கொண்டிருந்தமையினூடாக விருந்தினர்களுக்கு கண்காட்சிகளின் போது இணைப்பில் இருக்கவும், தடங்கலில்லாத இணைய பாவனையை மேற்கொள்ளவும் முடிந்தது.

LOLC இன் AlFalaah Takafu இனால், முழுக் குடும்பத்துக்கும்

# பாதுகாப்பளிக்கும் "Family First" காப்புறுதித் திட்டம் அறிமுகம்




*LOLC* லைஃவ் அசூரன்ஸ் லிமிடெட்டின் மாற்று காப்புறுதிச் சேவைகள் அலகான *AlFalaah Takafu* இடமிருந்து, *''Family First'* காப்புறுதிச் சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனூடாக முழுக் குடும்பத்துக்கும் பரிபூரண நிதிப் பாதுகாப்பை பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

2007 ஆம் ஆண்டு முதல் *LOLC AlFalaah* இனால், இலங்கையின் வட்டிசாராத இஸ்லாமிய நிதிச் சேவைகள் பிரிவில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படுத்தப்பட்டதுடன், துறையின் நியம வடிவமைப்பாளராக அமைந்திருந்தது.

*LOLC* குழுமத்தின் மாற்று நிதிச் சேவைகள் பெருமளவு வெற்றியளித்திருந்ததைத் தொடர்ந்து, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பொதுக் காப்புறுதி மற்றும் ஆயுள் காப்புறுதி சேவைகள் அறிமுகம் செய்யப்பட்டதுடன், வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அதன் இஸ்லாமிய நிதித் தீர்வுகளை விரிவாக்கம் செய்திருந்தது.

*LOLC* குழுமத்தின் வலிமை மற்றும் உறுதித் தன்மை ஆகியவற்றின் பின்புலத்துடன், நாடளாவிய சேவை நிலையங்களினூடாக, *AlFalaah Takaful* என்பது, தனது சகல தீர்வுகளினூடாகவும் வாடிக்கையாளர்களுக்கு பெருமளவு சௌகரியத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. ஷரிஆ மேற்பார்வை சபையின் (*SSB*) நேரடிக் கண்காணிப்பின் கீழ் காணப்படுவதுடன், சகல தீர்வுகளும், செயன்முறைகளுக்கும் ஒழுங்குவிதி முறைகளையும் கொள்கைகளையும் பின்பற்றுகின்றமையை உறுதி செய்வதற்காக உள்ளக ஆலோசகரையும் கொண்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதி தொழிற்துறையில் ரூ. 4 பில்லியன் எனும் மைல்கல்லை வேகமாக எய்திய நிறுவனம் என்பதற்காக கௌரவிப்பைப் பெற்றிருந்தது. 2022 ஆம் ஆண்டில், *LOLC* லைஃவ் அசூரன்ஸ், 12% கட்டுப்பண வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. ஆயுள் காப்புறுதித் துறையில் பதிவு செய்திருந்த அதியுயர் புதிய வியாபார வளர்ச்சிப் பெறுமதியான 31.26% ஐயும் கொண்டிருந்தது.

# இந்திய ரூபாவை வர்த்தகத்தில் பயன்படுத்த மலேசியா இணக்கம்

இந்தியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளில் இந்திய ரூபாயைப் பயன்படுத்த மலேசிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. இதன் பொருட்டு கோலாலம்பூரில் இயங்கும் மலேசிய சர்வதேச இந்திய வங்கி இதற்கு வசதியளிக்கும் 'வொஸ்ட்ரோ' கணக்கை இந்திய யூனியன் வங்கியில் ஆரம்பித்துள்ளது.

சர்வதேச வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை இந்திய ரூபாவில் மேற்கொள்வதற்கு கடந்த ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கி அனுமதியளித்ததையடுத்து மலேசியா இம்முடிவை எடுத்திருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. வர்த்தக அதிகரிப்பும், உலகளாவிய வர்த்தக சமூகத்துக்கு கொடுக்கல் வாங்கல்களை எளிமைப்படுத்தும் வகையிலும் மத்திய வங்கி இம்முடிவை எடுத்திருப்பதாக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்தியாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் தரப்பினர் ஏனைய சர்வதேச பணத் தாள்களுடன் இந்திய ரூபாவையும் பயன்படுத்த முடியும். இலங்கையும் ஏற்கனவே இதற்கு இணக்கம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசியான் நாடுகள் சீனாவுக்கு மாற்றாக இந்தியாவை கருதுகின்றன

## இந்திய செல்வாக்கு அதிகரிப்பதாக ஆய்வில் தெரிவிப்பு

ஆசியான் நாடுகள் மத்தியில் இந்தியாவின் செல்வாக்கு உயர்ந்து வருவதாகவும் இந்தியா – ஆசியான் ஒத்துழைப்பானது சீனாவின் மூலோபாய நகர்வுகளுக்கு பதிலடியாக அமைய முடியும் என்றும் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட யூசூப் இஷாக் நிலையம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்திருப்பதாக யூரோ ஏசியன் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவும் தென்கிழக்கு நாடுகளும் பாதுகாப்பு தொடர்பான பயமுறுத்தல்களுக்கு ஆளாகியிருப்பதாகவும் எனவே இவை இருதரப்பு மற்றும் பல்தரப்பு பாதுகாப்பு உறவுகளை தமக்கிடையே பலப்படுத்தி வருவதாகவும் தெரிவித்திருக்கும் இப்பத்திரிகை, வியட்நாம், மலேசியா, தாய்லாந்து நாடுகளில் ஜெட் போர் விமானிகள் மற்றும் நீர்மூழ்கி மாலுமிகளுக்கு இந்தியா பயிற்சி வழங்கு வருவதை உதாரணம் காட்டியுள்ளது. ஆசியான் நாடுகள் மத்தியில், உக்ரேன் யுத்தத்தில் இந்தியா நடுநிலை பேணி வந்தாலும் கூட இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா தனது பாதுகாப்பு செலவுகளை அதிகரித்துவரும் அதே சமயம் ஆக்கிரமிப்பு கொள்கையையும் பின்பற்றி வருவதால், இதற்கு மாற்றாக இந்நாடுகள் இந்தியாவைக் கருதுவதாகவும், தென்கிழக்கு ஆசியாவில் எந்த நாடு அதிக அரசியல் மற்றும் மூலோபாய செல்வாக்கு கொண்டுள்ளது என்ற கேள்விக்கு 2022 இல் 54.4 சதவீதமானோர் சீனாவை ஆதரித்திருந்ததாகவும் அத்தொகை நடப்பாண்டில் 41.5 சதவீதமாகக் குறைந்திருப்பதாகவும் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# அமெரிக்க இந்திய உறவுக்கு உறுதுணையான அமெரிக்க வாழ் இந்தியர்கள்

இந்தியாவின் கடந்த 75 ஆண்டுகால அமெரிக்காவுடனான உறவானது அரசியல் பொருளாதார, டிஜிட்டல் பரிமாணம் என வளர்ந்து தற்போது பிரதமர் நரேந்திர மோடியின் பதவிக் காலத்தில் பல் துறைகளில் சிறப்பு பெற்றிருப்பதாகவும் இந்திய – அமெரிக்க உறவில் அமெரிக்க வாழ் இந்தியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்றும் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

கலிபோர்னியாவில் நடைபெற்ற, அமெரிக்க வாழ் இந்திய சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்த, நிகழ்வில் கலந்துகொண்டு பேசியபோது இவ்வாறு தெரிவித்த அவர், ஏராளமான தடைகளைத் தாண்டி குறிப்பிடத்தக்க அபிவிருத்தியடைந்துள்ள இந்தியாவின் அமெரிக்காவுடனான நெருங்கிய உறவானது உலகின் தொடர் விளைவுகளை ஏற்படுத்தும் முக்கியமான உறவாக மாறியுள்ளது என்றார். மேலும், இரு தரப்பு உறவு மென்மேலும் பலப்படுவதற்கு அமெரிக்க இந்தியர்களின் பங்களிப்பு அளப்பறியது என்பதையும் குறிப்பிட்டார்.

அமெரிக்கா முழுவதும் வாழ்ந்து வரும் இந்திய சமூகத்தினர், வர்த்தக, பொருளாதார மற்றும் மக்களுடனான உறவுகளை மென்மேலும் பலப்படுத்துவதில் தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றனர் என்பது பெருமைக்குரியது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.04.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5080 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 2 0 4 1 1 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3322 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,857,318.24
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 03 44 50 77

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1535 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,746,063.20
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 9 2 9 3 4 2

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1428 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 312,769,666.00
ஆங்கில எழுத்து N — சுப்பர் இலக்கம் 10 — வெற்றி இலக்கங்கள் 01 23 35 55
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ராசி சுப பலன் (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 389 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,781,448.60
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 22 39 40 49 — விசேட இலக்கினம் தனுசு

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1110 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,760,042.40
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 33 66 69 81

# லாகூரில் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொலை

லாகூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர் தன் வீட்டின் எதிரே நின்று கொண்டிருந்த போது முகமூடியணிந்த நபரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

65 வயதான ஃபராத அப்பாஸ் என்ற இந்த ஓய்வு பெற்ற அதிகாரி, தன் கிராமத்துக்கு பயணிப்பதற்காக வீட்டு வாசலில் நின்றிருந்தபோது இச்சம்பவம் நடைபெற்றிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

முல்தான் வீதி மில்லட் பார்க் வீட்டில் வாகனத்துக்காக காத்திருந்த போதே இனந்தெரியாத நபரால் சுடப்பட்டார் என்றும், தான் ஓடி வந்து பார்த்த போது அப்பாஸ் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணம் நிகழ்ந்ததாகவும் அவரது உறவினர் சல்மான் தாஹிர் பொலிசாரிடம் தெரிவித்திருந்தார். அவருக்கு எதிரிகள் இருப்பதாகத் தான் அறிந்திருக்கவில்லை என்றும் கொலையாளி யாராக இருக்கக் கூடும் எனத் தெரியவில்லை என்றும் அவர் மேலும் கூறியிருந்தார்.

சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு விரைந்த குற்றப்புலனாய்வு அத்தியட்சகர் லியாகத் மாலிக், கொலைக்குக் காரணமானவரைக் கண்டுபிடிக்க நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும் என்றார்.

# அதிக அளவில் குற்றச் செயல்களில் ஈடுபடும் சீனர்கள்; காத்மண்டு பொலிசார் தெரிவிப்பு

நேபாளத்தில் சீனர்கள் அதிக அளவில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும், ஏ.டி.எம். திருட்டு, பெண் கடத்தல், சைபர் குற்றங்கள், பாலியல் துஷ்பிரயோகம் என்பனவற்றுடன் தொடர்புபட்ட 122 சீனர்கள் 2019 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் காத்மண்டு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வட்ஸ்அப், டெலிகிராம் செயலிகளைப் பயன்படுத்தி அப்பாவி நோபாளிகளிடமிருந்து பணம் பறித்து வந்த ஒன்பது சீனர்களையும் பத்து நேபாளி சகாக்களையும் கடந்த வாரம் கைது செய்ததாக காத்மண்டு பொலிசார் தெரிவித்துள்ளர். 30 டொலர்களை முதலீடு செய்தால் 30 சதவீத இலாபம் கிடைக்கும் என்ற உறுதிமொழிக்கு அமைய முதல் தடவையில் முப்பது சதவீத இலாபத்தைக் காட்டும் இம் மோசடிக்காரர்கள், பின்னர் இழுத்தடிப்பின் மூலம் அதிக பணத்தை முதலீடு செய்ய வைத்துவிட்டு திடீரெனக் காணாமல்போய் விடுவதே இவர்கள் கையாளும் தந்திரம் என காத்மண்டு பொலிசார் இம் மோசடி பற்றி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடந்த பத்து மாதங்களில் 165 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. இது தொடர்பாக நடத்தப்பட்ட தேடுதலில், 12 மடிக் கணினிகள், கம்பியூட்டர்கள், கடவுச் சீட்டுகள், சிம்கள், 4 இலட்ச ரூபா என்பன கைப்பற்றப் பட்டதாகவும் மொத்தம் 4.7 மில்லியன் மோசடி செய்யப் பட்டிருக்க வேண்டும் என்றும் பொலிஸ் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரியில் மூன்று இளம் நேபாளி பெண்களை அறையொன்றில் தடுத்து வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இரு சீனர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த டிசம்பரில் திரிபுவன் விமான நிலையத்தில் மூன்று நேபாளி பெண்களை லாவோசுக்கு கடத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு சீனர்களை ஆள்கடத்தல் தடுப்பு பொலிசார் கைது செய்தனர். 2019 ஜனவரியில் பொலிசார் நடத்திய சுற்றி வளைப்பில் காத்மண்டுவின் பல்வேறு இடங்களில் சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 122 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டதாகவும் ஏ.டி.எம். இயந்திர மோசடிகளில் ஈடுபட்டிருந்த ஐந்து சீனப் பிரஜைகள் சுற்றிவளைக்கப்பட்டதாகவும் பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

# கிழக்கின் குரல்



TSP உரம் வழங்கல் 10ஆம் திகதியுடன் நிறுத்தப்படும்

## விவசாயிகளுக்கு மட்டக்களப்பு அரச அதிபர் முக்கிய அறிவித்தல்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

அரசினால் வழங்கப்படும் குறித்த உரத்தினை இதுவரை மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் 40% வரையே பெற்றுள்ளதாகவும் எதிர்வரும் 10 திகதியுடன் உர விநியோகம் நிறுத்தப்படவுள்ளதனால், அதற்கு முன்னர் தங்களுக்கான இலவச உரத்தினை பெற்றுக் கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட விவசாயிகளிடம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய அமைச்சினால் இலங்கை பூராகவும் உள்ள விவசாயிகளுக்கு இலவசமாக TSP உரம் வழங்கப்பட்டுவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கமநல கேந்திர நிலையங்கள் ஊடாக அடிக்கட்டுப் பசளை (TSP) கடந்த மாதம் 20.03.2023 திகதி முதல் பெரும் போகத்திற்காக வழங்கப்பட்டு வருகின்றது.



அத்தோடு சீன அரசாங்கத்தின் உதவியுடன் விவசாயிகளின் பெரும் போக நடவடிக்கைகளுக்காக இலவசமாக வழங்கப்பட்டுவரும் டீசலுக்கான காலம் முடிவடைந்த நிலையில் விவசாயிகளின் நன்மை கருதி எதிர்வரும் 14.04.2023 வரை நீடிக்கப்பட்டுள்ளதெனவும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 196,000 லீற்றரில் 50% விவசாயிகள் மாத்திரமே குறித்த இலவச டீசலினை பெற்றுள்ளார்கள் எனவும் அதனையும் குறித்த கால எல்லைக்குள் விவசாயிகள் பெற்றுக்கொண்டு மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், மாவட்டத்தின் உணவு உற்பத்திக்கு பங்காற்றுவதுடன், அரசினால் முன்னெடுக்கப்படும் உணவு பாதுகாப்பு திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் மட்டு. மாவட்ட விவசாயிகளிடம் கோரிக்கையினை முன்வைத்துள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் அரசினால் வழங்கப்படும் மானிய உரம் மற்றும் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்படாத வண்ணம் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏறாவூர், கொம்மாதுறை

## மோட்டார் சைக்கிள் விபத்து; ஒருவர் பலி; ஐவர் வைத்தியசாலையில்

வெல்லாவெளி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு ஏறாவூர், கொம்மாதுறை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், சிறுவன் உட்பட 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்தில் செங்கலடி ஐயங்கேணி பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த 28 வயது க.திபாகர் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

21 வயது இளைஞன் ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், 10 வயது சிறுவன் அடங்கலாக 4 பேர் செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செங்கலடி பகுதியில் இருந்து கொம்மாதுறை பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் எதிரே வந்த மூன்று மோட்டார் சைக்கிள்கள் மீது தொடராக மோதியுள்ளனர். இதன் போது சம்பவ இடத்திலேயே மோட்டார் சைக்கிளில் வந்த 28 வயது இளைஞன் உயிரிழந்ததுடன் ஏனையவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



துறைநீலாவணை ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய குடமுழுக்குப் பெருவிழாவின் தொடராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாற்குட பவனியை காணலாம்.
(படம்: துறைநீலாவணை நிருபர்)

## மஹதிவுல்வெவ பகுதியில் மாணவர்களுக்கிடையில் மோதல்

### மூவர் வைத்தியசாலையில் அனுமதி

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மஹதிவுல்வெவ தேசிய பாடசாலையில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இச் சம்பவம் (04) பெற்றுள்ளது.

மஹதிவுல்வெவ தேசிய பாடசாலையில் பத்தாம் தரம் மற்றும் பதினோராம் தரம் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் அதே பகுதியைச் சேர்ந்த மூவர் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஆறாம் வகுப்பிற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இருந்தபோதிலும் முதியன்சலாகே நிரஞ்லா ஜெயவீர என்ற பெண் தனது மகனை பதினோராம் தர மாணவர்கள் தாக்கியதாக மொரவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதே நேரம் தாக்கியதாக கூறப்படும் மாணவர்களும் தாக்குதலுக்குள்ளான மாணவரொருவரும் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தீவிர விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை உள்ளிட்ட மூன்று மாவட்டங்களிலும் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற மூவினங்களையும் சேர்ந்த குடும்பத்தவர்களுக்கான குடிநீர் இணைப்புக்கான உதவி மற்றும் உலர் உணவுப் பொதி வழங்குதலும், கிழக்கு மாகாண பள்ளிவாசல்களுக்கான ஈச்சம்பழ விநியோகமும் நேற்று முன்தினம் பாலமுனை ஜெம்மியத்து ஸீலான் அல்ஹைறியா நிறுவனத்தில் நடைபெற்றது. (படம்: பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

தந்தை செல்வா வழியில் அஹிம்சை ரீதியில்

## உரிமைகளை பெற்று கொள்வதே எமது நோக்கம்

காரைதீவு குறூப் நிருபர்

நாம் தந்தை செல்வா வழியிலே அஹிம்சை வழியில் உரிமைகளை பெற ஒற்றுமையாக அரசியல் பயணத்தில் பயணிக்கின்றோம். எமது தமிழ் மக்கள் சொந்த மண்ணிலே சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்ற ரீதியிலே நாங்கள் அகிம்சை வழியில் போராடி வருகின்றோம்.

இவ்வாறு தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

இந் நிகழ்வு திருக்கோவில் காயத்ரி கிராமத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் நந்தபாலு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலும் கலந்து சிறப்பித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,...



யுத்தம் மௌனித்து 14 வருடங்கள் முடிந்து விட்டது. ஆனால் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எதனையுமே செய்து முடிக்கவில்லை.

இந் நிலையில் எங்கள் மீது பலர் விமர்சனம் செய்ய தொடங்கி இருக்கிறார்கள். நாங்கள் ஒரு போதும் வீதி போட்டுத் தருவோம் வீடு கட்டித் தருவோம் என்று வாக்கு கேட்டதில்லை.

மாதவனை மயிலந்தனை பகுதியில் தமிழர்களுடைய காணியை அடாத்தாக பிடித்து சிங்களவர்களுக்கு கொடுப்பதற்கு காணி அளக்கப்பட்டு வருகின்றது.

இன்று தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்ப்போம் என்று ஜனாதிபதி ரணில் முன்வந்திருக்கின்றார். உண்மையில் அவர் அப்படி செய்வாராக இருந்தால் இலங்கை அரசியல் அரங்கில் ஒரு பொருத்தமான நீதியான மாபெரும் தலைவர் ரணில் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். துரதிஷ்டவசமாக இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் நீண்ட காலமாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றார்கள். அதன் காரணமாகவே தமிழ் மக்களால் யாரையும் நம்ப முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தந்தை செல்வா பல ஏமாற்றங்களை அன்று சந்தித்தார். அவர் சிங்களத் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தப் பிரகடனம் கூட பிற்காலத்தில் கிழித்து எறியப்பட்டது அல்லது அமுலாக்கப்படவில்லை. தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்தது தமிழினம். இன்று யாரையும் நம்பத் தயாரில்லை என்ற நிலைக்கு வந்திருக்கின்றது என்றார்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரி

## புதிய ஆசிரியரின் நியமனத்தை தற்காலிகமாக இரத்து செய்யுமாறு பொற்றோர்கள் கோரிக்கை

கல்குடா தினகரன் நிருபர்



வாழைச்சேனை இந்துக் கல்லூரி தேசிய பாடசாலைக்கு ஆசிரியராக புதிதாக நியமனம் பெற்று வரும் ஆசிரியரின் நியமனத்தை தற்காலிகமாக இரத்து செய்யுமாறு வலியுறுத்தி நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர் ஒன்றிணைந்து இவ் கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் காலை பாடசாலை முன்றலில் கூடியவர்கள் 'பொருத்தமான ஆசிரியரை நியமனம் செய்' 'பொ.உதயரூபன் எமக்கு வேண்டாம்', 'தற்காலிக நியமனத்தை இரத்துச் செய்', '16 பாடசாலைகள் வெளியேற்றிய ஆசிரியர் வேண்டாம்' போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி பேராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் இறுதியில் கோரிக்கை அடங்கிய மகஜரை பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தனர். குறித்த மகஜரில் திரு.உதயரூபன் ஆசிரியர் அவர்கள் எமது பாடசாலைக்கு நியமித்து உள்ளதாக தகவல் அறியப்பெற்றது. மேற்படி ஆசிரியரை பற்றி விசாரித்த போது அவர் மீது பல்வேறு முறைப்பாடுகள் இதுவரையில் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

எனவே அதிபர் அவர்களே திரு உதயரூபன் அவர்களது நியமனத்தினை ஒத்தி வைப்பதோடு நிரந்தரமாக இரத்து செய்து வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து பழைய மாணவர்கள் சார்பிலும் கேட்டுகொள்கின்றோம் என அவ் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாலமுனை ஹில்ப் பாலர் பாடசாலையின் விடுகை விழா



பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

பாலமுனை ஹில்ப் பாலர் பாடசாலையின் விடுகை விழாவும் கலை கலாசார நிகழ்வு என்பன அண்மையில் பாலமுனை கடற்கரை திறந்த வெளியரங்கில் இடம்பெற்றது.

பாலமுனை ஹில்ப் பாலர் பாடசாலையின் தலைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.ஜே.எம். றிஸ்வான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ.சாபிர் பிரதம அதிதியாகவும், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா அனஸ் கௌரவ அதிதியாகவும், உதவி கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.பாயிஸ் உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், ஹில்ப் பாலர் பாடசாலை நிருவாகிகள் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தனர்.



வரலாற்று சிறப்புடைய திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சிம்ம வாகனத்தில் நேற்று (05) காலை எழுந்தருளி திருகோணமலை சமுத்திரக்கரையில் பக்தர்கள் புடைசூழ தீர்த்தோற்சவம் இடம்பெற்றது, பக்தர்கள் தீர்த்தம் ஆடி நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதை படங்களில் காணலாம். (படங்கள்: அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

## பாரம்பரிய வைத்தியர்களுக்கு ஒருநாள் பயிற்சி செயலமர்வு

தம்பலகாமம் குறூப் நிருபர்

கொழும்பு சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட, பாரம்பரிய வைத்தியர்களுக்கான ஒருநாள் பயிற்சி செயலமர்வு தம்பலகாமம் பிரதேச சபை மண்டபத்தில் (04) இடம்பெற்றது.

கொழும்பு சுதேச வைத்தியப் பிரிவின் தலைவர் பி.தயாநந்தனின் தலைமையில் ஆரம்பமான இச்செயலமர்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர், அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் வைத்தியர் சி.சிவகுமார் உள்ளிட்ட வைத்தியர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இந்து கலைஞர்களின் விபரங்கள் திரட்டல்

காரைதீவு குறூப் நிருபர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மாவட்ட செயலகம் இணைந்து, அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்து கலைஞர்கள் தொடர்பான விவரங்களை திரட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

இதன் முதலாவது கூட்டம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன் தலைமையில் காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலைஞர்களின் விவரங்கள், கலைஞர்களின் ஆக்கங்கள், கலைஞர்கள் பெற்ற விருதுகள் தொடர்பான விவரங்கள், சமூகத்தில் கலைஞர்களின் பங்களிப்பு போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு. ஜெயராஜி, உட்பட காரைதீவு, கல்முனை வடக்கு, சம்மாந்துறை கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

# தாளையடி நீர்வழங்கல் திட்டத்தை 2024 முற்பகுதிக்குள் முழுமைப்படுத்த எதிர்பார்ப்பு





கிளிநொச்சி வடமராட்சி, கிழக்கு தாளையடி பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக்கும் திட்டத்தை 2024 முற்பகுதிக்குள் முழுமைப்படுத்த எதிர்பார்ப்பதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

வடக்குக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், வவுனியா பேராறு நீர் வழங்கல் திட்டத்தை பார்வையிட்டதுடன், அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது கிளிநொச்சி வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக்கும் திட்டத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இதுதொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில், கிளிநொச்சி வடமராட்சி, கிழக்கு தாளையடி பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக்கும் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கரவெட்டி, கொடிகாமம் மற்றும் புத்தூர் என பல பிரதேசங்களுக்கு இத்திட்டத்தின் ஊடாக குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நீர்வழங்கல் திட்டத்தை 2023 ஏப்ரலில் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை மற்றும் பணவீக்கத்தால் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், 2024 முற்பகுதிக்குள் இத்திட்டத்தை முழுமைப்படுத்த எதிர்பார்க்கின்றோம். அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் செயற்திட்ட முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இத்திட்டம் ஊடாக 3 இலட்சம் மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்குமெனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## வடக்கின் உதயம்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலில் பங்குனி உத்தர பாற் காவடி பவனி நேற்றைய தினம் புதன்கிழமை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

## நூல் வெளியீட்டு விழா

**(கோப்பாய் குறூப் நிருபர்)**

யாழ்.தொண்டமானாறு சந்நிதி முருகன் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் 303 ஆவது இதழ் அண்மையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் மிக சிறப்பாக இடம்பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் பங்குனி மாதத்துக்கான ஞானச்சுடர் இதழாக 303 ஆவது மலராக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டுரையை ஆசிரியர் நி.பாபு, வெளியீட்டு உரையை இளைப்பாறிய அதிபர் கணேசமூர்த்தி நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், பக்தர்கள் அடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

### 16 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

## குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை

**நீதிபதி இளஞ்செழியன் வழங்கிய அதிரடி தீர்ப்பு!**



வவுனியாவில் 16 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அதிரடி தீர்ப்பொன்றை வழங்கியுள்ளார். 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையும் 5 இலட்சம் ரூபா நட்டஈடும், அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக (04.04.2023) எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் 2012ஆம் ஆண்டு மாசி மாதம் மாங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 16 வயது பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி குழந்தை பெறுவதற்கு காரணமாகவிருந்த சிறுமியின் மாமா முறையிலான குற்றவாளிக்கே இவ்வாறு தண்டணை வழங்கப்பட்டுள்ளது. இவர் சிறுமியின் தந்தையின் சகோதரியின் கணவர் என தெரியவருகின்றது. மரபணு பரிசோதனை அறிக்கையின் படி, பிறந்த ஆண்குழந்தையின் தந்தை குற்றவாளியான மாமன் தான் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் வவுனியா மேல் நீதிமன்றத்தால் இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் பொற்கிழி பரிசளிப்பும், கலை நிகழ்வும்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் உள்ளம் சஞ்சிகை பொற்கிழி பரிசளிப்பும், கலை நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாநகரசபை கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3:31 மணியளவில் நடைபெறவுள்ளது.

வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொற்கிழி போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவில் தமிழகத்தின் பிரபல கதைசொல்லி, கலைஞர், இலக்கிய ஆளுமை பவா.செல்லத்துரை, 'தமிழ்ச் சிறுகதைகளின் பெருமிதம்' என்ற தலைப்பில் பேருரை ஆற்றவுள்ளார்.

அத்துடன், பிரபல தவில் வித்துவான் பி.எஸ். செந்தில்நாதனின் புதல்வர்களான செந்தில்நாதன் சபரீசன், செந்தில்நாதன் பிருத்விகன் மற்றும் இவர்களுடன் பிரபல நாதஸ்வர வித்துவான், நாதஸ்வர சக்கரவர்த்தி பி. எஸ் பாலமுருகனின் புதல்வன் பாலமுருகன் சரண்ஜன் மற்றும் பிரபல தவில் வித்துவான் பிரபாகரனின் புதல்வன் பிரபாகரன் வேந்துசன் ஆகியோர் இணைந்து வழங்கும் இளையோரின் நாதலய சங்கமம் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில் கறுப்பையா சத்தியசீலனின் நெறியாள்கையில் ‘எண்ணித் துணிவோம்’ நாடகமும் இடம்பெறவுள்ளது. மேலும் பிரபல பாடகர்களான வைசாலி யோகராஜன், கந்தப்பு ஜெயந்தன், ஜெ. மதுரஷிகன், திலக்சன் மனோகரன் ,பாடகி ரவிசங்கர் வைலற் சொப்னா வழங்கும் 'காற்றில் தவழும் இனிய கீதங்கள்" இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8:30 மணியளவில் கலாசார மண்டப வளவிலும், மண்டபங்களிலும் ஓவிய சிற்பக்கண்காட்சிகளும் புத்தக விற்பனையும் இடம்பெறவுள்ளது.










கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு பாடசாலை முற்றத்தில் முதல்வர் அ. பங்கையற்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.யாழ்.பல்கலைக்கழக பொறியியற் பீடத்தின் கலாநிதி கந்தசாமி பிரபாகரன், சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் அன்னலிங்கம் ரவீந்திரன், யூ. கே . கிளிநொச்சி மாவட்ட சமூக அமைப்பின் இராமநாதன் கணேசலிங்கம் மற்றும் கௌரவ விருந்தினர்களாக மாவட்ட பொது வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரியும் பழைய மாணவியுமான வைத்திய கலாநிதி சிவலோஜினி பரணி காந்த் ஆகியோர் கலந்து கொண்டனர். படம் இக்பால் அலி








கண்டி அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவில் மத்திய கைலாசம் ஸ்ரீ மீனாட்சி அம்பிகை உடனுறை ஸ்ரீ சோமசுந்தரேஸ்வர சுவாமிகளின் பஞ்சரத பவனி மற்றும் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# எஸ்எம்பி பினான்ஸ் பிஎல்சி

## 2011 ஆம் ஆண்டின் நிதி வணிகச் சட்ட இல.42 இன் பிரிவு 29 (5) இன் அடிப்படையில் நிதிநிலை அறிக்கைகளை வெளியிடுதல்

### ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய இலாபம் அல்லது நட்ட கூற்று

| ரூ. டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான | நிறுவனம் 2022 | நிறுவனம் 2021 | குழுமம் 2022 | குழுமம் 2021 |
|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 289,361,235 | 163,970,711 | 289,361,235 | 163,970,711 |
| வட்டிச் செலவினம் | (134,737,070) | (51,818,785) | (134,803,986) | (52,068,675) |
| **தேறிய வட்டி வருமானம்** | **154,624,165** | **112,151,926** | **154,557,249** | **111,902,036** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 9,905,419 | 3,625,443 | 9,905,419 | 3,625,443 |
| **தேறிய வட்டி, கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **164,529,584** | **115,777,369** | **164,462,668** | **115,527,479** |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | 210,220,245 | 81,336,021 | 230,889,765 | 134,116,264 |
| முதலீட்டுச் சொத்தின் சாதாரண பெறுமதியில் மாற்றங்கள் | 44,649,600 | 46,553,000 | 46,949,600 | 44,812,600 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **419,399,429** | **243,666,390** | **442,302,033** | **294,456,343** |
| **எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்கான கொடுப்பனவு - கட்டணம்** | (166,520,963) | (57,158,193) | (166,520,962) | (57,158,193) |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **252,878,466** | **186,508,197** | **275,781,071** | **237,298,150** |
| ஊழியர் செலவினங்கள் | (76,812,014) | (55,959,275) | (121,029,687) | (108,749,937) |
| ஏனைய செலவினங்கள் | (68,965,862) | (64,158,838) | (82,779,700) | (78,482,986) |
| **நிதியியல் சேவைகள் மீதான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **107,100,590** | **66,390,084** | **71,971,684** | **50,065,227** |
| நிதியியல் சேவைகள் மீதான வரிகள் | (18,985,049) | (10,753,675) | (18,985,049) | (10,753,675) |
| **நிதியியல் சேவைகள் மீதான வரிக்கு பின்னரான இலாபம்** | **88,115,541** | **55,636,409** | **52,986,635** | **39,311,552** |
| துணை நிறுவனத்திற்கான குறைபாடு ஏற்பாடு | (12,750,000) | - | - | - |
| துணை நிறுவனத்தின் பங்கு இலாபம் | 743,655 | 151,844 | 743,655 | 151,844 |
| **வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | **76,109,196** | **55,788,253** | **53,730,290** | **39,463,396** |
| வருமான வரிச் செலவினம்/ பிறழ்வு | 3,473,036 | (2,357,092) | 3,205,986 | (1,520,296) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **79,582,232** | **53,431,161** | **56,936,276** | **37,943,100** |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | | | |
| தலைமை கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 79,582,232 | 53,431,161 | 74,280,294 | 45,532,250 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | (17,344,019) | (7,589,150) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **79,582,232** | **53,431,161** | **56,936,276** | **37,943,100** |
| பங்கொன்றிற்கான அடிப்படை இலாபம் | 0.01 | 0.01 | 0.01 | 0.01 |
| பங்கொன்றிற்கான நீர்த்த இலாபம் | - | - | - | - |

அடைப்புக்குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தலை குறிக்கின்றன.

### ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய இலாபம் அல்லது நட்ட கூற்று

| ரூ. டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான | நிறுவனம் 2022 | நிறுவனம் 2021 | குழுமம் 2022 | குழுமம் 2021 |
|---|---|---|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்** | **79,582,232** | **53,431,161** | **56,936,276** | **37,943,100** |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் இலாபம் அல்லது நட்டமாக மீள்மதிப்பிடப்படாதவை | | | | |
| வரையறுக்கப்பட்ட காப்புத்திட்டங்கள் மீதான இலாபம் | 1,680,945 | 1,404,303 | 5,242,300 | 8,924,911 |
| FVOCI இல் பங்கு முதலீடுகள் - சாதாரண பெறுமதியில் நிகர மாற்றம் | 22,872,981 | 21,341,656 | 22,872,981 | 21,341,656 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் மீதான தேறிய வரி | - | - | (1,068,406) | (1,804,946) |
| **ஆண்டிற்கான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (தேறிய வரி)** | **24,553,926** | **22,745,959** | **27,046,875** | **28,461,621** |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **104,136,158** | **76,177,120** | **83,983,151** | **66,404,721** |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்:** | | | | |
| வங்கியின் பங்குதாரர்களுக்கு | 104,136,158 | 76,177,120 | 100,105,625 | 71,193,196 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | (16,122,474) | (4,788,475) |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **104,136,158** | **76,177,120** | **83,983,151** | **66,404,721** |

அடைப்புக்குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தலை குறிக்கின்றன.

### நிதி நிலைமைக் கூற்று

| ரூ. டிசம்பர் 31இல் உள்ளவாறான | நிறுவனம் 2022 | நிறுவனம் 2021 | குழுமம் 2022 | குழுமம் 2021 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 55,302,042 | 103,558,886 | 55,494,870 | 105,179,888 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | 2,364,017,662 | 2,393,446,509 | 2,364,049,831 | 2,410,549,184 |
| கடன் தீர்பனவு செலவுகளில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | 1,855,368,149 | 1,115,518,279 | 1,855,368,149 | 1,115,518,279 |
| நிதியியல் முதலீடுகள் | 104,249,453 | 82,076,924 | 114,789,453 | 99,752,274 |
| கூட்டாண்மை முதலீடுகள் | 42,577,031 | 41,833,376 | 42,577,031 | 41,833,376 |
| துணைக் கம்பனிகளிலான முதலீடு | - | 12,750,000 | - | - |
| சொத்து முதலீடுகள் | 385,728,000 | 142,778,000 | 402,928,000 | 157,678,000 |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 19,963,487 | 7,305,871 | 22,405,148 | 11,910,542 |
| பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் | 16,070,409 | 23,266,033 | 16,070,405 | 24,195,608 |
| அருவச் சொத்துக்கள் | 245,092,403 | 5,614,625 | 245,092,403 | 5,614,625 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - | 1,202,705 | 2,538,161 |
| ஏனைய சொத்துக்கள் | 98,857,571 | 67,795,098 | 105,380,384 | 80,772,776 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **5,187,226,207** | **3,995,943,601** | **5,225,358,379** | **4,055,542,713** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியவை | 1,568,220,236 | 526,274,284 | 1,568,507,907 | 526,274,284 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 126,786,485 | 122,275,914 | 126,786,485 | 122,275,914 |
| ஓய்வு நலக்காப்பு திட்டங்கள் | 8,961,310 | 7,544,568 | 23,159,659 | 25,887,414 |
| குத்தகை பொறுப்புக்கள் | 14,880,212 | 15,649,074 | 14,880,212 | 16,705,769 |
| ஏனைய பொறுப்புக்கள் | 112,425,504 | 72,383,460 | 118,982,133 | 75,340,499 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **1,831,273,747** | **744,127,300** | **1,852,316,396** | **766,483,880** |
| **பங்கு மூலதனம்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 3,062,681,524 | 3,062,681,524 | 3,062,681,524 | 3,062,681,524 |
| நியதிச்சட்ட ஒதுக்கங்கள் | 41,732,329 | 37,753,217 | 41,732,329 | 37,753,217 |
| சாதாரண பெறுமதி ஒதுக்கங்கள் | 52,465,265 | 29,592,284 | 52,465,265 | 29,592,284 |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 199,073,342 | 121,789,276 | 207,657,673 | 134,404,142 |
| **நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம்** | **3,355,952,460** | **3,251,816,301** | **3,364,536,791** | **3,264,431,167** |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்குரியது | - | - | 8,505,192 | 24,627,666 |
| **மொத்த பங்கு மூலதனம்** | **3,355,952,460** | **3,251,816,301** | **3,373,041,983** | **3,289,058,833** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **5,187,226,207** | **3,995,943,601** | **5,225,358,379** | **4,055,542,713** |

அடைப்புக்குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தலை குறிக்கின்றன.

**உறுதிப்படுத்தல்:**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்க நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று சான்றளிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
**மேனக்க சில்வா**
நிதித் தலைவர்

(ஒப்பம்)
**சுபுல் விஜேசிங்ஹ**
தலைமை நிர்வாக அதிகாரி

இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குவதற்கு இயக்குநர்கள் குழு பொறுப்பாகும். குழுமம் சார்பாக அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

(ஒப்பம்)
**ஷர்தா சூசா**
இயக்குநர்

(ஒப்பம்)
**சாடி வாடுட்**
இயக்குநர்

கொழும்பு - ஏப்ரல் 03,2023

## சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

KPMG
(Chartered Accountants)
32A, Sir Mohamed Macan Markar Mawatha,
P. O. Box 186,
Colombo 00300, Sri Lanka.

Tel : +94 - 11 542 6426
Fax : +94 - 11 244 5872
+94 - 11 244 6058
Internet : www.kpmg.com/lk

**TO THE SHAREHOLDERS OF SMB FINANCE PLC**

**Report on the Audit of the Financial Statements**

**Opinion**

We have audited the financial statements of SMB Finance PLC ("the Company") and the consolidated financial statements of the Company and its subsidiaries ("the Group"), which comprise the statement of financial position as at 31 December 2022, and the statement of profit or loss and other comprehensive income, statement of changes in equity and statement of cash flows for the year then ended, and notes to the financial statements, including a summary of significant accounting policies.

In our opinion, the accompanying financial statements give a true and fair view of the financial position of the Company and the Group as at 31 December 2022, and of their financial performance and its cash flows for the year then ended in accordance with Sri Lanka Accounting Standards.

**Basis for Opinion**

We conducted our audit in accordance with Sri Lanka Auditing Standards (SLAuSs). Our responsibilities under those standards are further described in the Auditors' Responsibilities for the Audit of the Financial Statements section of our report. We are independent of the Group in accordance with the Code of Ethics issued by CA Sri Lanka (Code of Ethics), and we have fulfilled our other ethical responsibilities in accordance with the Code of Ethics. We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

**Key Audit Matters**

Key audit matters are those matters that, in our professional judgment, were of most significance in our audit of the Company financial statements and consolidated financial statements of the current period. These matters were addressed in the context of our audit of the Company financial statements and consolidated financial statements as a whole, and in forming our opinion thereon, and we do not provide a separate opinion on these matters.

**01. Allowance for Expected credit losses of loans and receivables to customers**

Refer to the accounting policies in the Financial Statements: Impairment of Loans and Receivables to Customers, "Note 5.3.3 and 19" to the Financial Statements: Significant Accounting Judgments and Estimates, "Note 3.2.2" to the Financial Statements.

**Risk Description**

As disclosed in Note 19 to these financial statements, the Company has recorded financial assets at amortized cost against loans and receivables to customers amounting to Rs. 1,855,368,149/- as at 31 December 2022. High degree of complexity and judgment are involved in estimating ECL of Rs.636,865,081/- against loans and receivables to customers as at the reporting date.

The Company uses the Expected Credit Loss (ECL) model to calculate the loss allowance in accordance with SLFRS 9 – Financial Instruments (SLFRS 9). These models are reliant on data and a number of estimates including the impact of multiple economic scenarios and other assumptions such as defining a significant increase in credit risk (SICR). There are also a number of key assumptions made by the Company in applying the requirements of SLFRS 9 to the models including the identification of loss stage, forward looking probability of default (PD), loss given default (LGD), macroeconomic scenarios used and the post-model adjustments including their weighting and judgments over the use of data inputs required.

Additional subjectivity and judgement have been introduced into the Company's measurement of ECL due to the heightened uncertainty associated with the impact of the economic outlook to the Company customers, increasing our audit effort thereon,

Allowance for expected credit losses is a key audit matter due to the significance of the loans and receivables balance to the financial statements and the inherent complexity of the Company's ECL models used to measure ECL allowances.

**Our Response**

Our audit procedures included:

- Assessing the methodology inherent within the impairment models against the requirements of SLFRS 9, specially taking into consideration the prevailing uncertain volatile macro-economic environment;
- Challenging the key assumptions in the ECL models, including staging PD and LGD and evaluating the reasonableness of Management's key judgments and estimates;
- Testing the accuracy and completeness of the data inputs to the systems and ECL models and challenging the economic information used within, and weightings applied to, forward looking scenarios;
- Testing IT System Controls which records loan days past due, and non performing loan classification.
- Recalculating the ECL on sample basis, by using the key assumptions used in the models, such as PD and LGD;
- Evaluating the completeness of customers/facilities assessed individually based on the criteria set for the same and checking the accuracy of the provision for impairment for such identified individually significant exposures.
- Assessing the completeness of additional allowance overlays by checking the consistency of risks we identified in the loan and lease portfolios against the Company's assessment;
- Working with our Financial Risk Management (FRM) specialists, and evaluating and challenging the key assumptions in the components of the Company's post-model adjustments to the ECL allowance balance.
- Assessing the adequacy of disclosures made in the financial statements in compliance with relevant accounting standards requirements.

**02. Valuation of Investment Property**

Refer to the accounting policies in the Financial Statements: Investment Property, "Note 5.3.7 and 23"

**Risk Description**

As at 31 December 2022, the Group's Investment Properties carried at fair value amount to Rs. 402.92 Mn. Further, the fair value gain recognized in the statement of profit or loss for the year, amounted to Rs. 46.94 Mn.

The Company has engaged an independent external professional valuer with appropriate expertise in valuing properties, to determine the fair value of investment property in accordance with recognized industry standards.

Estimating the fair value is a complex process which involves a significant degree of judgement and estimates in respect of price per perch of the land, capitalization rates, value per square feet, fair market rental and diversity of locations and nature of the land and buildings and investment properties.

We identified this as a key audit matter because of the significant judgments and estimations in the selection of appropriate valuation methodology to be used and in estimating the key assumptions applied. These key assumptions include market comparable used, taking into consideration for difference such as location, size and tenure. A change in the key assumptions will have an impact on the valuation.

**Our Response**

Our audit procedures included:

- Assessing the objectivity, independence, competence and qualifications of the external valuer.
- Assessing the key assumptions applied and conclusion made by the external valuer in deriving the fair value of the properties and comparing the same with evidence of current market values and consultation with internal valuation specialist.
- Inquiring how valuers had assessed the impact of the prevailing uncertain and volatile macro-economic environment to assess whether that it was appropriately considered in the measurement in valuing properties to determine the fair value of the investment property.
- Assessing the adequacy of the disclosures in the financial statements, including the description and appropriateness of the inherent degree of subjectivity and key assumptions in the estimates.

**Other Information**

Management is responsible for the other information. The other information comprises the information included in the annual report, but does not include the financial statements and our auditor's report thereon. The annual report is expected to be made available to us after the date of this auditor's report.

Our opinion on the financial statements does not cover the other information and we do not express any form of assurance conclusion thereon.

In connection with our audit of the financial statements, our responsibility is to read the other information and, in doing so, consider whether the other information is materially inconsistent with the financial statements or our knowledge obtained in the audit, or otherwise appears to be materially misstated.

When we read the annual report if we conclude that there is a material misstatement therein, we are required to communicate the matter to those charged with governance.

**Responsibilities of Management and Those Charged with Governance for the Financial Statements**

Management is responsible for the preparation and fair presentation of the financial statements in accordance with Sri Lanka Accounting Standards, and for such internal control as management determines is necessary to enable the preparation of financial statements that are free from material misstatement, whether due to fraud or error.

In preparing the financial statements, management is responsible for assessing the Company's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the Company or to cease operations, or has no realistic alternative but to do so.

Those charged with governance are responsible for overseeing the Company's financial reporting process.

**Auditors' Responsibilities for the Audit of the Financial Statements**

Our objectives are to obtain reasonable assurance about whether the financial statements as a whole are free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditors' report that includes our opinion. Reasonable assurance is a high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with SLAuSs will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

As part of an audit in accordance with SLAuSs, we exercise professional judgment and maintain professional skepticism throughout the audit. We also:

- Identify and assess the risks of material misstatement of the financial statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for our opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.
- Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the Company and Group's internal control.
- Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates and related disclosures made by management.
- Conclude on the appropriateness of management's use of the going concern basis of accounting and, based on the audit evidence obtained, whether a material uncertainty exists related to events or conditions that may cast significant doubt on the Company and Group's ability to continue as a going concern. If we conclude that a material uncertainty exists, we are required to draw attention in our auditors' report to the related disclosures in the financial statements or, if such disclosures are inadequate, to modify our opinion. Our conclusions are based on the audit evidence obtained up to the date of our auditors' report. However, future events or conditions may cause the Company and Group to cease to continue as a going concern.
- Evaluate the overall presentation, structure and content of the financial statements, including the disclosures, and whether the financial statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.
- Obtain sufficient appropriate audit evidence regarding the financial information of the entities or business activities within the Group to express an opinion on the consolidated financial statements. We are responsible for the direction, supervision and performance of the group audit. We remain solely responsible for our audit opinion.
- We communicate with those charged with governance regarding, among other matters, the planned scope and timing of the audit and significant audit findings, including any significant deficiencies in internal control that we identify during our audit.
- We also provide those charged with governance with a statement that we have complied with relevant ethical requirements in accordance with the Code of Ethics regarding independence, and to communicate with them all relationships and other matters that may reasonably be thought to bear on our independence, and where applicable, related safeguards.

From the matters communicated with those charged with governance, we determine those matters that were of most significance in the audit of the financial statements of the current period and are therefore the key audit matters. We describe these matters in our auditors' report unless law or regulation precludes public disclosure about the matter or when, in extremely rare circumstances, we determine that a matter should not be communicated in our report because the adverse consequences of doing so would reasonably be expected to outweigh the public interest benefits of such communication.

**Report on Other Legal and Regulatory Requirements**

As required by section 163 (2) of the Companies Act No. 07 of 2007, we have obtained all the information and explanations that were required for the audit and, as far as appears from our examination, proper accounting records have been kept by the Company.

CA Sri Lanka membership number of the engagement partner responsible for signing this independent auditors' report is 2599.

CHARTERED ACCOUNTANTS
Colombo, Sri Lanka.

03 April 2023

# எஸ்எம்பி பினான்ஸ் பிஎல்சி

இல. 282/1, CBS கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: +94-(0)11-4 222 888, தொலைநகல்: +94-(0)11-2 574 330
மின்னஞ்சல் : smbhed@sltnet.lk | வெப் : www.smblk.com

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 31/12/2022 | 30/01/2023 | 24 /04/2023 & 26/04/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுத்கம, அம்பாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 02/08/09/15 | மே 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 02/08/09/15 | மே 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 02/08/09/15 | மே 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 03/10/16/22 | மே 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 04/11/17/23 | மே 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 12/18/24/29 | மே 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 19/25/26/30 | மே 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## இலங்கை வங்கி

**கிழக்கு மாகாணத்தின் பின்வரும் கிளையை மீளமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.**

### காத்தான்குடி

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 40 அடிகள் கொண்டதாக பிரதான பாதையை நோக்கி நகரத்தின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தது 6 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 3,000 - 3,500 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். மாடிக்கட்டடமாக இருப்பின் தரைப்பரப்பு குறைந்தபட்சம் 2,500 சதுர அடிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- அடிப்படை வயரிங் உடன் கூடிய 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, ஸ்ரீ லங்கா டெலிகொம் தொலைபேசி இணைப்பு, ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பகுதிக்கு (2'x 2') அளவிலான தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 100 சதுர அடி அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (மின்பிறப்பாக்கியை கொண்டு செல்ல தனியான வழிப்பாதை இருத்தல் வேண்டும்.)
- வலது குறைந்தோருக்கான விஷேட நுழைவாயில் இருத்தல் வேண்டும்.
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- கட்டடத்துக்கு தீக்காப்புறுதி இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் உள்ளும் புறமும் வெளிர் நிறம் பூசப்பட்டு (வெள்ளை அல்லது வேறு) இருத்தல் வேண்டும்.
- குளிரூட்டல் தொகுதியின் வெளிப்புற இயந்திரத்தை பொருத்த போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடங்கள்.
- நகர சபையிடமிருந்து பெறப்பட்ட "இயைபுச் சான்றிதழ்" (CoC)

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர், கட்டட வரைபடம் உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"காத்தான்குடி கிளைக்கான பொருத்தமான கட்டடத்தைப் பெற்றுக் கொடுத்தல்"** - எனத் தயவுசெய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்),
இலங்கை வங்கி,
கிழக்கு மாகாணக் காரியாலயம்,
இல: 455, பிரதான வீதி,
திருகோணமலை.

1975 BOC www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்பு சட்டம் (அத்தியாயம் 460)**

**பிரிவு 39 அ (1)இன் கீழான அறிவித்தல்**

கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை 39 (அ) பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரித்து நீக்கப்படுகின்றது. மேலதிக தகவல்களுக்காக இலக்கம் 2320/67 கொண்ட 2023.02.24ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**அட்டவணை**

- மாவட்டம் : மாத்தளை
- பிரதேச செயலகப் பிரிவு: தம்புள்ள
- கிராம சேவகர் பிரிவு: தம்புள்ள நகரம் எல்லை
- கிராமத்தின் பெயர் : பிரிவு இலக்கம் 2 பாதெனிய (தம்புள்ள நகர எல்லையினுள்)
- காணியின் பெயர் : இலுக்யா ஹேவத் பொல்வத்தை
- வரைபட இலக்கம் : மு.பி.மா.1230
- துண்டுகளின் எண்ணிக்கை : 03

**பிபல்சூரிய**
**பிரதேச செயலாளர் தம்புள்ள**
**சுவீகரிப்பு அதிகாரி**
**விலாசம் : தம்புள்ள பிரதேச செயலகம் தம்புள்ள**
**திகதி : 2023.04.03**

**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை (இநிசஅ) (SLSEA)**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் பணியாள்கள் மற்றும் குடும்ப அங்கத்தினர்களுக்கு மருத்துவ காப்புறுதி திட்டமொன்றை வழங்குவதற்காக பொருத்தமான காப்புறுதி நிறுவனமொன்றை தெரிவு செய்தல்

**Procurement Number: SEA/PD/AD/06-2023**

1. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்காக மருத்துவ காப்புறுதியொன்றை வழங்குவதற்காக பொருத்தமான கம்பனிகளிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுவின் இநிசஅ இன் பணிப்பாளர் நாயகம் விலைமனுக்களை அழைக்கின்றார். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் **www.energy.gov.lk** என்ற இநிசஅ இன் இணையதளத்திலிருந்து விலைமனு ஆவணத்தை பரீட்சிக்கலாம்/பதிவிறக்கம் செய்யலாம். அவர்களின் விலைமனுக்களை சமர்ப்பிக்க விரும்பும் ஆர்வமுள்ள சாரார் ரொரிங்டன் சதுக்க இலங்கை வங்கிக் கிளையின் (453 ) 0074944408 என்ற பொதுவான கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத ரொக்கப் பணக்கொடுப்பனவாகிய 1,000 ரூபாவை செலுத்தலாம். மேற்கூறப்பட்டுள்ள பணவைப்பிற்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பணப்பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியானது **procurement.slsea@gmail.com** and **slseafinance@gmail.com** என்பதற்கு அனுப்பப்படல் வேண்டும்.
2. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'Medical Insurance Cover for SLSEA Staff & Family members Sri Lanka Sustainable Energy Authority – SEA/PD/AD/06-2023" என குறிப்பிடப்பட்டு **2023 ஏப்ரல் 27 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, 72 ஆம் இலக்கத்திலுள்ள இநிசஅ இன் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
3. விலைமனுக்கள் 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுவானது விலைமனு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 40,000 ரூபாவிற்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
4. மேலதிக விபரங்களை 0112575030 – நீடிப்பு: 226 என்ற தொலைபேசி இலக்கங்களை அலுவலக நேரங்களில் அழுத்துவதன் மூலம் பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல.: 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 94 (0) 112575030. தொலைநகல்: 94 (0) 112682534.**
**மின்னஞ்சல்: info@energy.gov.lk இணையம்: www.energy.gov.lk**
**2023 ஏப்ரல் 06 ஆம் திகதியன்று.**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

கல்வி அமைச்சு

**03 வருட கால எல்லைக்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் கல்வி அமைச்சிற்கு 07 வாகனங்களின் பெறுகை**

**(IFB No.: ED/07/101/16/CF/2023/S-07)**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்
## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

சாரதி மற்றும் எரிபொருள் நீங்கலாக 03 வருட கால எல்லைக்கு கல்வி அமைச்சிற்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் 07 வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

1. குத்தகைதாரர் ஆகக் குறைந்தது 10 வாகனத் தொகையைக் கொண்டுள்ள இலங்கையின் முண்ணனியிலுள்ள வாகன உரிமைப் பெயர்களைக் கொண்டுள்ள உரிமம் பெற்றுள்ள முகவராகவும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற உரிமமுள்ள நிதி மற்றும் வாடகைக்கு வழங்கும் கார் கம்பனியையும் கொண்டுள்ளவராகவுமிருத்தல் வேண்டும்.
2. மாதாந்தம் செலுத்த வேண்டிய ஆகக் கூடிய குத்தகையானது பின்வருமாறு; (செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களின் பெறுகைக்கான வழிகாட்டியில் குறிப்பிட்டுள்ளவாறு)

| வாகனத்தின் இனம் | அளவு | செலுத்த வேண்டிய ஆகக்கூடிய மாதாந்த குத்தகைத் தொகை - ரூபாவில் | 3,000 கிமீ இற்கு மேலதிகமான ஒவ்வொரு கி.மீ. இற்கும் செலுத்தும் தொகை - ரூபாவில் | ஒப்பந்தக் கால எல்லை |
|---|---|---|---|---|
| மோட்டார் கார்கள்/ SUV (1200-1600 CC) | 07 | 300,000.00 | 45.00 | 36 மாதங்கள் |

3. இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளினால் ஆளப்படும் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பாவித்து விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
5. கல்வி அமைச்சின் 4 ஆம் மாடியில் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 16,500 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கள் 2023 ஏப்ரல் 6 ஆம் திகதியிலிருந்து 2023 ஏப்ரல் 26 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக உரித்தான விலைமனுதாரர்களுக்கு வழங்கப்படும்.
6. மேலேயுள்ள பெறுகை தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2023 ஏப்ரல் 18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கல்வி அமைச்சின் 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
7. 2023 ஏப்ரல் 27 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
8. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, கல்வி அமைச்சு, ''இசுறுபாய'', பத்தரமுல்ல என முகவரியிடப்பட்டு 2023 ஏப்ரல் 27 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இந்த அமைச்சின் 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**''இசுறுபாய'', பத்தரமுல்ல.**

## வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு தேசிய மிருககாட்சிசாலைகள் திணைக்களத்தின் விற்பனை சாலைகளை ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கல் 2023/2024

தேசிய மிருக காட்சிசாலை திணைக்களத்திற்கு சொந்தமான கீழ்க்காணும் நிறுவனங்களில் விற்பனை சாலைகளை ஒரு வருட (2023/2024) கால எல்லைக்குள் நடத்திச் செல்வதற்காக ஒப்பந்தக்காரர்களை தேர்ந்தெடுக்கும் முகமாக தேசிய மிருககாட்சிசாலைகள் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் 2023.04.06 முதல் 2023.04.26 பி.ப.2.00 வரை தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

**அட்டவணை 1**

| இலக்கம் | விற்பனை சாலையின் விபரம் | கேள்விப் பிணை ரு |
|---|---|---|
| 1 | புகைபடக்கூடம் - தெஹிவளை மிருகக்காட்சிசாலை | 5000/- |
| 2 | யானை மடுவத்திற்கு அருகில் (புதிய) உணவு விற்பனையகம் - தெஹிவளை மிருகக்காட்சிசாலை | 5000/- |
| 3 | யானை மடுவத்திற்கு அருகில் (பழைய) உணவு விற்பனையகம் - தெஹிவளை மிருகக்காட்சிசாலை | 5000/- |
| 4 | உணவு விற்பனை சாலை இல.01 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5000/- |
| 5 | உணவு விற்பனை சாலை இல.02 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5000/- |
| 6 | ஞாபகார்த்த விற்பனைசாலை இல.1- ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5000/- |
| 7 | ஞாபகார்த்த விற்பனைசாலை இல.2- ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5000/- |
| 8 | ஞாபகார்த்த விற்பனைசாலை இல.3- ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5000/- |
| 9 | ஞாபகார்த்த விற்பனைசாலை இல.4- ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5000/- |
| 10 | ஞாபகார்த்த விற்பனைசாலை இல.2- பின்னவல யானைகள் சரணாலயம் | 5000/- |
| 11 | உணவு விற்பனைசாலை பின்னவல யானைகள் சரணாலயம் | 5000/- |

02. கேள்விகள் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) இன் கீழ் மேற்கொள்ளப்படும்.

03. கேள்விதாரர்களுக்காக இருக்க வேண்டிய தகைமைகள் கீழ்க்காணுமாறு இருப்பதுடன் தகைமைகளை உறுதிசெய்யும் ஆவணங்களை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
வியாபார பெயர் பதிவுச்சான்றிதழ் (விற்பனைசாலைக்கு பொருமத்தமான துறையாக இருத்தல் வேண்டும்)

04. கேள்வி ஆவணங்கள், நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்கள் அநாகரிக தர்மபால மாவத்த, தெஹிவளை என்ற முகவரியிலுள்ள தேசிய மிருககாட்சிசாலைகள் திணைக்களத்தின் தலைமையகத்தில் 2023.04.06 முதல் 2023.04.25 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். அதற்காக எழுத்துமூல வேண்டுதல் மற்றும் ஒவ்வொரு விற்பனை சாலைகளுக்கும் வேறுவேறாக ரூ.1000/- விண்ணப்பப்படிவக் கட்டணம் மூலம் காசாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி சமர்ப்பிக்கும் மாதிரிகள் 02 பிரதிகளை பூர்த்தி செய்து (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென) 02 உறைகளில் இட்டு, சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையில் திறக்கப்படக்கூடிய இடங்களில் இறப்பர் முத்திரையிட்டு பொறியிடுதல் கட்டாயமாகும். அவ்வாறே உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் விற்பனை சாலைகளை ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு விடல் 2023/2024" என்று குறிப்பிடுதல் வேண்டும். மூலப்பிரதி உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் முன்னால் "மூலப்பிரதி" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

06. கேள்விப்பத்திரங்கள் "தலைவர்" பெறுகைக்குழு தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம், அநாகரிக தர்மபால மாவத்த, தெஹிவளை என்ற முகவரிக்கு 2023.04.26 பி.ப.2.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் கையோடு கொண்டு திணைக்களத்தின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாக கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் சபையின் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

08. ஒவ்வொரு விற்பனை சாலைக்கும் கேள்வி ஆவணங்களுடன் பக்க இல 02இன் அட்டவணை 1 இல் குறிப்பிடப்படும் கேள்விப்பிணைக்காக அரச அங்கீகாரம் பெற்ற வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளும் 2023.08.23 வரை செல்லுபடியாகும் வங்கிப்பிணையொன்றை அல்லது பிணைமுறியின் பெறுமதிக்கு சமமான தொகையை தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் காசாளர் பிரிவிற்கு காசாக செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். பிணைமுறி சமர்ப்பிக்காத கேள்விப்பத்திரங்கள் கவனத்தில் கொள்ளப்படாது நிராகரிக்கப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

09. பொருத்தமான கேள்விதாரரை தேர்ந்தெடுத்தல் பற்றிய முழுமையான உரிமை திணைக்கள பெறுகைக்குழுவிற்கு உரியது. அதற்காக எந்த விதத்திலும் வற்புறுத்தல், தேர்ந்தெடுப்பதற்கான தகைமையற்றதாகக் கருதப்படும். இக்கேள்விகோரல் அறிவித்தல் மூலம் மற்றும் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அதுபற்றி தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது. இதுபற்றிய மேலதிக விபரங்களை 0112710807 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் திணைக்களத்தின் பிரதம கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு**
**தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்**
**அநகாரிக தர்மபால மாவத்த**
**தெஹிவளை**

## சியட் களனி இன்டர்நெசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிடெட் உடன் சியட் களனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிடெட்டின் கூட்டிணைவு

### பொது அறிவித்தல்

**கம்பனி சட்டத்தின் 242 (1) ஆம் பிரிவு விதிகளில் உள்ளவாறு சியட் களனி இன்டர்நெசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிடெட் (கம்பனி பதிவு இல. பிவீ 4488) உடன் சியட் களனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிடெட் (கம்பனி பதிவு இல. பிவீ 784) இன் முன்மொழியப்பட்ட கூட்டிணைவு ஒன்றின் (சட்டம்) 2007இன் 07ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 244 ஆவது பிரிவின் (3) (b) உப பிரிவின் விதிகளுக்கு அமைவான பொது அறிவித்தல்.**

சியட் களனி இன்டர்நெசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிடெட் உடன் சியட் களனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிடெட்டின் கூட்டிணைவு தொடர்பாக தினமின. தினகரன் மற்றும் டெயிலி நியுஸ் ஆகிய பத்திரிகைகளில் 2023 பெப்ரவரி 17 ஆம் திகதியன்று கொழும்பில் வெளியிடப்பட்டதும் 2023 மார்ச் 10 ஆம் திகதியன்று மேலேயுள்ள விடயம் தொடர்பாக அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தேசிக்கப்பட்ட கூட்டிணைவின் முன்னைய அறிவித்தலுக்கு கூடுதலாக கூட்டிணைவானது இப்போது பூர்த்தி செய்யப்பட்டதுடன் கூட்டிணைவின் செயல்வலுப்பெறும் திகதியானது கூட்டிணைவு சான்றிதழில் காட்டப்பட்டுள்ள திகதியான 2023 மார்ச் 31 ஆம் திகதியாகுமென இத்தால் நாம் அறிவித்தல் வழங்குகின்றோம்.

**சியட் களனி இன்டர்நெசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிடெட்டின் பணிப்பாளர்களின் ஆணைப்படி
பீ.ஆர். கோபரேட் (பிறைவெட்) லிமிடெட்
செயலாளர்கள்
2023 ஏப்ரல் 4 ஆம் நாளாகிய இன்று.**

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)

**மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – (மேல் மாகாணம்)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கட்டிட நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் கோருகிறார்.
2. ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்காதவர்களாகவும் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் எதிரில் தரப்பட்டுள்ள CIDA (ICTAD) பதிவுடன் மேல் மாகாண நிர்வாக எல்லைக்குள் கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
3. 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-12, இல. 59, செபஸ்தியன் மேடு, 2ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), பெறுகை அதிகாரியிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே. 011-5107010) என்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2023 ஏப்ரல் 06ஆம் திகதி முதல் வேலை நாட்களின் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஏப்ரல் 06ஆம் திகதி முதல் 2023 ஏப்ரல் 20ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணத்தையும் மற்றும் எழுத்துமூல விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), 2ஆம் மாடி, பெறுகை அதிகாரியிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திட்டப் பெயரை''க் குறிப்பிட்டு தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 என முகவரியிட்டு கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) பெறுகை அதிகாரிக்கு 2023 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. சுய விருப்பத்தின் பேரில் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவுறுத்தப்பட்டுள்ள நேரத்திற்கு பின் உடனடியாகத் திறக்கப்படும்.
8. சகல விலைமனுக்களுடனும் 2023 ஆகஸ்ட் 17ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணை முறியானது விலைமனு ஆவணத்தின் நிலையான படிவத்தில் உள்ளவாறு வங்கி உத்தரவாதம்/ காப்புறுதி பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எவ்விதமான செலவுகளுக்கும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்புக்கூற மாட்டாது.
10. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது எக்காரணம் கொண்டும் எந்நேரத்திலும் வருடாந்த செயற்பாடுகளை மேற்கொள்ளாத மற்றும் பொருத்தமான எண்ணிக்கையாகக் கருதப்படும் எந்தவொரு எண்ணிக்கைக்கும் ஒப்பந்தக்காரர்களின் பட்டியலை கட்டுப்படுத்தும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,
பெறுகைக் குழு,
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),
இல. 59, புனித செபஸ்தியன் மேடு,
கொழும்பு-12.**

**விலைகூறல் அட்டவணை – 2023**

| தொ. இல | நிறைவேற்றுப் பொறியியலர் பிரிவு | கேள்வி இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | செயற்றிட்டத்தின் விபரம் | கேள்வியிடக் கூடிய தொகை வெட் இன்றி (மில்லியன்) | ஆகக் குறைந்த ICTAD தரம் (கட்டிடங்கள்) | செயற்றிட்டக் காலம் (மாதங்கள்) | தக்க வைக்கும் காலம் (மாதங்கள்) | கேள்விக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) வெட் 15% மற்றும் 2.5% SSCL வரியுடன் (ரூபா) | பிணை முறியின் பெறுமதி வங்கி உத்தரவாதம் அல்லது காப்புறுதிப் பிணை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கம்பஹா (திவுலப்பிட்டிய) | PE/2023/GA/06 | வல்பிட்டயில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி | கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணித்தல் | 12.51 | C-05 அல்லது C-06 | 3 | 12 | 4,125.75 | 188,000.00 |

**அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

மாவட்ட செயலகம் - மொனராகல

## பெறுகை அறிவித்தல்

கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் அளவை விடயங்களை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து விடயங்கள் சார்பாக தேவைப்படும் 20 வாகனங்களை வழங்குவதற்கு தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மொனராகல மாவட்ட செயலகத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் 2023 ஏப்ரல் 26 பி.ப.2.30 வரை ஏற்கப்படும். அளவை விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகை, கேள்விதாரர்கள் வழங்க வேண்டிய குறைந்தபட்ச வாகனங்களின் எண்ணிக்கை வழங்க வேண்டிய வாகனங்கள் பற்றிய விபரம் மற்றும் வாகனங்கள் வழங்க வேண்டிய கால எல்லை என்பன அட்டவணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு மீளளிக்கப்படாத கேள்வி வைப்பொன்றை மொனராகல மாவட்ட செயலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளும் கேள்வி மாதிரிகளில் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை பொறியிட்டு குறித்த தினம் குறித்த நேரத்திற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளருக்கு கிடைக்கச் செய்யுமாறு வேண்டப்படுகிறது.

- 2023.04.10 முதல் 2023.04.26 வரை கேள்வி மாதிரியை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்கு மாவட்ட செயலகத்தின் கணக்குப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
- சாதாரண அலுவலக நேரங்களில் மாவட்ட செயலகத்தின் கணக்குப்பிரிவில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.
- அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு, இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து "மாவட்ட செயலகம், மொனராகல" என்ற முகவரிக்கு பெற்றுக்கொண்ட செல்லுபடியாகும் கேள்விப்பிணையொன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதியை மொனராகலை மாவட்ட செயலாளருக்கு காசாகவும் வைப்புச் செய்யலாம்.
- தேசிய போட்டி கேள்விகோரல் மூலம் வழங்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்
- கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு முடிவடைந்தவுடன் அதாவது, 2023 மே 02 பி.ப.2.30 இற்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு கேள்விதாரர்களுக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவகாசம் அளிக்கப்படும்.
- கேள்விப்பத்திரங்கள் சகல பக்கங்களும் கேள்விதாரர்களால் கையொப்பமிட்டு நிறுவனத்தின் முத்திரையை வைத்தல் வேண்டும்.
- அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்டுள்ள கேள்விதாரர்களுக்கு கேள்விகளை சமர்ப்பிக்க முடியாது.
- இந்த விடயத்தை ஒப்படைப்பதுடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்களுடன் தொடர்புபட்ட இறுத்தீர்மானம் எடுத்தல் கமிட்டிக்கு உரியது.
- மேலதிக விபரங்களுக்கு 055-2276067 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் மாவட்ட செயலகத்தின் கணக்குப்பிரிவில் விசாரிக்கலாம்.

**அட்டவணை**

| இணைப்பு இலக்கம் | விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ) (வெட் இன்றி) | கேள்விப் பிணைமுறி (ரூ) (2023.08.02 வரை செல்லுபடியாதல் வேண்டும்) | வழங்க வேண்டிய குறைந்தபட்ச வாகன எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்வி வைப்பு (ரூ) |
|---|---|---|---|---|---|
| MON/ DS/ ACC/10 /2023 /03 | மொனராகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலகப்பிரிவில் கொட்டியாகல தெம்பிலித்த பிரதேசத்தின் அளவை விடயங்களை மேற்கொள்வதற்காக 8 பேர் கொண்ட குழுவினரை போக்குவரத்து செய்யக்கூடிய கடினமான பாதைகளிலும் பிரயாணம் செய்யக்கூடிய (Off Road) 20 வாகனங்களை 03 மாத காலத்திற்கு சாரதி மற்றும் எரிபொருளுடன் வாடகைக்கு வழங்குதல் | 36.00 மில்லியன் | 9000.00 (ஒரு வாகனத்திற்கு) | ஒரு நிறுவனம் அல்லது உரிமையாளரால் குறைந்தபட்சம் 04 வாகனங்களை வழங்க வேண்டும். | 3500.00 |

**கே.பிரகீத் குலதிலக்க
மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்)
மொனராகல மாவட்ட செயலாளர் சார்பாக
மாவட்ட செயலகம்
மொனராகல**

**கைத்தொழில் அமைச்சு**

## சர்வதேச தர சான்றிதழுக்கான அரசாங்கத்தின் நிவாரணம் - 2023

### ISO 9001, ISO 14001, ISO 22000, ISO 50001

கைத்தொழில் அமைச்சினால் உள்நாட்டு கைத்தொழில்களின் பயன்பாடுகளை மேலோங்கச் செய்வதற்கு தர முகாமைத்துவத்தை மேம்படுத்துதல், சுற்றாடல் முகாமைத்துவத்தை மேலோங்கச் செய்தல், வலுசக்தி வினைத்திறன் மற்றும் உணவுப் பாதுகாப்பு மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தையினுள் போட்டி ரீதியில் பிரவேசிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் 2023 ஜனவரி 01ஆம் திகதியில் வருடாந்த புரள்வாக 750 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த மற்றும் 300 ஊழியர்களுக்கும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட பின்வரும் பிரிவுகளுக்குரித்தான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு மேற்கூறப்பட்ட சர்வதேச தரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கலாம்.

- பதப்படுத்தப்பட்ட உணவு உற்பத்திகள்
- தேயிலை சார்ந்த உற்பத்திகள்
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணம்
- வாசனைத் திரவிய உற்பத்திகள்
- தும்பு மற்றும் தும்பு சார்ந்த உற்பத்திகள்
- பொதியிடல்
- பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகள்
- மருந்து உற்பத்திகள்
- கனிமம் சார்ந்த உற்பத்திகள்

**பிரதிபலன்கள்:**
- தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களுக்கு அதிகபட்சம் 200,000.00 ரூபா வரையான சான்றிதழ் கட்டணம் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின் குறித்த கட்டணம் பிரதியீடு செய்யப்படும்.
- அரசு சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வதானால் ஆலோசனைச் சேவைக் கட்டணம் அதிகபட்சம் 100,000.00 வரை பிரதியீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- சான்றிதழ் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் காலத்தினுள் விசேட புரிந்துணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்படும்.

**தகுதிகள்:**
- தற்போது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மற்றும் கடந்த 3 வருடங்களில் தொடர்ச்சியாக உற்பத்தி நடவடிக்கைளை நடாத்திக்கொண்டு சென்ற நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
- நேர்முகத் தேர்வு மேற்கொள்ளும் வேளையில் குறித்த சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக சான்றுபடுத்தும் நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்காத கைத்தொழிலாகவிருத்தல் வேண்டும்.
- மேற்கூறப்பட்ட சான்றுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னைய வருடங்களில் எவ்வித பிரதிபலன்களையும் பெற்றுக்கொள்ளாத கைத்தொழில்களுக்கு தெரிவின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

**தேர்ந்தெடுக்கப்படும் முறை:**
- பத்திரிகை அறிவித்தலில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் மற்றும் நேர்முகத் தேர்வில் உறுதி செய்துகொள்ளப்படும் விடயங்களின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஏனைய நிபந்தனைகள்:**
- இலங்கை கட்டளைகள் நிறுவனத்தில் (SLSI) அல்லது இலங்கை அங்கீகார சபையினால் (SLAB) அங்கீகரிக்கப்பட்ட சான்றுபடுத்தும் நிறுவனமொன்றில் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- சான்றிதழ் மற்றும் பற்றுச்சீட்டை 2023 ஒக்டோபர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் அமைச்சிற்குச் சமர்ப்பித்து குறித்த சான்றிதழ் கட்டணம் மற்றும் ஆலோசனைக் கட்டணத்தை பிரதியீடு செய்துகொள்ளல் வேண்டும்.
- உள்நாட்டுக் கைத்தொழிலாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தபட்சம் உள்நாட்டு பங்குதாரர் 60% நிறுவனத்தின் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- குறித்த கைத்தொழில் சான்றுபடுத்தல் செயற்படுத்தப்படும் காலத்தினுள் வேறு அரசாங்க நிறுவனங்களில் இதற்குச் சமமான பிரதிபலன்களைக் பெற்றுக்கொள்ளாமல் இருக்க வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன் தமது நிறுவனத்தின் சான்றுபடுத்துதல் செயற்பாடுகளை நிறைவு செய்வதாக அமைச்சுடன் இணக்க உடன்படிக்கையொன்றுக்கு உடன்படல் வேண்டும்.
- பெற்றுக்கொண்ட தரச் சான்றிதழை குறைந்தபட்சம் 07 வருடங்களுக்காவது தொடர்ந்து நாளது தரவேற்றம் செய்து பேணுதல் வேண்டும்.

**விண்ணப்பித்தல்:**

பின்வரும் QR குறியீடு அல்லது கூகுல் நீடிப்பு மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2023 ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

தொலைபேசி இல. - 0112422319, 0112327398
முகவரி - பணிப்பாளர், அபிவிருத்திப் பிரிவு I, IV, கைத்தொழில் அமைச்சு, 73/1, காலி வீதி, கொழும்பு 03.
Email - iso2023.mi@gmail.com

**செயலாளர்,
கைத்தொழில் அமைச்சு,
இல. 73/1, காலி வீதி, கொழும்பு 03.**

Google Form Link - Shorturl.atldqBDB

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மின்சக்தி எரிசக்தி அமைச்சு
### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
### வெள்ளை கேன்களை வழங்குதல்

**B/13/2023**

வெள்ளை கேன்களை வழங்குவதற்காக நம்பகமான வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தங்களை வழங்குவதற்கு தகைமைபெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்படும் தகைமை மற்றும் தகவுத் திறன்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இ.பெ.கூ. இற்கு ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 3,500.00 (ரூ. 2969.25+2.5% SSLL+15%VAT) செலுத்தி பின்பு கொழும்பு-09 டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, இல. 609, 1ம் மாடி, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) அலுவலகத்திலிருந்து. 2023.04.25 முதல் 09.00 மணி முதல் 15.00 மணிக்கிடையில் வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எல்லா விலைமனுவுடனும் ரூ. 122,000.00 ஓர் விலைமனுப் பிணை தொகையை இணைத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023.04.26 14.00 மணிக்கு மூடப்படும் அத்துடன் விலைமனு மூடப்பட்ட பின்பு உடனடியாக கீழே தரப்படும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள், அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதி நிதிகளுக்கு சமுகமளிக்கலாம். 1987ம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் https://eroc.drc.gov.lk இணைய தளம் ஊடாக உத்தேச மனுதாரர்கள் பதிவு செய்தல் வேண்டும். அத்துடன் அவர்களது விலைமனுவுடன் PCA3 சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெளிவுபடுத்தல்கள் (ஏதாவது இருப்பின்) உதவி முகாமையாளர் இடம் (Agro) தொ.பே. இல. 0773173920 ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/ப, முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல. 609, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த,**
**கொழும்பு-09, இலங்கை.**
**தொ,பே. 0094-115455335**
**பெக்ஸ்: 0094115455424**

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
பியுமி -077 7 278 948 -011 2 429 383
கயனி -011 2 429 347 -011 2 429 342/343

## மக்கள் வங்கி

### 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2022 நவம்பர் 29 ஆந்தேதி நடைபெற்ற அதனது கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், PV 70320 எனும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதும், இல. 115,சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரியில் அதனது பதிவுபெற்ற அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான நவலோக ஸ்டீல் இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட் லிமிட்டட் நிறுவனமானது, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஏ.சீ. குமாரசிறி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020 ஆகஸ்ட் 14 ஆந்தேதிய 2293 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால் சொல்லப்பட்ட ஈட்டுமுறி மீதான மேலதிக வட்டியுடன் சேர்த்து ஒன்பது மில்லியன் நான்கு இலட்சத்து ஏழாயிரத்து எழுநூற்றி பதினைந்து ரூபா தொண்ணூற்றியொரு சதம் (ரூபா.9,407,715.91) பணத்தொகை இப்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது.

2022.09.29 ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை எட்டு மில்லியன் இருபத்தெட்டாயிரத்து எண்ணூற்றி எண்பத்து மூன்று ரூபா எண்பது சதம் (ரூபா. 8,028,883.80) பணத்தொகைமீது ஆண்டுக்கு AWPLR + 6.5% எனும் வீதத்திலான மேலதிக வட்டியுடன் சேர்த்து, மேற்சொல்லப்பட்ட ஒன்பது மில்லியன் நான்கு இலட்சத்து ஏழாயிரத்து எழுநூற்றிப் பதினைந்து ரூபா தொண்ணூற்றியொரு சதம் (ரூபா.9,407,715.91) பணத்தொகையையும் அத்துடன் பெறப்பட்டதிலிருந்தான கொடுப்பனவு (ஏதேனுமிருப்பின்) அதனையும் கழித்த பின்னர், சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டப் பிரிவின்கீழ் (29L) அறவிடப்படத்தக்கவையான செலவுதொகைகளையும் பணங்களையும் அறவிடுவதற்காக, இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்டுள்ளதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஏ.சீ. குமாரசிறி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020 ஆகஸ்ட் 14 ஆந்தேதிய 2293 ஆம் இலக்கமுடைய மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும், இல.6ஏ, பெயார்.்.பீல்ட் தோட்டம், கொழும்பு 08 எனும் முகவரியைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலதாரர் ஷொக்மன் மற்றும் சமரவிக்கிரம என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கி சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல கோரளே தெற்கு, ஒத்தர பலாத்தயில் வென்னப்புவ பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இல.468B மெத ஹால்தன்டுவன கிராம அலுவலர் பிரிவினுள் வருகின்ற ஹால்தன்டுவன மற்றும் புஜ்ஜம்பொல கிராமங்களில் அமைந்துள்ளதும், ஹேனேபொல்வத்த, மறுபெயர், தங்கெலே எனவழைக்கப்படுவதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் டப்ள்யூ.எல்.எச். பெர்ணான்டோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.07.23ஆந் தேதிய 8996ஆம் இலக்க வரைப்படத்தில் காணித்துண்டம் 1 எனக் குறித்துக்காட்டப்பட்டு அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளை உடையது வடக்கு: ஜே.ஏ.ஜயலத் என்பவரின் மரபுரிமையாளர்களினால் உரிமைகோரப்பட்ட நெற்காணி மற்றும் கால்வாய் கிழக்கு: 5356 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 தெற்கு: காணித்துண்டம் 2 மற்றும் L.R.C. இற்கு உரித்தாகவுள்ள காணி மேற்கு: வீதி (வீடுகளுக்கான பிரதான வீதி) (PS) ஆர்.டீ. ஜகத் நிரோஷனின் காணி, ஆர்.டீ. பப்ளிஸ் மற்றும் ஏனையோரின் காணி, மற்றும் ஆர்.டீ. பியசேனவின் காணி, அத்துடன் பரப்பளவில் இது, கட்டிடங்கள், பயிச்செய்கைகள் மற்றும் அதன்மேலுள்ள எல்லாவற்றையும் சேர்த்து, பதினொரு ஏக்கர்களையும் பதினெட்டு பேர்ச்சுக்களையும் (11ஏ. 00றூ. 18பே.) கொண்டுள்ளதுடன் மாறவில காணிப் பதிவகத்தில் உரித்து E.111/274 என்பதன்கீழ் பதிவுசெய்யப்பட்டும் உள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**
**பிரதி பொது முகாமையாளர் (அறவீடுகள்)**
**மக்கள் வங்கி,**
**அறவீடுகள் பிரிவு**
**10 ஆவது மாடி, தலைமை அலுவலகக் கட்டிடம்**
**இல. 75, சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02**
**2022.10.31**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி சபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்
## புத்தம் புதிய பசும்பால் விற்பனை

2023 மே 1 ஆம் திகதியிலிருந்து 2023 ஜூலை 31 ஆம் திகதியன்று வரையுமான கால எல்லைக்கு கீழே குறிப்பிட்டுள்ள பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட புத்தம் புதிய பாலை விற்பனை செய்வதற்காக உள்ளூர் கொள்வனவுக்காரர்கள்/ கம்பனிகளிடமிருந்து கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி சபைத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பண்ணை | நாளொன்றிற்கான லீற்றர்கள் பால் (ஆகக்கூடியது) | பண்ணை | நாளொன்றிற்கான லீற்றர்கள் பால் (ஆகக்கூடியது) |
|---|---|---|---|
| ரிதியகம பண்ணை, அம்பலந்தொட்ட | 4,500 | கல்பொக்குண பண்ணை, உடுபத்தாவ | 200 |
| மெனிக்பாலம பண்ணை, போப்பத்தலாவ | 3,000 | கவுள்வெவ பண்ணை, நாரம்மல | 500 |
| டயகம பண்ணை, டயகம | 2,500 | ருக்கத்தன பண்ணை, பிங்கிரிய | 200 |
| போப்பத்தலாவ பண்ணை, போப்பத்தலாவ | 2,000 | நாரங்கல பண்ணை, கிதலாவ | 200 |
| ரொசிட்டா பண்ணை, கொட்டகல | 100 | சிரிங்கபாத்த பண்ணை, படல்கம | 100 |
| மெல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர | 100 | நிக்கவெரட்டிய பண்ணை, நிக்கவெரட்டிய | 100 |
| மஹாபேரதென்ன பண்ணை, திகன | 100 | ஓயமடுவ பண்ணை, அலையபத்துவ | 100 |
| ஆண்டிகம பண்ணை, தம்பதெனிய | 500 | | |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இது தொடர்பாக தேபஅச தலைமை அலுவலக சந்தைப்படுத்தல் பிரிவுடன் அல்லது மேலேயுள்ள ஏதாவதொரு பண்ணை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ''தலைவர், பெறுகைக் குழு, தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என்ற முகவரியை 2023 ஏப்ரல் 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'Bids for Purchasing Fresh Milk', என தயவு செய்து குறித்துரைக்கவும். விலைமனுக்கள் அதே நாளில் அதே இடத்தில் பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படும்.

அனைத்து விபரங்கள் மற்றும் நிபந்தனைகளும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல விதி, நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**
**011-2501701/2, 0773782127 (சந்தைப்படுத்தல் முகாமையாளர்)**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### நகர அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலையின் வருமானத்திலிருந்து நிதியிடப்பட்டது**

## EOM&M பிரிவிற்கு பணம் கணக்கிடல் இயந்திரம் மற்றும் BARCODE READERS ஐ வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

**Contract No.: RDA/EOM&M/PRC/2022/Toll/03**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் மூலமாக மேலேயுள்ள பெறுகைக்காக, தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, நெடுஞ்சாலைகள் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | அளவு (எண்ணிக்கை) |
|---|---|---|
| 01. | RDA/EOM & M/PRC/2023/Toll/03<br>கணக்கிடல் இயந்திரங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | 07 |
| 02. | RDA/EOM & M/PRC/2023/Toll/02<br>Barcode Readers இன் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | 80 |

2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 038-2289122. தொலைநகல்: 038-2289560) அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

3. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாக புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, ''மகநெகும மஹாமெதுர'', 216 ஆம் இலக்கத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

4. 2023.04.06 ஆம் திகதியிலிருந்து 2023.04.27 ஆம் திகதி வரையும் வார இறுதிகள் மற்றும் வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500 ரூபா + ஏற்புடையதான வரிகளைச் செலுத்திய பின்னர், **பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவிற்கான பணிப்பாளருக்கு** விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் ஒவ்வொரு தொகுதியும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

5 முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.04.28 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் **பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவின் பணிப்பாளருக்கு** அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தை தயவு செய்து குறிந்துரைக்கவும்.

6. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே **பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவின் பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.** விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறத்தல் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**EOM&M பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் (EOM&M பிரிவு) மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.**

## களனிப் பல்கலைக்கழகம்
# விலைக்கோரலுக்கான அழைப்பு

**திகதி** : **2023 ஏப்ரல் 06ஆம் திகதி**
**கடன் மற்றும் தலைப்பு** : **கடன் 3698/3699- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம்**
**ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** : **MOE/STHRD/KE-E52: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள தரவு நிலையத்திற்கான சேமிப்பகத்தின் (Servers) பெறுகை**
**விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** : **2023 மே 10ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு**

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. களனி பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் MOE/STHRD/KE-E52: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள தரவு நிலையதிற்கான சேமிப்பகத்தின் (Servers) பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது களனி பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள உத்தேச நூலகக் கட்டிடத்திற்கு இயந்திரவியல் பொறியியல் வேலைத்தளத்திற்கான உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பதை அடக்குகின்றது.
3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| உருப்படி இல. | விபரங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | கடந்த 5 வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குனராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (இல. ரூபா) | கடந்த மூன்று வருடங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தக்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. (இல. ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Servers | 02 | 11 மில்லியன் | 44 மில்லியன் |

5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,
   செயற்திட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   11ஆம் தளம் (அறை இல. L 11-5)
   கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,
   களனி பல்கலைக்கழகம்,
   பல்கலைக்கழக டிரைவ்,
   புலுகஹ சந்தி, கண்டி வீதி,
   களனி, இலங்கை.

   தொலைபேசி: +94 (0)11 2984879 , 071-9607455, 071-4492382
   தொலைநகல்: +94 11 2984879
   மின்னஞ்சல்: dpd-sthrd@kln.ac.lk

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "MOE/STHRD/KE-E52: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள தரவு நிலையதிற்கான சேமிப்பகத்தின் (Servers) பெறுகை என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு வேண்டுகோள் ஒன்றையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவை செலுத்துதல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் 2023 மே 09ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று மற்றும் வேலைத்தள விஜயம் 2023 ஏப்ரல் 19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வேலைத்தள விஜயத்தைத் தொடர்ந்து மு.ப. 10.00 மணிக்கு களனி, கண்டி வீதி, பல்கலைக்கழக டிரைவ், களனி பல்கலைக்கழகத்தின் கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடத்தின் மாநாட்டு அறையில் இடம்பெறும்.
8. 2023 மே 19ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   **பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
   **செயற்திட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **11ஆம் தளம் (அறை இல. L 11-5)**
   **கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,**
   **களனி பல்கலைக்கழகம்,**
   **பல்கலைக்கழக டிரைவ்,**
   **புலுகஹ சந்தி, கண்டி வீதி, களனி.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "MOE/STHRD/KE-E52: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் பீடத்திலுள்ள தரவு நிலையதிற்கான சேமிப்பகத்தின் (Servers) பெறுகை" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி, இலங்கை.**
**திகதி: 2023 ஏப்ரல் 06.**

# சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ.கே.பிரபாத் சந்ரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர்**
**அதிபதி**

தொழில் திணைக்களம்
கொழும்பு - 05
2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி

| | |
|---|---|
| **கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தி தொழில்** | **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ.1818.30** |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின்படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

# சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ.கே.பிரபாத் சந்ரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர்**
**அதிபதி**

தொழில் திணைக்களம்
கொழும்பு - 05
2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி

| | |
|---|---|
| **கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தி தொழில்** | **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ.1825.88** |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின்படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

### இறுதித்தீர்மான பொது அறிவித்தல்

**கேகாலை மாவட்டத்தில், தெஹியோவிட, டென்ஸ்வர்த் தோட்ட பிரதேசத்தில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கறுவா தொழிற்சாலை அமைப்பதற்கான செயற்றிட்டம் (8000 சதுர அடி) தொடர்பான**

**ஆரம்ப சூழல் அறிக்கை (ஆசூஅ)**

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9(i) இற்கமைவாக தெஹியோவிட, மஹாஓய சமூகம், பொது முகாமையாளரிற்கு மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**"பரிசர பியச"**
**இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை**
**பத்தரமுல்ல**

## மக்கள் வங்கி
### கிராண்ட்பாஸ் கிளை (126)

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் மற்றும் 2019 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் மற்றும் 2019 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2023 பெப்ருவரி 27 ஆந்தேதி நடைபெற்ற அதனது கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், PV 84732 எனும் பதிவிலக்கத்தையுடையதும், இல.21, பகதலே வீதி, கொழும்பு 03 எனும் முகவரியில் தனது பதிவுபெற்ற அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான சிலோன் கெட்ச் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனமானது, மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எச்.எம்.எல். புஷ்பா குமாரி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020.09.03 ஆந்தேதிய 2932 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலால், சொல்லப்பட்ட ஈட்டுமுறிமீது முதலாக வழங்கப்பட்ட பன்னிரெண்டு மில்லியன் எட்டு இலட்சத்து அறுபத்தையாயிரத்து ஐநூற்றிப் பத்து ரூபா எண்பது சதம் (ரூபா. 12,865,510.80) பணத்தொகையையும் மற்றும் திரண்ட வட்டியான மூன்று மில்லியன் ஏழு இலட்சத்து தொண்ணூற்றி மூவாயிரத்து அறுநூற்றி நாற்பத்தொன்பது ரூபா அறுபத்தெட்டு சதம் (ரூபா. 3,793,649.68) பணத்தொகையையும் உள்ளடக்குகின்றதான, பதினாறு மில்லியன் ஆறு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து நூற்றி அறுபது ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூபா. 16,659,160.48) பணத்தொகை இப்போது, 2023.01.24 ஆந்தேதி வரை, மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது.

2023.01.25ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை, ஆண்டுக்கு AWPLR + 4.5% (காலாண்டு ரீதியிலான மீளாய்வு) எனும் வீதத்தில், பன்னிரெண்டு மில்லியன் எட்டு இலட்சத்து அறுபத்தையாயிரத்து ஐநூற்றிப் பத்து ரூபா எண்பது சதம் (ரூபா.12,865,510.80) பணத்தொகையை, அப் பணத்தொகை மீதான வட்டியுடன் சேர்த்து வரும், பதினாறு மில்லியன் ஆறு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து நூற்றி அறுபது ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூபா.16,659,160.48) பணத்தொகையையும் அத்துடன் பெறப்பட்டதிலிருந்தான கொடுப்பனவு (ஏதேனுமிருப்பின்) அதனையும் கழித்து, சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தினது பிரிவின்கீழ் (29L) அறவிடத்தக்க செலவுத் தொகைகளையும் விதிப்பனவுகளையும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட ஈட்டு முறிமூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலதாரர் ஈ.எஸ்.ராமநாயக்க என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் மற்றும் 2019 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கி சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனம் பற்றிய விவரணம்**

வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டத்தில் மாறவில பதிவுப் பிரிவினுள் பிட்டிகல கோரளே தெற்கு, ஒத்தர பலாத்தயில் வென்னப்புவ பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும், இஹல புஜ்ஜம்பொல (புத்கம்பொல) இல. 470ஏ என்னும் கிராம அலுவலர் பிரிவினுள்ளும் வருகின்ற துமுன்னகர மற்றும் புஜ்ஜம்பொல கிராமத்தில் அமைந்துள்ளதும், "கொஸ்ஹேன தோட்டம் எனவழைக்கப்படுவதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஜீ.ஏ.எச். குணத்திலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.02.24 ஆந்தேதிய 2741சீ எனுமிலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட "காணித்துண்டம் 01" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் 01 பின்வரும் எல்லைகளை உடையது வடக்கு: உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ்.பீ.அபேக்கோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட, 2002.03.15 ஆந்தேதிய 6847ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட அதே காணியின் பாகம் மற்றும் மாவத்தகமயிலிருந்து லிஹிரியகம வரையிலான வீதி (மாகாண சபைக்குரியது) கிழக்கு: உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ்.பீ. அபேக்கோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட, 2002.03.15 ஆந்தேதிய 6847 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட அதே காணியின் பாகம் மற்றும் ஏ.ஆர். பெரேரா என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணி தெற்கு: ஏ.ஆர்.பெரேரா என்பவரினால் உரிமைகோரப்பட்ட காணி மற்றும் இதன் காணித்துண்டம் 02 மேற்கு: இதன் காணித்துண்டம் 02 மற்றும் மாவத்தகமயிலிருந்து லிஹிரியகம வரையிலான வீதி (மாகாண சபைக்குரியது) அத்துடன் பரப்பளவில் இது கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதன்மேலுள்ள எல்லாவற்றையும் சேர்த்து ஆறு ஏக்கர்கள், ஒரு றூட் மற்றும் ஐந்து பேர்ச்சுக்களை (06ஏ. 01றூ. 05பே.) அல்லது 2.54196 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் மாறவில காணிப் பதிவகத்தில் E214/129 எனும் பதிவிலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டும் உள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**

**கையொப்பம்**
**பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வடக்கு)**

**பதவி முத்திரை:**
**எஸ்.எல்.எம்.ஏ.எஸ். சமரதுங்க பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம்**
**கொழும்பு வடக்கு**

**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமை அலுவலகம்**
**இல.11, டியுக் வீதி**
**கொழும்பு 01**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## மக்கள் வங்கி
### மத்திய நகரக் கிளை (176)

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினாலும் மற்றும் 2019ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினாலும் மற்றும் 2019ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான, 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2023 பெப்ரவரி 27 ஆந்தேதி நடைபெற்ற அதனது கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இல.160, ஹேவாஹெட்ட வீதி, பழைய வைத்தியசாலை சந்தி, தெல்தோட்ட எனும் முகவரியைச் சேர்ந்த ரன்வலகே சஜீவ இந்திக துஷார, மறுபெயர் சஜீவ இந்திக துஷார ரன்வல (ஷோவி மவுண்டன் வீவ் மற்றும் கெமி அருண ஸ்டோர்ஸ் நிறுவனத்தின் தனியுரிமையாளர்) என்பவர்,

மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே.ரீ.பி.பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020.02.05 ஆந்தேதிய 177ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும், 2021.03.04 ஆந் தேதிய 285ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் மற்றும் 2020.01.06 ஆந்தேதிய 165ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால், சொல்லப்பட்ட 177ஆம், 285ஆம் மற்றும் 165ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது, முதலாக வழங்கப்பட்ட பதின்மூன்று மில்லியன் ஐந்து இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்றி இருபத்தொன்பது ரூபா இருபத்தொரு சதம் (ரூபா.13,516,229.21) பணத்தொகையையும் மற்றும் அதன் மீது திரண்ட வட்டியான ஒரு மில்லியன் ஒரு இலட்சத்து அறுபத்தோராயிரத்து முன்னூற்றி முப்பத்தெட்டு ரூபா தொண்ணூற்றி நான்கு சதம் (ரூபா.1,161,338.94) பணத்தொகையையும் உள்ளடக்குகின்றதான, பதினான்கு மில்லியன் ஆறு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐநூற்றி அறுபத்தெட்டு ரூபா பதினைந்து சதம் (ரூபா. 14,677,568.15) பணத்தொகை இப்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது.

2023.01.18ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை, ஆண்டுக்கு AWPLR + 6.5% (வருடாந்த மீளாய்வு) எனும் வாராந்த வட்டி வீதத்தில், ஒன்பது மில்லியன் நாற்பத்தையாயிரத்து எழுநூற்றிப் பன்னிரெண்டு ரூபா முப்பத்தாறு சதம் (ரூபா. 9,045,712.36) பணத்தொகையையும், 2023.01.18ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை, ஆண்டுக்கு AWPLR 3.5% (வருடாந்த மீளாய்வு) எனும் வாராந்த வட்டி வீதத்தில், மூன்று மில்லியன் ரூபா (ரூபா.3,000,000.00) பணத்தொகையையும், 2023.01.25 ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை, ஆண்டுக்கு AWPLR + 4.5% (வருடாந்த மீளாய்வு) எனும் வட்டி வீதத்தில், ஒரு மில்லியன் நான்கு இலட்சத்து எழுபதாயிரத்து ஐநூற்றிப் பதினாறு ரூபா எண்பத்தைந்து சதம் (ரூபா.1,470,516.85) பணத்தொகையையும், அப்பணத்தொகைகள் மீதான வட்டியுடன் சேர்த்துவரும் மொத்தப் பணத்தொகையான சொல்லப்பட்ட பதினான்கு மில்லியன் ஆறு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐநூற்றி அறுபத்தெட்டு ரூபா பதினைந்து சதம் (ரூபா.14,677,568.15) பணத்தொகையை, பெறப்பட்டதிலிருந்தான கொடுப்பனவு (ஏதேனுமிருப்பின்) அதனையும் கழித்து, சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தினது பிரிவின்கீழ் (29L) அறவிடத்தக்க செலவுதொகைகளையும் விதிப்பனவுகளையும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள்மூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலதாரர் பிரேமசிறி வாதுகே என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினாலும் மற்றும் 2019 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கி சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனம் பற்றிய விவரணம்**

மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் மற்றும் இல.1040 கோனன்கொட கிராம அலுவலர் பிரிவினுள்ளும் வருகின்ற பாத்தஹேவாஹெட்டயிலுள்ள ஹேவாவிஸ்ஸ கோரளேயில் கபடாகம் (பட்டியகம) கிராமத்தில் அமைந்துள்ளதும், "நாரங்கீன்வத்த ஏக்கர் 200 லூல்கந்துர" எனவழைக்கப்பட்டு அறியப்படுவதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம். விஜேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2019.09.18 ஆந்தேதிய 19/09/18 ஆம் இலக்க வரைப்படத்தில் குறித்துக்காட்டப்பட்ட "காணித்துண்டம் 01" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் 01 பின்வரும் எல்லைகளை உடையது வடக்கு: வாய்க்கால் ஒதுக்கிடம் கிழக்கு: வீதி மற்றும் ஒதுக்கிடம் தெற்கு: காணித்துண்டம் 59, மிகச்சரியாக, உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். இராஜசேகரன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998 திசெம்பர் 15 ஆந்தேதிய 4757ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் 59 மற்றும் மேற்கு: அணுகுகை வீதி, அத்துடன் பரப்பளவில் இது கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதன்மேலுள்ள எல்லாவற்றையும் சேர்த்து இரண்டு ஏக்கர்கள் மற்றும் பதினேழு தசம் எட்டு ஒன்று பேர்ச்சுக்களை (02ஏ. 00றூ. 17.81பே.) அல்லது 0.8548 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் கண்டி காணிப் பதிவகத்தில் P19/130 எனும் பதிவிலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டும் உள்ளது.

மேற்சொல்லப்பட்ட காணித்துண்டம் 01 ஆனது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றுசேர்க்கப்பட்ட காணித்துண்டம் 60 மற்றும் காணித்துண்டம் 61 என்பவற்றின் மீள் நில அளவையாகக் காணப்படுகின்றது.

1. மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் மற்றும் இல. கோனன்கொட பிரிவினுள்ளும் வருகின்ற பாத்தஹேவாஹெட்டயிலுள்ள ஹேவாவிஸ்ஸ கோரளேயில் கபடாகம் (பட்டியகம்) கிராமத்தில் அமைந்துள்ளதும், "நாரங்கீன்வத்த ஏக்கர் 200 லூல்கந்துர" எனவழைக்கப்பட்டு அறியப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். இராஜசேகரன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999.04.26 ஆந் தேதிய, மிகச் சரியாக 1998.11.15 தொடக்கம் 1998.12.15 வரைக்குட்பட்ட தேதிய, 4757 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்ட "காணித்துண்டம் 60" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் 60 பின்வரும் எல்லைகளை உடையது வடக்கு: காணித்துண்டம் 61 கிழக்கு: வீதி மற்றும் ஒதுக்கிடம் தெற்கு: காணித்துண்டம் 59 மற்றும் மேற்கு: அணுகுகை வீதி, அத்துடன் பரப்பளவில் இது கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதன் மேலுள்ள எல்லாவற்றையும் சேர்த்து ஒரு ஏக்கர் மற்றும் பதினெட்டு தசம் நான்கு ஏழு பேர்ச்சுக்களை (01ஏ). 00றூ. 18.47பே.) அல்லது 0.4516 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் கண்டி காணிப் பதிவகத்தில் P 8/54 எனும் பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டும் உள்ளது.
2. மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் மற்றும் இல.1040 கோனன்கொட கிராம அலுவலர் பிரிவினுள்ளும் வருகின்ற பாத்தஹேவாஹெட்டயிலுள்ள ஹேவாவிஸ்ஸ கோரளேயில் கபடாகம் கிராமத்தில் அமைந்துள்ளதும், "நாரங்கீன்வத்த ஏக்கர் 200 லூல்கந்துர" எனவழைக்கப்பட்டு அறியப்படுவதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். இராஜசேகரன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999.04.26 ஆந்தேதிய, மிகச் சரியாக 1998.11.15 தொடக்கம் 1998.12.15 வரைக்குட்பட்ட தேதிய, 4757 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட "காணித்துண்டம் 61" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் 61 பின்வரும் எல்லைகளை உடையது வடக்கு: வாய்க்கால் மற்றும் ஒதுக்கிடம் கிழக்கு: வீதி மற்றும் ஒதுக்கிடம் தெற்கு: காணித்துண்டம் 60 மற்றும் மேற்கு: அணுகுகை வீதி, அத்துடன் பரப்பளவில் இது கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதன்மேலுள்ள எல்லாவற்றையும் சேர்த்து மூன்று றூட்டுகள் மற்றும் முப்பத்தொன்பது தசம் மூன்று நான்கு பேர்ச்சுக்களை 00ஏ. 03றூ. 39.34பே.) அல்லது 0.4032 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் கண்டி காணிப் பதிவகத்தில் P 8/53 எனும் பதிவிலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டும் உள்ளது.

மேற்சொல்லப்பட்ட 4757 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட பாதை வழிகளுடன் சேர்த்து.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**

**கையொப்பம்**
**பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வடக்கு)**

**பதவி முத்திரை:**
**எஸ்.எல்.எம்.ஏ.எஸ். சமரதுங்க பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம்**
**கொழும்பு வடக்கு**

**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமை அலுவலகம்**
**இல.11, டியுக் வீதி**
**கொழும்பு 01**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

# வெற்றிடங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உதவி அத்தியட்சகர்கள் (Assistant Superintendents)**

(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1, 2 அல்லது 3)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம்/ பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் ஒரு இளமாணிப் பட்டம்

   மற்றும்

   SLSPC அல்லது JEDB பிராந்திய பெருந்தோட்ட நிறுவனமொன்றில் பயிலுநர் நடுகையாளராக (Creeper) 6 மாத கால பயிற்சி காலத்தை பின்பற்றியிருத்தல்

2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் / தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேயிலைப் பெருந்தோட்டத் துறையில் தேசிய தொழிற்றிறனில் 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   கூட்டுத்தாபனம், சபை, பிராந்திய பெருந்தோட்ட நிறுவனம், அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனத்தில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   SLSPC அல்லது JEDB பிராந்திய பெருந்தோட்ட நிறுவனமொன்றில் பயிலுநர் நடுகையாளராக (Creeper) 6 மாத கால பயிற்சி காலத்தை பின்பற்றியிருத்தல்

3. அரசாங்க நிறுவனம் / அரசு சார்ந்த அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் உதவி அத்தியட்சகராக 3 வருட காலத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேலதிக நன்மைகள்** - உள்ளக மற்றும் வெளியக மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழான வசதிகள்

ஊழியர் சேமலாப நிதியம் அல்லது இலங்கை தோட்டத்துறையாளர்களின் சேமலாபச் சங்கத்திற்கு உங்கள் சம்பளத்தின் 10% தொகையை பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உங்கள் சம்பளத்தின் 12% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.

மேற்பார்வை செய்வதற்கு ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது ஒரு கொடுப்பனவு மற்றும் எரிபொருள் ஒதுக்கீடு வழங்கப்படும்.

உள்ளவாரி மற்றும் வெளிவாரி தொழிலாளர் கொடுப்பனவு சகிதம் தளபாடமிடப்பட்ட ஒரு பங்களா வழங்கப்படும்.

**சம்பள அளவு** - முகாமைத்துவச் சேவையின் 02/2016ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமான சம்பள அளவு JM 1-1 - 2016 [42.600- l0 x 755- 18 x 1,135- 70,580] ரூபா மேற்படி பதவிக்கு உரித்தாகும்.

**வயது** - 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை** - நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட நியமனக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு**

- இயைபுடைய மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
- இயைபுடைய மேலதிக கல்வி தொழில்சார் தகைமைகள் - 30 புள்ளிகள்
- ஏனைய சாதனைகள் - 15 புள்ளிகள்
- நேர்முகத் தேர்வில் காட்டும் செயற்றிறன் - 25 புள்ளிகள்

100 புள்ளிகள்

**ஏனையவை** - இந்த வகுதியான அனைத்து ஆட்சேர்ப்புகளுக்கும் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இணக்கம் கண்டிப்பாக இருக்கும்.

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்** - விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் பிறப்பத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் சகல விபரங்களுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்கம் / கூட்டுத்தாபனம் / நியதிகள் சபை என்பவற்றில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களின் திணைக்களத் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

2023-02-17ஆம் திகதி (உதவி அத்தியட்சகர்) பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணபிக்கத் தேவையில்லை. மூலப்பிரமாணங்களை பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்** - 2023 ஏப்ரல் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,** **2023-04-03**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**

# மக்கள் வங்கி

## மீட்கப்படாத நகைகள் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் அம்பாறை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.12.2021ம் திகதிக்கு முன் அடகு வைக்கப்பட்டு 25.04.2023ம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| ஏலத்தில் விற்கும் திகதி | 26.04.2023, 27.04.2023 |
| ஏலம் விடப்படும் இடம் | பிராந்திய தலைமைக் காரியாலயம், அம்பாறை |
| கிளைகள் | அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், மஹாஓயா, உஹணை, காரைதீவு, திருக்கோவில், அட்டாளைச்சேனை, சாய்ந்தமருது மருதமுனை. |
| சேவை நிலையங்கள் | இறக்காமம், நவகம்புர, ஆலையடிவேம்பு, விளினியடி, பாணமை, பதியத்தலாவ, கொணாகொல்ல, மத்திய முகாம், ஒலுவில், பாலமுனை. |

மேற்குறிப்பிடப்பட்ட படி நடைபெறவுள்ள இவ் ஏலவிற்பனையை அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருப்பத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ, ஒத்தி வைக்கவோ, ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**அம்பாறை**

**தொலைபேசி இல: 063-2222516**

PEOPLE'S BANK

## பொது அறிவிப்பு

குளெடெக் (பிரைவேட்) லிமிடெட் எனும் நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் எண் சட்டத்தின் பிரிவு 9(2) இன் விதிமுறைகளுக்கு இணங்க தனது பெயரை ஆல்டர்நேட்டிவ் (பிரைவேட்) லிமிடெட் என 23 நவம்பர் 2022 முதல் மாற்றியமைத்துள்ளது என்பதை இதன் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தின் 8 வது பிரிவின் விதிகள்.

**முன்னாள் பெயர்:**
குளேடெக் (பிரைவேட்) லிமிடெட்

**நிறுவனத்தின் எண்ணிக்கை:**
PV 00221408

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:**
எண். 42/D, பராக்கிரமா இடம், சபுகஸ்தன்னா வீதி, கலகெடிஹேன.

**நிறுவனத்தின் புதிய பெயர்:**
ஆல்டர்நேட்டிவ் (பிரைவேட்) லிமிடெட்

**வாரியத்தின் உத்தரவின்படி**
ஏ ஜே பி பி கார்ப்பரேட் சர்வீசஸ் (தனியார்) லிமிடெட்,

**செயலாளர்கள்,**
ஆல்டர்நேட்டிவ் (பிரைவேட்) லிமிடெட்

Repeat Your ad For Better Offers

## பெறுகை அறிவித்தல்

**ஊவா மாகாண சபை**

### பிரதிப் பொது செயலாளர் பொறியியல் சேவை கேள்வி காலத்தை நீடித்தல்

2023.03.15ம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையின் (பக்கம் 10), தினமின பத்திரிகையின் (பக்கம் 16) தினகரன் பத்திரிகையில் (11) பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் இங்கு கீழ்க்காணும் கைத்தொழில்களில் கேள்வி காலத்தை கீழ்க்காணுமாறு திருத்துவதற்கு பிரதி பொதுச் செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலக பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| ஒப்பந்த இலக்கம் | கைத்தொழில் |
|---|---|
| DCS/ PSSP/D&B/2023/01/01 | வெல்லவாய ஆதார வைத்தியசாலையின் சாக்கடை அமைப்பை உருவாக்குதல் திட்டமிட்டு நிர்மாணித்தல் (Design and Build) Design and Build of Sewerage System for the Base Hospital wellawaya |
| DCS/ PSSP/D&B/2023/01/02 | சியம்பலாண்டுவ தளவைத்தியசாலையின் சாக்கடை அமைப்பை உருவாக்குதல் - திட்டமிடல் நிர்மாணித்தல் (Design and Build) Design and Build of Sewerage System for the Base Hospital Siyambalanduwa |

| விபரம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|
| கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் | 2023.04.25 பி.ப. 3.00 வரை |
| கேள்விப் பத்திரங்கள் திறத்தல் | 2023.04.26 பி.ப. 14.00 இற்கு |

மேற்படி கைத்தொழிலுடன் குறித்த கேள்வி செல்லுபடியாகும் காலம் 2023.09.26 வரை மற்றும் கேள்விப் பிணைமுறி செல்லுபடியாகும் காலம் 2023.10.26 வரை எனவும் திருத்தப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்ப பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்களில் எந்த மாற்றங்களும் இடம்பெறமாட்டாது எனவும், ஆரம்ப பெறுகை அறிவித்தலுக்காக 2023.03.23 (பக்கம் 21) ஆகிய டெயிலி நியூஸ் பத்திரிகையில் பிரசுரமான திருத்தம் மேற்படி கைத்தொழில்களும் பொருந்தும்.

**பிரதம பொதுச் செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்,**

**பிங்அராவ, பதுளை**
**தொ.பே/ பெக்ஸ் இலக்கம் - 055-2222218**
**ஈமெயில் - dcsengupc@gmail.com**
**திகதி: 2023.04.04**

## கொழும்பு மாநகர சபை

### விலைக்கோரல் / கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்வி தாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD24/2751/2023 | Application Software on IBM 1 server (AS400) கணனி முறைமையின் வழங்கல் மற்றும் பராமரிப்பிற்கான கேள்வி | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 5,750.00 | 150,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD24/1674/2023 | வலையமைப்பு பார்க் II, வாடிக்கையாளர் அச்சுப்பொறியின் வழங்கல் மற்றும் பராமரிப்பிற்கான கேள்வி | | ரூபா 5,750.00 | 150,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 3. | CPD12/1093/2022 | நிகர மானியிடல் மற்றும் மின்னல் பாதுகாப்பு சகிதம் Grid இணைக்கப்பட்ட சூரிய சக்தி முறைமையை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் | | ரூபா 5,750.00 | 200,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,**
  **இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,**
  **கொழும்பு 06.**
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
  **மாளிகாகந்த, கொழும்பு 10.**

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2023-04-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2023 ஏப்ரல் 26ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது/ இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும்திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.08.19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.09.23ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023 ஏப்ரல் 27ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2023 ஏப்ரல் 27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6442(MP) | Main Trolley Wire Ropes for 65T ZPMC STS Cranes at ECT | 64,000.00 | 1,000.00 | 04-05-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6416(MP) | Spare Parts for Kato CR – 100 Mobile Crane | 35,000.00 | 1,000.00 | 04-05-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6445(EL) | Spare Hoist Motor for 50 T ZPMC STS Cranes at JCT | 250,000.00 | 3,500.00 | 04-05-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6446(MP) | Spares for Grove AMZ 131XT Areal Work Platform | 30,000.00 | 1,000.00 | 09-05-2023 மு.ப. 10.00 மணி |
| CES/LP/23/PT/10/007 | 10 Nos. of Finger Scan Machine | 25,000.00 | 1,000.00 | 27-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/07/053 | Rain Suit ( Trouser and Jacket ) | 41,250.00 | 1,000.00 | 27-04-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/08/027 | 08 Nos. Television Screen | 28,000.00 | 1,000.00 | 27-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/10/053 | 25 Nos. of Motor Tyres 1100 X 20 16 PLY | 28,000.00 | 1,000.00 | 28-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/07/051 | 240 Nos. of Sealed Type Battery 12V 150 AMPH ( Semi – Maintenance ) | 234,000.00 | 3,500.00 | 28-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/10/051 | 05 Nos. Radiator Assemblies of Caterpillar Engines | 35,000.00 | 1,000.00 | 28-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/14/055 | Spare Parts for the UD Nissan Prime Movers | 35,000.00 | 1,000.00 | 28-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/12/052 | Mild Steel Plate LR Grade "A" 6000mm X 1500mm X 10mm – 10 Nos. | 100,000.00 | 3,500.00 | 02-05-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/16/056 | 38,000 Nos. Bar Soap (Local) 650 grams | 190,000.00 | 3,500.00 | 02-05-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/16/054 | 50 Nos. Motor Tyres 1000 X 20 16 Ply ( Cross Ply) | 37,000.00 | 1000.00 | 02-05-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/17/052 | 49,000 Nos. Carbolic Soap 100 grams | 65,000.00 | 1000.00 | 02-05-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஏப்ரல் 10ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# கடந்த தசாப்தத்தில் இலங்கை கால்பந்தில் முப்பதுக்கும் அதிகமான ஊழல் சம்பவங்கள்

## புதிய விசாரணை அறிக்கையில் அம்பலம்



இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் 2012 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற நிர்வாக மற்றும் நிதி விவகாரங்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் 30க்கும் அதிகமான ஊழல் சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதில் கால்பந்தை மேம்படுத்துவதற்கு கிடைக்கப்பெற்ற நிதியில் வெறும் இரண்டு வீதமே விளையாட்டுக்கும் வீரர்களுக்கும் செலவிடப்பட்டிருப்பதாக உயர் நீதிமன்ற நீதியரசர் குசலா சரோஜினி வீரவர்தன தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழுவின் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலேசிய சுற்றுப்பயணத்தில் மாத்திரம் சுமார் 100 மில்லியன் ரூபாய் வரை விரயமாக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழல் குற்றம் நிரூபிக்கப்பட்டால் இலங்கை கால்பந்து நிர்வாகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கப்போவதில்லை என்று விளையாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

'முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் என கண்டறியப்பட்டவர்கள் மற்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்பதோடு எதிர்காலத்தில் அவர்கள் கால்பந்து நிர்வாகத்தில் பதவிகளை வகிப்பதற்கும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்' என்று விளையாட்டு அமைச்சு கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

இதன்போது ஒரு மாத காலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட்ட 249 பக்கங்களை கொண்ட இந்த அறிக்கை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

முழுமையான அறிக்கையை தாம் தொடர்ந்து ஆய்வு செய்து வருவதாக குறிப்பிட்ட விளையாட்டுத் துறை அமைச்சர், இது ஜனாதிபதி பிரதமர் மற்றும் பாராளுமன்றத்திற்கு விரைவில் கையளிக்கப்படும் என்றார்.

முந்தைய கால்பந்து நிர்வாகம் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தை தவறாக வழிநடத்தி இலங்கை கால்பந்து சம்மேளனம் மீதான சர்வதேச தடைக்கு வழிவகுத்ததாகவும் அமைச்சர் ரணசிங்க குற்றம்சாட்டினார்.

இந்த அறிக்கையை சர்வதேச கால்பந்து சம்மேளத்திற்கு சமர்ப்பித்து இலங்கை கால்பந்து நிர்வாகத்தின் உண்மையான நிலையை தெரியப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகக் கிண்ண தகுதிகாண்:

# இலங்கையுடன் ஆடும் எட்டு அணிகள் உறுதி



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் பங்கேற்பதற்கு இலங்கையுடன் சேர்த்து ஒன்பது அணிகள் இதுவரை தகுதி பெற்றுள்ளன.

இதில் 2019 தொடக்கம் 2023 வரை நடத்தப்பட்ட உலகக் கிண்ண தகுதிக்கான இரு லீக் ஒருநாள் தொடர்கள் மூலம் இணை அங்கத்துவ நாடுகளான அமெரிக்கா, ஐக்கிய அரபு இராச்சியம், ஸ்கொட்லாந்து, ஓமான் மற்றும் நேபாள அணிகள் இந்தத் தகுதிகாண் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன.

இந்த நாடுகளுடன் ஒருநாள் சுப்பர் லீக்கில் கடைசி ஐந்து இடங்களை பிடித்திருக்கும் அணிகளில் நெதர்லாந்து, சிம்பாப்வே, மேற்கிந்திய தீவுகள் மற்றும் இலங்கை அணிகள் இந்த தகுதிகாண் சுற்றில் ஆடவுள்ளன.

இதில் உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெறுவதில் தென்னாபிரிக்கா மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையே தொடர்ந்து போட்டி நிலவும் நிலையில் நேரடித் தகுதி பெறாத அணி தகுதிகாண் சுற்றில் பத்தாவது அணியாக உறுதி செய்யப்படும்.

சுப்பர் லீக் புள்ளிப்பட்டியலில் தென்னாபிரிக்கா தற்போது எட்டாவது இடத்தில் இருப்பதோடு வரும் மே மாதம் அயர்லாந்துக்கு பங்களாதேஷ் அணியுடன் மூன்று ஒருநாள் போட்டிகள் எஞ்சியுள்ளன.

இதில் அயர்லாந்து மூன்று போட்டிகளிலும் வென்றால் தென்னாபிரிக்காவுடன் சமமான புள்ளிகளை பகிர்ந்துகொள்ளும் என்பதோடு நிகர ஓட்ட விகிதம் அடிப்படையிலேயே நேரடித் தகுதி பெறும் அணி தீர்மானிக்கப்படும்.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள் வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் சிம்பாப்வேயில் நடைபெறவிருப்பதோடு இதில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும்.

# 50 இலட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தமானார் தசுன்



இலங்கை ஒருநாள் மற்றும் டி20 அணித் தலைவர் தசுன் ஷானக்க இந்திய பிரீமியர் லீக்கில் தனது அடிப்படை விலையான இந்திய நாணயப்படி 50 இலட்சம் ரூபாவுக்கு குஜராத் டைடன்ஸ் அணியில் ஒப்பந்தமாகியுள்ளார்.

டைடன்ஸ் அணியின் கென் வில்லியம்சன் முழங்கால் காயத்திற்கு உள்ளாகி இம்முறை ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகியதை அடுத்தே அவரது இடத்திற்கு ஷானக்க அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஐ.பி.எல் வீரர்கள் ஏலத்தில் பல முறை பங்கேற்றபோதும் எந்த அணியாலும் வாங்கப்படாத நிலையில் ஷானக்க ஐ.பி.எல் தொடரில் ஒப்பந்தமாவது இது முதல் முறையாகும்.

தசுன் ஷானக்க அண்மையில் நடந்த இந்திய சுற்றுப் பயணத்தில் சிறப்பாக செயற்பட்டதோடு அங்கு டி20 தொடரில் 187 ஓட்ட வேகத்துடன் மொத்தம் 124 ஓட்டங்களை பெற்றார். இதே தொடரில் அவர் தனது இரண்டாவது சர்வதேச சதத்தையும் பெற்றார்.

# இரண்டாவது டி20இல் இலங்கையை இலகுவாக வீழ்த்தியது நியூசிலாந்து



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் 9 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டிய நியூசிலாந்து அணி இரு அணிக்கும் இடையிலான தொடரை 1–1 என சமநிலைக்குக் கொண்டுவந்தது.

டுன்டினில் நேற்று (05) நடைபெற்ற இரண்டாவது டி20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி அதிரடியாக ஆட முயன்று முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. குசல் பெரேரா மற்றும் தனஞ்சய டி சில்வா மூன்றாவது விக்கெட்டுக்கு 62 ஓட்டங்களை பகிர்ந்துகொண்ட நிலையில் எஞ்சிய ஏழு விக்கெட்டுகளும் 50 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டன.

தனஞ்சய டி சில்வா அதிகபட்சம் 26 பந்துகளில் 37 ஓட்டங்களை பெற்றதோடு குசல் பெரேரா 32 பந்துகளில் 35 ஓட்டங்களை குவித்தார். இதன்போது அடம் மில்னே 5 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதையும் வென்றார்.

இந்நிலையில் பதிலொடுத்தாட வந்த நியூசிலாந்து அணி எந்த நெருக்கடியும் இன்றி பௌண்டரிகள் மற்றும் சிக்சர்களை விளாசி வெற்றி இலக்கை நெருங்கியது. ஆரம்ப வீரர் சாட் பவுஸ் 25 பந்துகளுக்கு 31 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தபோதும் மறுமுனையில் இருந்த டிம் செய்பேர்ட் நியூசிலாந்தின் வெற்றியை உறுதி செய்தார்.

43 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 3 பௌண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 79 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் நியூசிலாந்து அணி 14.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 146 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் இறுதி டி20 போட்டி வரும் ஏப்ரல் 08ஆம் திகதி குவின்ஸ்டவுனில் நடைபெறவுள்ளது.

# டிரம்ப் மீது நீதிமன்றத்தில் 34 குற்றச்சாட்டுகள் பதிவு



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீது 34 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை 76 வயது டிரம்ப் மறுத்துள்ளார்.

உறவு இருந்ததாகக் கூறப்படும் தகவலை மறைப்பதற்காக ஆபாசப் பட நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸுக்குப் பணம் கொடுத்ததன் தொடர்பில் டிரம்ப் மீது குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்பட்டன.

அவர் வர்த்தகப் பதிவுகளில் மோசடி செய்ததாகவும் அவற்றில் சிலவற்றை வரி தொடர்பில் தவறாகச் சித்தரித்ததாகவும் குற்றச்சாட்டு கூறுகிறது.

நியூயோர்க் நகரில் அவை கடுமையான குற்றச்சாட்டுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகும் என்று நீதிபதி கூறினார். 2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான போட்டிகளும் அப்போதுதான் ஆரம்பமாகவுள்ளது. நியூயோர்க் நகர நீதிமன்றத்திற்கு வந்திருந்த டிரம்ப் குற்றச்சாட்டுகளை அமைதியாகக் கேட்டார். அவர் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மறுத்த பின்பு எந்த நிபந்தனைகளும் இல்லாமல் விடுவிக்கப்பட்டார்.

டிரம்பின் வழக்கறிஞர்கள் அந்தக் குற்றச்சாட்டுகள் ஏமாற்றம் தருவதாகக் கூறினர். கடுமையான போராட்டத்துக்குத் தயார் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

புற்றுநோய் குற்றச்சாட்டு வழக்கு:

# 8.9 பில்லியன் டொலர் வழங்க முன்வந்தது பவுடர் நிறுவனம்



அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன்சன் அன்ட் ஜோன்சன் மருந்தாக்க நிறுவனம் அஸ்பெஸ்டஸ் என்னும் தாதுப்பொருள் கொண்ட அதன் பவுடர் பொருட்களால் புற்றுநோய் ஏற்பட்டதாக வழக்குத் தொடுத்தவர்களுக்கு 8.9 பில்லியன் டொலர் வழங்க முன்வந்துள்ளது.

பல ஆண்டுகளாக நடந்துவரும் அந்த வழக்குகளுக்குத் தீர்வுகாண அந்தத் தொகையை நிறுவனம் முன்மொழிந்துள்ளது. அதற்கு நீதிமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

அஸ்பெஸ்டஸ் தாதுப்பொருள் கலக்கப்பட்ட ஜோன்சன் அன்ட் ஜோன்சன் டால்க் பவுடரைப் பயன்படுத்தியவர்களுக்குக் கருப்பை புற்றுநோய் ஏற்பட்டதாகக் கூறும் பல்லாயிரம் வழக்குகளை நிறுவனம் எதிர்நோக்கியது. ஆனால் அவற்றுக்குப் போதிய அறிவியல் ஆதாரம் இல்லை என்று நிறுவன வழக்காடலின் துணைத் தலைவர் எரிக் ஹாஸ் குறிப்பிட்டார். நிறுவனம் எந்தத் தவறையும் ஒப்புக்கொள்ளவில்லை. எனினும் குழந்தைகளுக்கான டால்க் பவுடரின் விற்பனையை அது 2020ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவிலும் கனடாவிலும் நிறுத்தியது.

## சர்வதேச செய்திகள்

# அல் அக்ஸா பள்ளிவாசலுக்குள் இஸ்ரேலிய பொலிஸார் வழிபாட்டாளர் மீது தாக்குதல்

## பதற்றம் அதிகரிப்பு: காசாவில் இருந்து ரொக்கெட் வீச்சு



ஜெரூசலம் அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் இஸ்ரேலிய பொலிஸார் வழிபாட்டாளர்கள் மீது நடத்திய தாக்குதலில் 14 பேர் காயமடைந்திருப்பதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

நேற்று (05) சூரியோதயத்திற்கு முன்னரே இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றிருப்பதோடு, கலகத்திற்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இஸ்ரேலிய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது சுமார் 400 பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டு இஸ்ரேலிய தடுப்புக் காவலில் தொடர்ந்து இருப்பதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் பலர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் குறிப்பிட்டுள்ளபோதும் எத்தனை பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கவில்லை. அல் அக்ஸா வளாகத்திற்குள் மருத்துவர்கள் செல்வதையும் இஸ்ரேலிய படையினர் தடுத்ததாக அது குறிப்பிட்டுள்ளது.

'நான் இருக்கையில் அமர்ந்து (குர்ஆன்) ஓதிக்கொண்டிருந்தேன்' என்று பள்ளிவாசலுக்கு வெளியில் முச்சுவிட திணறியபடி இருந்த வயதான பெண் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். 'அவர்கள் அதிர்ச்சியூட்டும் கையெறி குண்டுகளை வீசினார்கள். ஒன்று எனது நெஞ்சைத் தாக்கியது' என்று குறிப்பிட்ட அவர் அழ ஆரம்பித்தார். முகமூடி அணிந்த போராட்டக்காரர்கள் தீப்பந்தங்கள், கம்புகள் மற்றும் கற்களுடன் பள்ளிவாசலுக்குள் மூடிக்கொண்டதை அடுத்து தாம் வலுக்கட்டாயமாக அந்த வளாகத்திற்குள் நுழைந்ததாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

'பொலிஸார் உள்ளே நுழைந்தபோது பெரும் எண்ணிக்கையான போராட்டக்காரர்கள் பள்ளிவாசலுக்குள் இருந்து கற்களை எறிந்ததோடு தீப்பந்தங்களையும் எறிந்ததாக' அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதோடு இதில் பொலிஸார் ஒருவரின் காலில் காயம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெரூசலத்தில் கடந்த பல மாதங்களாக பதற்ற சூழல் நீடித்து வருகிறது. முஸ்லிம்களின் முக்கிய மாதமான ரமழான் மற்றும் யூதர்களின் பாஸ்கா நிகழ்வை ஒட்டி வன்முறைகள் அதிகரிக்கும் என அச்சம் நிலவி வருகிறது. பலஸ்தீன தரப்புகள் வழிபாட்டாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டிருப்பதோடு இது ஒரு குற்றச்செயல் என்றும் வர்ணித்துள்ளன.

'புனிதத் தலங்களில் சிகப்புக் கோட்டை தாண்டும் ஆக்கிரமிப்பு தொடர்பில் நாம் எச்சரிக்கிறோம். அது பாரிய வெடிப்பு ஒன்றுக்கு இட்டுச் செல்லும்' என்று பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பேச்சாளர் நபில் அபூ ருதைனி தெரிவித்துள்ளார். ஜெரூசலத்தின் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் புனிதத் தலங்களின் காவலராக உள்ள ஜோர்தான், இந்த வளாகத்தில் இஸ்ரேலின் அத்துமீறிய ஊடுருவலை கண்டித்துள்ளது.

அல் அக்ஸா வழிபாட்டாளர்கள் மீதான இஸ்ரேலின் அப்பட்டமான தாக்குதலை உடன் நிறுத்தும்படி எகிப்து வெளியுறவு அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது குறைந்தது ஒன்பது ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதில் ஐந்து ரொக்கெட் குண்டுகள் இடைமறிக்கப்பட்டதாகவும் நான்கு திறந்த வெளிப்பகுதிகளில் விழுந்ததாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இதற்கு பதில் நடவடிக்கையாக காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பின் ஆயுத உற்பத்தித் தளங்கள் என சந்தேகிக்கப்படும் இரு இடங்கள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியது. எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக காசா வீதிகளில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் டயர்களை எரித்து எதிர்ப்பை வெளியிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. “அல் அக்ஸா பள்ளிவாசலை பாதுகாப்போம் என்று நாம் உறுதி அளிக்கிறோம்” என்று அவர்கள் கோஷம் எழுப்பினர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.